விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது நான்கு

Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 தை 15 ஞாயிற்றுக்கிழமை (29.01.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 041

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்ட்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# அதிகாரப் பகிர்வை இலங்கை அரசு வழங்க இந்தியா அழுத்தம் கொடுக்க வேண்டும்!

## நேரு பல்கலைக்கழக பேராசிரியர் ஆலோசனை



இலங்கையின் இனப்பிரச்சினைக்கு 13ஆவது திருத்தச் சட்டமூலத்தின் ஊடாக அதிகாரப் பகிர்வை வழங்குவதற்கான அழுத்தங்களை இலங்கை அரசாங்கத்திற்கு ஏற்படுத்துவதற்கு இந்தியா பங்களிப்பு வழங்க வேண்டிய தேவையுள்ளதாக ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகத்தின் சர்வதேச கற்கைகளுக்கான கல்லூரியின் பேராசிரியர் அனுராதா எம்.செனோய் தெரிவித்துள்ளார். (24ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி அழைத்தார் முன்னாள் நீதியரசர் மறுத்தார்



முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என். சில்வாவுக்கு எதிராக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் தெரிவிக்கப்பட்ட முறைப்பாடுகள் குறித்து விசாரிக்கும் குழுவின் தலைவராகப் பணியாற்றுமாறு ஜனாதிபதி செயலகத்தினால் விடுக்கப்பட்ட அழைப்பை உயர் நீதிமன்றத்தின் முன்னாள் நீதியரசரான சி.வி.விக்னேஸ்வரன் (02ஆம் பக்கம் பார்க்க)

## சவேந்திரவை பான்கீ மூன் நியமிக்கவில்லை

ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கையின் பிரதி நிரந்தர வதிவிடப் பிரதிநிதி மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவை ஐ.நா அமைதி காக்கும் படையின் உயர் பதவிக்கு பான் கீ மூன் நியமிக்கவில்லை என அவரின் பேச்சாளர் மார்ட்டின் நெஸர்க்கி தெரிவித்துள்ளார்.

அதேவேளை ஐ.நா அமைதி காக்கும் படையின் ஆசிய பசுபிக் குழுவில் அங்கம் வகிக்கும் நாடுகளே மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவை அப்பதவிக்கு நியமித்ததாக மார்ட்டின் நெஸர்க்கி கூறியுள்ளார்.

இதேவேளை இவரது நியமனம் சர்வதேச ரீதியில் கடும் விமர்சனங்களை ஏற்படுத்தியுள்ளது. (ந)

## நயினைக்கு யானை வரவழைப்பு

இன்று நடைபெறும் நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய இராஜகோபுர கும்பாபிஷேகத்தை முன்னிட்டு கண்டியில் இருந்து யானை ஒன்று வரவழைக்கப்பட்டுள்ளது.

நயினாதீவு விகாராதிபதியின் ஏற்பாட்டில் நயினாதீவுக்கு யானை கொண்டு வரப்பட்டுள்ளது.

இராஜகோபுர கலச அபிஷேகம் முடிந்ததும் யானை இராஜகோபுர திருக் கதவை திறந்துவைக்கும் அதே வேளை யானை மற்றும் குதிரையில் கலசாபிஷேக கும்பங்கள் எடுத்துவரப்படுவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.



## 13-வது திருத்த சட்டமூலம் நாட்டிற்குப் பேராபத்து

### அமைச்சர் சம்பிக்க எச்சரிக்கை

பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதால் நாட்டிற்கு பேராபத்து விளையும். அத்துடன் காவற்றுறை மற்றும் காணி அதிகாரங்களை மாகாண சபை களுக்கு வழங்குவதை ஜாதிக ஹெல உறுமய ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாதென அக் கட்சி தெரிவித்துள்ளது.

இந்தியாவும் அமெரிக்காவும் கூறுவதற்காக 13ஆவது திருத்தச் சட்டத்திற்கு அப்பால் சென்று அரசியல் தீர்வுத் திட்டத்தை முன்வைக்க இயலாது. இவ் விடயத்தில் அரசாங்கமோ கூட்டமைப்போ தன்னிச்சையாக செயற்பட முடியாதென ஹெல உறுமயவின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான சம்பிக்க ரணவக்க தெரிவித்திருக்கிறார்.

மாகாண சபைகளுக்கு மேலதிகமான அதிகாரங்களை வழங்குவது மிகவும் ஆழமாக சிந்திக்கப்பட வேண்டிய ஒரு விடயமாகும். மாகாண சபைகளுக்கு எல்லை மீறிய அதிகாரங்கள் வழங்குவதை அனுமதிக்க முடியாது எனக் குறிப்பிட்டுள்ள ரணவக்க,

காணி, பொலிஸ் அதிகாரங்கள் வழங்கும்13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதால் நாடு பேராபத்தை சந்திக்கும் என எச்சரித்துள்ளார்.அத்துடன் மாகாண சபைகளுக்கு மேலதிக அதிகாரங்களை வழங்கும் தீர்வுத் திட்டத்திற்கு ஜாதிக ஹெல உறுமய கொள்கை ரீதியாக எதிர்ப்பு தெரிவித்து வருகிறது. இந்தியா மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகள் கூறுகின்றன என்பதற்காக அவற்றை (02ஆம் பக்கம் பார்க்க)

## மாணவர் போராட்டம்; மடங்கியது அரசு கிழக்கில் உபவேந்தரின் நியமனம் ரத்து

(மட்டக்களப்பு)

கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்களின் ஆர்ப்பாட்டத்தையடுத்து அப்பல்கலைக்கழகத்திற்கு புதிதாக நியமிக்கப்பட்ட உபவேந்தர் பேராசிரியர் நிமால் ரஞ்சித் அத்தநாயக்கவின் நிய மனத்தை இரத்துச் செய்வதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.


கிழக்கு பல்கலைக்கழகத்துக்கு தற்போது நியமிக்கப்பட்டுள்ள பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த உபவேந்தரின் நியமனத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து பல்கலைக்கழக மாணவர்கள் விரிவுரைகளை பகிஷ்கரித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

அத்துடன் கிழக்கு பல்கலைக்கழகத்துக்கு உடனடியாக நிரந்தரமான தமிழ் உபவேந்தரை நியமிக்குமாறும் பல்கலைக்கழக மாணவர்கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதனையடுத்து உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்கவுடன் தமிழ் அரசியல்வாதிகள் மேற்கொண்ட பேச்சுவார்த்தையின் பலனாக தமிழர் ஒருவரை உபவேந்தராக நியமிப்பதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-11)

## ஐ.நா.மனித உரிமைகள் பேரவை தொடரில் சம்பந்தன் பங்கேற்பு

### தமிழர்கள் திரண்டு பேரணி நடத்தவும் ஏற்பாடு



ஜெனிவாவில் ஆரம்பமாகவுள்ள ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனும் பங்கேற்கவுள்ளதாக ஆங்கில ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது. இந்தக் கூட்டத்தொடரில் இலங்கையிலிருந்து பல அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளும் பங்கேற்கவுள்ளதாகவும் அந்த ஊடகம் குறிப்பிட்டுள்ளது.

பல்வேறு நாடுகளின் தலைவர்கள் அமைச்சர்கள் மற்றும் தூதுவர்கள் இந்தக் கூட்டத் தொடரில் பங்கேற்கவுள்ளனர்.

இதேவேளை மனிதவுரிமைகள் (24ஆம் பக்கம் பார்க்க)

## தமிழருக்கு உதவ அரசியல் அமைப்பு ஜே.வி.பி.கிளர்ச்சிக் குழு அறிவிப்பு

வடக்கு கிழக்கில் வாழும் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் அழுத்தங்களை குறைக்கும் நோக்கில், விரிவான அரசியல் அமைப்பொன்றை விரைவில் ஸ்தாபிக்க உள்ளதாக ஜே.வி.பி யின் கிளர்ச்சி குழுவான மக்கள் போராட்ட அமைப்பு தெரிவித்துள்ளது.

யுத்தம் முடிவடைந்து இரண்டரை வருடங்கள் கழித்துள்ள போதிலும் வடக்கு கிழக்கில் இருந்த இராணுவம் விலகிக் கொள்ளப்படவில்லை என சுட்டிக்காட்டியுள்ள அந்த அமைப்பு, வடக்கு கிழக்கில் இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்த இந்த மாகாணங்களில் இருக்கும் இராணுவ முகாம்கள் குறைக்கப்பட்டு சிவில் நிர்வாகம் ஏற்படுத்தப்பட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளது.

அரசாங்கம் உடனடியாக இந்த நடவடிக்கையை மேற்கொள்ளவில்லை என்றால் தமிழ் மக்களுக்கு சம உரிமைகளை பெற்றுக் கொடுப்பதற்காக தமது அமைப்பு விரைவில் அரசியல் அமைப்பொன்றை ஆரம்பிக்கும் என மக்கள் போராட்ட அமைப்பின் செயற்பாட்டாளரான மேல் மாகாண சபை உறுப்பினர் வருண ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (ந-11)

## -ஈழத் தமிழரின் அவலம் பாரீரோ- இலண்டனில் நடை பயணம் ஆரம்பம்

ஈழத் தமிழர் விடுதலைப் போராட்டத்தை முன்னிறுத்தி சர்வதேசத்தை நோக்கிய மூன்று கோரிக்கைகளுடன் லண்டனில் இருந்து பாரிஸ் வழியே ஜெனிவா செல்லும் நடை பயணம் நேற்று ஆரம்பமாகியது.

லண்டனில் இருந்து நேற்றுக் காலை ஐவருடன் ஆரம்பமான இந் நடைப்பயணம் பிரான்ஸை அடைந்ததும் அங்கிருந்து மேலும் இருவர் இதில் இணைந்து கொள்வர்.

ஈழத் தமிழர்களுக்கு அநீதி இழைத்தவர்களை சர்வதேச சமூகம் கண்டிக்க வேண்டும்.

தமிழர்கள் மீது இலங்கையில் நடக்கும் அடக்குமுறையை உடன் நிறுத்த வேண்டும். உள்ளிட்ட மூன்று கோரிக்கைகளுடன் நேற்று ஆரம்பித்த இந் நடைப்பயணம் அடுத்த மாதம் 27 ஆம் திகதி ஜெனிவாவில் ஐ.நா மனித உரிமை சபையில் இடம்பெறவுள்ள நீதிக்காய் ஒன்றுபடுவோம் மக்கள் எழுச்சி நிகழ்வில் நிறைவடையும். (ந)

காட்சி அறை திறப்பு விழாவும் அறிமுக விழாவும்

*Opening ceremony of the*
**New Arokya Product**
*Show Room*
*Jaffna*

திகதி: 29.01.2012 (ஞாயிற்றுக் கிழமை)
நேரம்: மாலை 4.00 மணி
இடம்: Nation Popular Travels & Tours
#82, Brown Road Jaffna.

கலந்துகொள்ளும் சிறப்பு விருந்தினர்கள்.

Shri. V.Mahalingam
Consul general
Consulate General Of India

Dr.Mrs.S.Thurairatnam
Provincial Director
Provincial Dept. Of indigenous medicine, Northern Province.

Mr. B.Kandepan
Channel Head Director Shakthi FM.

Dr.Mrs.K.paramasivam
principal
Lanka Siddha Ayurvedic Medical College

Dr.srivikneswara
presjdent of north ceylon indigenous medicine

Dr.jeyalan
secratory of north ceylon indigenous medicine

Dr.Ms.N.Nagalingam
Chief consultant
nap manufactory board

வாடிக்கையாளர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

CNNP GROUP
Hot Line: 0214 920 920

## 13-வது...

நிறைவேற்ற முடியாது.

உதாரணமாக சூழலுக்கான விசேட சட்டமூலம் 1988ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்டாலும் அதனை 1991ஆம் ஆண்டே நடை முறைப் படுத்த முடிந்தது.

அரசியல்தீர்வுவிடயத்தில்ஏனைய நாடுகளின் விருப்பத்திற்கேற்ப செயற்பட முடியாது.

ஜே. ஆர். -ராஜீவ் ஒப்பந்தம், ரணில்–பிரபாகரன் ஒப்பந்தம், பீரிஸ் -பாலசிங்கம் ஒப்பந்தம் போன்ற வைகளால் நாட்டுக்கு தேவையற்ற பிரச்சினைகளே வந்தது. இந் நிலையை மீண்டும் ஏற்படுத்திக்கொள்ளக் கூடாது.

தேசியப் பிரச்சினைக்கான தீர்வில் ஏனைய கட்சிகளினதும் அமைப்புக்களினதும் ஆதரவு பெற்றுக் கொள்ள வேண்டுமே தவிர அரசும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தன்னிச்சையாக செயல்பட முடியாதெனவும் அவர் குறிப்பிட்டார். (ந)

வர்த்தகப் பெருமக்களே
வியாபாரத்தை பதிவு செய்தல்
BUSINESS REGISTRATION
பெறுமதிமிக்க உங்கள் வியாபார நிறுவனங்களை இலகுவாகப் பதிவு செய்து அதற்குரிய கௌரவத்தையும் உத்தரவாதத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள்.
VTL Management Services (Pvt) Ltd
No. 01, Deanston House,
Deanston Place, Colombo 03.
T.P. 072-9994777/011-7902938/
011-4343339

## ஜனாதிபதி...

ஏற்றுக் கொள்ள மறுத்துள்ளார்.

இது தொடர்பில் தனக்கு கடிதம் அனுப்பிய ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்கவுக்கு பதிலை எழுதிய நீதியரசர் அந்த விவகாரத்தில் தனது நிலைப்பாட்டை விளக்கியதுடன் அத்தகைய விசேட குழுவொன்றை நியமிப்பதற்கு முன்னெடுக்கப்படக்கூடிய நடவடிக்கைகள் நீதிச்சேவை ஆணைக் குழுவின் பணிகளிலும் நீதித்துறையின் சுதந்திரத்திலும் தலையிடுவதாக அமையுமென்று சுட்டிக் காட்டியதாகவும் தெரியவருகிறது. (ந–11)

ஆண்மைக்குறைவா? குழந்தையின்மையா?
உயிரணுக்கள் உற்பத்தியில் 100% சாதனை

23 ஆயுர்வேத மருத்துவர்களின் ஆராய்ச்சியின் சாதனைகள்



எயிட்ஸ் நோய் முழுமையாக குணமாகும் அதிசயம்!
பெண்களுக்கான மாதப்பிரச்சனை,
கருமுட்டை உற்பத்தியின்மை,
வளர்ச்சியின்மையால் பாதிப்பா?
தாம்பத்தியக் குறைபாடா?
கவலை வேண்டாம்.



தூக்கத்தில் சக்தி வெளியாதல், விரைவில் வெளியாதல், தன்னால் முடியாமல் என்ற பயமா? திருமணத்துக்கு தயாராகும் வாலிபர்களே இந்தப் பயத்திலிருந்து விடுபட்டு 45 நாட்களில் முழு ஆண்மையும் பெற்று முழுமயான வளர்ச்சியில் நீண்ட நேரம் இன்பம் பெறுவது உறுதி. எந்த வயதினராலும் சரி எந்த நிலையில் பாதிக்கப்பட்டிருந்தாலும் சரி பலன் பெறுவது உறுதி.

பெண்களுக்கு ஏற்படும் குழந்தையின்மை மற்றும் சகல பிரச்சனைகளிற்கும் டொக்டர்.டி.தேவி அவர்களை தொலைபேசியில் தொடர்பு கொள்ளலாம். (பெண்கள் மட்டும்)
செல்: 0091 9842457673

100% உறுதி மேலும் சிறப்புச் சிகிச்சைக்கு அரசு பதிவு பெற்ற சித்த மருத்துவர்
Dr.G.ஜெகதீஸ்குமார் அவர்களை தொடர்பு கொள்ளவும்.
யாழ் வருகை 29.012012 காலை 9மணி தொடக்கம் மாலை 5மணி வரை டாக்டரை நேரடியாக சந்திக்கலாம்.

Website: www. Sexualproblem.in
Email: sridevisiddha@gmail.com
செல் : 0091 9600336009



இலங்கை செல்: 0754 518 639

ஸ்ரீ தேவி சித்த ஆயுர்வேத வைத்தியசாலை
இராமாபுரம், சென்னை-89, இந்தியா.
APGraphic

"கற்பவை கற்க; கற்பவை, கசடறக் கற்க."
YAALH ENGLISH ACADEMY
வழங்கும்
EASY ENGLISH
♦ உத்தியோகத்தர்க்கு
♦ A/L படித்தவர்க்கு
♦ உயர்கல்வி மாணவர்க்கு
♦ பாடசாலை மாணவர்க்கு
♦ தாய்மார்க்கு: உங்கள் மூலம் உங்கள் பிள்ளைகளுக்கும் பெரும் பயன்.
ஆசிரியர்: சண்முகம் முத்துலிங்கம்
எவருக்கும் - முதலிரு வகுப்புகள்: இலவசம்
முழுவிபரங்கள் பெற + பெயர் பதிவு செய்ய: 077 3212711
வகுப்பிட அனுசரணை
புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி: யாழ். நகர்
(7378)

## மரண அறிவித்தல்

### நவரத்தினம் பரமநாதன் (சமாதான நீதவான்)

**(உரிமையாளர் - "நிரஞ்சனாஸ்" சினிமாஸ், கட்டிடப் பொருள் விற்பனை நிலையம் சங்கானை, யாழ்/நாதன்ஸ் சினிமாஸ் முன்னாள் உரிமையாளர்)**



சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும் சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட நவரத்தினம் பரமநாதன் கடந்த வெள்ளிக்கிழமை (27.01.2012) காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நவரத்தினம்-சரஸ்வதி தம்பதிகளின் பாசமிகு மகனும் காலஞ்சென்ற கார்த்திகேசு மற்றும் வள்ளியம்மாள் (சித்தன்கேணி), காலஞ்சென்றவர்களான ஆறுமுகம், சின்னம்மா (கைதடி மேற்கு) தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற யசோதரா மற்றும் பிரபாலினி ஆகியோரின் பாசமிகு கணவரும், சிவராஜேஸ்வரி, காலஞ்சென்றவர்களான இலங்கைநாதன், இரத்தினேஸ்வரி மற்றும் சிவனேஸ்வரி, சற்குணநாதன், காலஞ்சென்ற ஞானேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற சிவராஜேஸ்வரன் மற்றும் சிவானந்தன், நாகபூசணி, நவரத்தினம் (நீதிமன்ற ஏலவிற்பனையாளர்), காலஞ்சென்ற விஜயகுமாரி மற்றும் கணேசலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (29.01.2012) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

"நிரஞ்சனாஸ்"
பொன்னாலை வீதி, சங்கானை.

தகவல்: குடும்பத்தினர்

(C-5706)

## மரண அறிவித்தல்



### திருமதி கந்தையா செல்லம்மா

நீர்வேலியைப் பிறப்பிடமாகவும், மாவிட்டபுரத்தை வசிப்பிடமாகவும், தற்போது சங்கரத்தையில் வசித்தவருமாகிய கந்தையா செல்லம்மா நேற்று (28.01.2012) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையாவின் அன்பு மனைவியும் நவரத்தினம், ரவீந்திரராணி, விமலராணி, விஜயராணி, ஜெயரத்தினம், வசந்தமாலா ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (29.01.2012) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1 மணியளவில் சங்கரத்தை இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சங்கரத்தை, குளத்தடி.
தொலைபேசி: 021 7912869

தகவல்: மகன் நவரத்தினம் (ரத்தினம்)

(7338)

# இலவச சீருடை விநியோகம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கோட்டங்களுக்குள் அமைந்துள்ள பாடசாலைக்கான இலவச சீருடை விநியோகம் நாளை திங்கட்கிழமையும் கோப்பாய் கோட்டத்திற்குள் அமைந்துள்ள பாடசாலைகளுக்குரிய இலவச சீருடை விநியோகம் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ளதென யாழ்.வலயக்கல்வி அலுவலக கணக்காளர் ஆ.கிரிதரன் தெரிவித்துள்ளார்.

இவ் இலவச சீருடைகளை பெறவரும் போது சீருடைக்கான குறியீட்டுக்கமைய மாணவர் விபரங்களையும் அதிபர் பதவி முத்திரையினையும் கொண்டு வருமாறு அவர் கேட்டுள்ளார். (அ-2)

# பஞ்ச கர்ம கற்கை நெறி

(யாழ்ப்பாணம்)

வடமாகாண சுதேச மருத்துவத் திணைக்களத்தினால் பஞ்ச கர்மக் கற்கைநெறி சுவாசப் பயிற்சி நிறுவனத்தினால் நடத்தப்பட்டு வருவதாக டாக்டர் திருமதி சி.துரைரட்ணம் அறிவித்துள்ளார்.

இக்கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க விரும்புவர்கள் டாக்டர் சந்திரா அபயசேகரவுடன் 0776037435,011278149 என்னும் தொலைபேசி எண்ணுடன் தொடர்பினை ஏற்படுத்தி மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ள முடியும்.

விண்ணப்பப்பத்திர பிரதியொன்றினை மாகாணப்பணிப்பாளர் வடமாகாண சுதேச மருத்துவத் திணைக்களம், 103/1, ஆடிய பாதம் வீதி, திருநெல்வேலி வடக்கு என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-7)

# அனைத்துப் படகுகளும் பதிவு செய்யப்பட வேண்டும்

## நீரியல்வளத் திணைக்களம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

கடற்தொழிலில் ஈடுபடும் அனைத்துப் படகுகளும் பதிவு செய்யப்படவேண்டும்.அத்துடன் மீன்பிடித் தொழிலிற்கான அனுமதிப் பத்திரமும் பெறப்பட வேண்டும் என யாழ்.மாவட்ட கடற்தொழில் நீரியல்வளத் திணைக்களம் அறிவித்து ள்ளது.

கடற்பரப்பில் ஏற்படும் பிரச்சினைகளைத் தவிர்ப்பதற்காகவும் மீனவர்களின் நலனை கருத்திற்கொண்டும் இச்சட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளதாக தெரிவிக்கபபடுகின்றது.

கடந்த 1996 ஆம் ஆண்டில் 2 ஆம் இலக்க கடற்தொழில் நீரியல் வளங்கள் சட்டத்தின் பிரகாரம் அனைத்துப் படகுகளும் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் நிலவிய அசாதாரண சூழ்நிலை காரணமாக இந்நடைமுறை கடைப்பிக்கப்படாமல் காணப்பட்டபோதும் தற்போதுள்ள சுமுகமான சூழ்நிலையால் மேற்படி பதிவு நடவடிக்கை மேற்கொண்டு தேவையில்லாத பிரச்சினை களை தவிர்ப்பதற்காக இது நடைமுறைப் படுத்தப் பட்டுள்ளது.

கடற்தொழிலாளர்கள் அனைவரும் தத் தமது பிரதேச கடற்தொழில் பரிசோதரிடம் படகுகளினை பதிவு செய்து பதிவு செய்யப் பட்ட இலக்கம் படகில் பொறிக்கபடுவதோடு பதிவுப் புத்தகத்தினையும் பெற்றுக் கொள்ளுமாறும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (அ-2-4)

# தொழிற்பயிற்சி அதிகாரசபையின் பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இளைஞர் விவகார அமைச்சின் கீழ் இயங்கும் இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையினால் பாடசாலைக் கல்வியை விட்டு இடை விலகிய மாணவர்களினையும் உயர் கல்வியை தொடரமுடியாத மாணவர்களினையும் கருத்திற் கொண்டு பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளது என தொழிற்பயிற்சி அதிகார சபை உதவிக்கணக்காளர் த.சுரேஸ் அறிவித்துள்ளார்.

இதற்கமைய கைதடி தொழிற்பயிற்சி நிலையத்தில் கணனி வன்பொருள் திருத்துதல், தகவல் தொழில்நுட்பம், தையற்கலை, குழாய் பொருத்துதல், மரவேலைத் தொழில்நுட்பம், பற்றவைத்தல்(Welding), கட்டட நிர்மாணம், டீசல் வாகனம் திருத்துதல் போன்ற பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இக்கற்கை நெறிகளை பயில விரும்புவோர் தமது சுயவிபரக்கோவையினை இலங்கைத் தொழிற்பயிற்சி அதிகாரசபை ஏ9 வீதி, கைதடி என்னும் முகவரியிலுள்ள தொழிற்பயிற்சி நிலையத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும்.அத்தோடு இதேபோன்ற தொழிற்பயிற்சி நெறிகள் காரைநகர் தொழிற்பயிற்சி நிலையத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இங்கு தகவல் தொழில்நுட்பம், வீட்டு மின்னிணைப்பு , தையற்கலை, மோட்டார் சைக்கிள் திருத்துதல், பற்றவைத்தல்(Welding), முச்சக்கரவண்டி திருத்துதல், கட்டட நிர்மாணம் போன்ற பயிற்சி நெறிகள் நடைபெறவுள்ளன.

இப்பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் காரைநகர் , வலந்தலைச்சந்தி, இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (அ-7)

# இராசி பலன்

29.01.2012
(தை 15, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.36 மணிக்கு
சஷ்டி முன்னிரவு 6.47 மணிவரை
ரேவதி பின்னிரவு 12.50 மணிவரை
இராகுகாலம் 5.06-6.36 மணிவரை
சுபநேரம் 9.36-11.06 மணிவரை
சஷ்டி விரதம்.

**மேடம்** சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், ஆடம்பரப்பொருட் சேர்க்கையுண்டு, ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**இடபம்** காலை நேரத்திலேயே மனதுக்கினிய செய்திகள் வந்து சேரலாம், வளர்ச்சிப் பாதைக்கு வித்திட்டவர்களை சந்தித்து மகிழ்வீர்கள், உற்றார், உறவினர்களின் வருகையுண்டு.

**மிதுனம்** மனதுக்கினிய சம்பவங்கள் நடைபெறும் நாள், கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள், கட்டடப் பணியை தொடரும் எண்ணம் மேலோங்கும், மதிப்பும் மரியாதையும் உயரும்.

**கடகம்** மறதியால் விட்டுப்போன பணிகளை இன்று செய்து முடிப்பீர்கள், தொழில் தொடர்பாக புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், சுபநிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**சிங்கம்** வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், உறவினர்களின் மனக்கசப்புக்கு ஆளாகாமல் பார்த்து கொள்வது நல்லது.

**கன்னி** சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், குடும்பத்துடன் குதூகலப்பயணமொன்றை மேற்கொள்ளும் சூழ்நிலை உருவாகும், திருமண முயற்சிகள் கைகூடும், காரிய அனுகூலமுண்டு.

**துலாம்** நல்ல செய்திகள் நாடிவரும் நாள், ருந்தினர் வருகையுண்டு, நல்லவர்களின் நட்பு கிடைக்கும், உடல்நலம் சீராகும், முயற்சி கைகூடும், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்** சுப காரியப் பேச்சுக்கள் நல்ல முடிபுக்கு வரும், தொலைபேசி மூலம் நல்ல தகவல்கள் வந்து சேரலாம், பூர்வ புண்ணிய கருமங்களில் நாட்டம் கூடும், புத்திரரால் நன்மையுண்டு.

**தனுசு** செலவு செய்து மகிழ்வீர்கள், நேர்மையான நண்பர்களால் நம்பிக்கைகள் நடைபெறும், அரசியல் செல்வாக்கு மேலோங்கும், மனதில் இனம்புரியாத சந்தோசம் குடி கொள்ளும்.

**மகரம்** கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும்நாள், பெண்வழிப்பிரச்சினைகள் நல்ல முடிபுக்கு வரும், வீட்டுத் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வீர்கள், பயனாளிகளால் பலனுண்டு.

**கும்பம்** பயனாளிகளால் பலன் கிடைக்கும், ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் ஏற்பட்ட கவலைகள் தீரும், கோரிக்கைகள் தீரும் நாள், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.

**மீனம்** திட்டமிட்ட பயணமொன்றில் திடீர் மாற்றங்கள் செய்யும் சூழ்நிலை அமையலாம், குடும்பத்தில் விட்டுக் கொடுத்து நடப்பது நல்லது, காரிய அலைச்சல்களால் மனச்சஞ்சலங்கள் ஏற்படலாம்.

வளவன்

# வாரம் ஒரு தகவல்

## நல்ல பழக்கம்

"சாப்பாடு தயார். சாப்பிட வாங்க"என்று மனைவி கணவனை அழைத்தார்."எனது சாப்பாடு இருக்கட்டும் எங்கள் பையன் சாப்பிட்டானா?" "எங்கோ ஊர் சுற்ற போய்விட்டான்."

"அவனுக்கு நீயாவது சில நல்ல பழக்கவழக்கங்களைச் சொல்லிக் கொடுக்கக்கூடாதா?"

"சொல்லித்தான் கொடுக்கின்றேன். அவன் எங்

களின் சொல்லை கேட்பதாக இல்லை." "உங்கள் குணம்தான் அவனுக்கும் உள்ளது. உங்களை மாதிரியே நிறைய பொய் சொல்லுகிறான்"

"குழந்தைகள் பொய்பேசுவதற்கு பெரியவர்கள்தான் காரணமாம்."

எப்படி சிறிய வயதிலேயே குழந்தைகள் எங்கேயாவது கீழேவிழுந்து முழங்காலில் அடிபட்டு வந்து அம்மா விளையாடும் போது விழுந்து விட்டேன் அடிபட்டு விட்டது என்று சொன்னால் ... உடனே நாம் என்ன செய்கிறோம். ஏன் அங்கே போய் விளையாட போனாய் என்று திட்டுகின்றோம். அடிக்கின்றோம். உடனே அந்தக் குழந்தை மனதினுள்ளே முடிவு எடுக்கிறது உண்மையை சொன்னால் அடிப்பார்கள் போல இருக்கின்றது என்று. அடுத்த தடவை கீழே விழுந்து அடிபட்டால் அம்மாவிடம் சொல்லாமலே மறைத்து விடுகிறது. குழந்தைகள் பொய் பேசுவதற்கு ஆரம்பிக்கிற தொடக்கம் இதுதான்.

அப்படியென்றால் அந்த சந்தர்ப்பத்தில் நாம் என்ன சொல்ல வேண்டும் என்று கூறுகின்றீர்கள். பரவாயில்லை வா மருந்து போடுகின்றேன். இனிமேல் கவனமாக விளையாடு என்று அன்பாக சொல்ல வேண்டும்.

குழந்தைகள் சொல்லுகின்ற உண்மைக்கு நாம் மரியாதை கொடுக்க வேண்டும்.

சரி இனிமேல் நான் மரியாதை கொடுக்கின்றேன்.

இதுவரைக்கும் கொடுக்காததாலே இந்நிலைமை ஆகிவிட்டது தெரியுமா? அதோ பார் ! எங்களின் பையன் மெதுவாக உள்ளே நுழைந்து என் அறைக்குள்ளே சென்று சேட் பொக்கற்றுக்குள்ளே காசு திருட முயற்சி செய்கின்றான். அதை தடுக்க நீ ஏதாவது செய்யக் கூடாதா? ஏற்கனவே இதை செய்துவிட்டேன்! எப்படி.

இன்று காலையிலே [illegible]

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 60 | 60 |
| உருளைக்கிழங்கு | 65 | 60 | 70 |
| பச்சைமிளகாய் | 90 | 90 | 80 |
| தக்காளி | 60 | 60 | 50 |
| மரவள்ளிக்கிழங்கு | 25 | 30 | 30 |
| கோவா | 40 | 40 | 50 |
| கரட் | 60 | 50 | 80 |
| பூசணி | 35 | 40 | 30 |
| புடோல் | 40 | 60 | 60 |
| வாழைக்காய் | 35 | 30 | 40 |
| சின்ன வெங்காயம் | 60 | 60 | 70 |
| பெரிய வெங்காயம் | 65 | 70 | 60 |
| பாகற்காய் | 100 | 120 | 130 |
| வெண்டிக்காய் | 70 | 70 | 60 |
| கரணைக்கிழங்கு | -- | 70 | 70 |
| பயற்றங்காய் | 140 | 140 | 120 |
| லீக்ஸ் | 50 | 80 | 80 |
| பீற்றூட் | -- | 70 | 60 |
| கறிமிளகாய் | 160 | 180 | 150 |
| முருங்கைக்காய் | 300 | 350 | 360 |
| போஞ்சி | 40 | 40 | 60 |
| கத்தரி தம்புள்ள | 35 | 40 | 60 |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 15 |
| தேசிக்காய் | 40 | 60 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 15-25 | 25 | 25 |
| வெங்காயப்பூ | 150 | 150 | 150 |

# அச்சுவேலி கைத்தொழிற்பேட்டையில் 6 ஆயிரம் பேருக்கு தொழில் வாய்ப்பு

அச்சுவேலி கைத்தொழில் பேட்டையில் வட பகுதியைச் சேர்ந்த 6ஆயிரம் பேருக்கு முதற்கட்டமாக வேலைவாய்ப்புகள் வழங்கப்படவுள்ளன.

25 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்படும் இந்த கைத்தொழில் பேட்டையில் பல்வேறு உற்பத்திகள், சேவைகளை வழங்கும் 40 கைத்தொழிற்சாலைகள் நிறுவப்படவுள்ளன.

இக் கைத்தொழில் பேட்டையின் முதற்கட்ட நிர்மாணப் பணிகள் எதிர்வரும் இரண்டு மாதங்களில் ஆரம்பிக்கப்படவுள்ளன என்த் தெரிவிக்கப்படுகின்றது. இரண்டாம் கட்டத்தின் கீழ் மேலும் 67 ஏக்கர் நிலப்பரப்பு இணைத்துக் கொள்ளப்படவுள்ளதாகவும்தெரிவிக்கப்படுகிறது.

இக் கைத்தொழில் பேட்டைக்கு அருகில் பலாலி விமான நிலையம் மற்றும் காங்கேசன்துறை துறைமுகம் என்பனவுள்ளமை சிறப்பானது.

இவை இரண்டும் சர்வதேச பாவனைக்கு திறந்து விடப்படுமாயின் அச்சுவேலி கைத்தொழிற் பேட்டை மட்டுமல்ல யாழ்ப்பாணமும் எதிர்காலத்தில் ஒரு வர்த்தக கேந்திர நிலையமாக மாறுவதற்கு வழிவகுக்கும்.




நேஷன்ஸ் ரஸ்ட் வங்கியும், சம்பத் வங்கியும் தம்மிடையே ஏரிஎம் வலையமைப்பைப் பகிர்ந்து கொள்வதற்கான ஒப்பந்தத்தில் அண்மையில் கைச்சாத்திட்டன.

# ஜோன் கீல்ஸின் 2011 டிசம்பர் நிகர லாபம் 27 வீதத்தால் சரிவு

ஜோன் கீல்ஸ் நிறுவனத்தின் 2011 டிசம்பர் மாதத்துடன் நிறைவடைந்த காலப் பகுதியில் நிகர லாபம் கடந்த ஆண்டின் இதே காலப் பகுதியுடன் ஒப்பிடுகையில் 27 வீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளதென நிறுவனம் பங்குச்சந்தைக்கு அறிவித்துள்ளது.

இதற்கு பங்குச் சந்தையில் ஏற்பட்டுள்ள சரிவான நிலைமையும் தேயிலை விற்பனையில் ஏற்பட்டுள்ள பின்னடைவுமே இந்நிலைக்கு பிரதான காரணங்களாக அமைந்துள்ளன.

சம காலத்தில் பங்குச்சந்தை மாற்றம் கண்டு வருவதும் மத்திய கிழக்கு போன்ற நாடுகளில் ஏற்பட்டுள்ள அமைதியின்மை மற்றும் சீரற்ற காலநிலை போன்றவற்றின் காரணமாக ஏற்பட்டுள்ள தேயிலை விலையின் பின்னடைவு போன்ற இந்நிறுவனத்தின் வருமானத்தில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன.

இந் நிறுவனத்தின் பிரதான வர்த்தகங்களாக தேயிலை ஏற்றுமதியும் பங்கு முகவர் செயற்பாடுகளும் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.




# சிறந்த தொழில் வழங்குநர் நிறுவனங்களின் தரப்படுத்தல்

TNS நிறுவனம் இலங்கையில் மேற்கொண்டிருந்த சிறந்த தொழில் வழங்குநர் நிறுவனங்களை தரப்படுத்தலுக்கான ஆய்வின் மூலம் அதி சிறந்த தொழில் வழங்கும் நிறுவனமாக யுனிலீவர் ஸ்ரீலங்கா நிறுவனம் தெரிவாகியுள்ளது. இதர இடங்களை முறையே ஜோன் கீல்ஸ் பிராண்டிக் மாஸ் மற்றும் வேர்டூசா போன்ற நிறுவனங்களாக தெரிவாகியுள்ளன.

இந்த தரப்படுத்தலுக் கான ஆய்வை மேற்கொள்கையில் TNS நிறுவனம் மேற்கொண்டது.

இந்த ஆய்வானது எதிர்கால ஊழியர்களாக திகழக் கூடியவர்களிடையே தூய்மை, பாதுகாப்பு, ஊக்குவிப்பு மற்றும் மறைந்துள்ள வாய்ப்புக்கள் எனும் நான்கு தலைப்புக்களில் மேற் கொள்ளப்பட்டிருந்தது.

இந்த தலைப்பின் கீழ் தீர்மானங்களை மேற்கொள்வதற்கான சுதந்திரம், வேலை செய்யும் சூழல் மற்றும் நிறுவனத்தின் உறுதியான நாமம் போன்றனவும் உள்ளடங்கியிருந் தன.

இந்த ஆய்வுக்காக சுமார் 500 பட்டக்கீழ்ப் படிப்பு பட்டதாரிகள் பரவலாக தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

## பேமாஸ்டர் ஊடாக ஊ.சே.நிதியை செலுத்தும் வசதி

கொமர்ஷல் வங்கி Paymaster முறையூடாக ஊழியர் சேமலாப நிதியை (EPF) செலுத்துவதற்கான வசதியை அண்மையில் அறிமுகம் செய் துள்ளது. இது வங்கியின் புரட்சிகரமான மொத்த கொடுப்பனவு முறை தீர்வுத் திட்டமாகும்.

இதன் மூலம் EPF கொடுப்பனவுகளை அதற்கான கரும பீடங்கள் மூடியுள்ள நிலையிலும் வருடம் 365 நாளும் இணையம் வாயிலாக செலுத்தலாம். C / C3 ஆவணங்களையும் பாவனையாளர்கள் இந்த முறையூடாக தரவிறக்கம் செய்து கொள்ளலாம். இது காசோலை எழுதுதல், அவற்றைக் கொண்டு செல்லல், ஆவணங்களை நிரப்பல் போன்ற காரியங்களை இலகுவாக்குகின்றது.

## பங்குச் சந்தை விபரம்

(வார இறுதியில்)

CSE COLOMBO STOCK EXCHANGE

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 5781.13 | 5725.44 ⇩ |
| மிலங்கா விலைச்சுட்டி | 4916.89 | 4921.81 ⇧ |
| விலை அசைவுகளின் அடிப்படையில் | புரள்வு (ரூபா.மில்.) | 6,645.27 |

**உயர்வடைந்த பங்குகள்(ரூ.):** சுவர்ணமகால் பினான்ஸ்(123.50), ஹெஸ்னர்(327.60),ஏசியா அசற்(7.10),ஏசிஎம்ஈ(23.40),சிகிரியா விலேஜ்(88.00).

**சரிவைக் காட்டிய பங்குகள்(ரூ.):** ரீ சேவிஸ்(550.80),ஈபி கிரேஸி(1400.10),பிசி பார்மா(45.10),கீல்ஸ் பூட்(105.00),ஓட்டோரும்(801.00).

மேலதிக தகவல்கள்: www.cse.lk

# நாட்டின் பொருளாதார நிலை உலகளவில் 4-ம் இடத்தில்

## -பசில் ராஜபக்ஷ

நாட்டின் தற்போதைய பொருளாதார வளர்ச்சி வீதமான 8.3 ஆனது, உலகளாவிய ரீதியில் நான்காவது இடத்தில் காணப்படுவதாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றில் கலந்து கொண்டு விளக்கமளிக்கும்போது தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியம் வெளியிட்டுள்ள எதிர்வுகூறல்களுக்கு அமைவாக எதிர்வரும் ஆண்டில் இலங்கையின் பொருளாதார நிலை சீனாவுக்கு அடுத்ததாக இரண்டாவது நிலையில் திகழும் என அவர் மேலும் குறிப்பிட்டார்.

போரினால் பாதிக்கப்பட்ட நாடுகளான வியட்நாம், ஜேர்மனி, ஜப்பான் மற்றும் கொரியா போன்ற நாடுகள் மீண்டும் பொருளாதார வளர்ச்சியை அடைய நீண்டகாலம் வரை சென்றிருந்தது. ஆயினும் இலங்கையை பொறுத்தமட்டில் யுத்தம் நிறைவடைந்து சுமார் இரண்டு ஆண்டு காலப்பகுதியினுள் இது போன்றதொரு வளர்ச்சியை அடைந்துள்ளமையானது சாதனையாக அமைந்துள்ளது.

கடந்த ஆண்டுகளில் நிலவிய பொருளாதார நெருக்கடியின் காரணமாக சர்வதேச முதலீட்டாளர்கள் தமது முதலீடுகளை இடைநிறுத்தி பணத்தை சேமித்திருந்தனர். ஆயினும் இவ்வருடம் இந்நிலை மாற்றமடையலாம். இதன் காரணமாக இலங்கையில் பல புதிய முதலீடுகளுக்கு வாய்ப்புகள் ஏற்படலாம் எனவும் கூறியுள்ளார்.

# திசைகாட்டி கிளிநொச்சியில்

எமது பிரதேசத்தில் விசா என்ற விடயம் தேவைப்படும்போது மட்டும் தேவையானவர்கள் கொழும்பில் சென்று தேவையைப் பூர்த்தி செய்வதோடு சரி; மற்றப்படி எம்மவர் அநேகருக்குப் பரீட்சியம் இல்லாத ஒருதுறை.

இந்த விசா பக்கங்களின் சட்ட ரீதியான அணுகுமுறைகள் எம் சமூகத்துக்கு புதிது. கால மாற்றத்துக்கேற்ப எல்லா நாடுகளும் குடிய கல்வு குடிவரவு நடைமுறைகளுக்கு புது வடிவம் கொடுக்கின்ற காலம் இது.

இந்த நிலையில் யாழ்ப்பாணத்தில் விசா விழிப்புணர்வுடன் ஆலோசனையை வியாபாரப் பொருளாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டதே இந்த் திசைகாட்டி.

ஆரம்பிக்கப்பட்ட ஒரு வருடத்துக்குள் தனியார் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக மாற்றம் கண்டதுடன் கொழும்பிலிருந்தே யாழ்ப்பாணத்துக்கு விசா ஆலோசனை பெற தம்மிடம் வருகின்ற நிலையை ஏற்படுத்தி இந்தத் துறையில் தனியிடம் பதித்திருக்கின்றது.

இந்தக் குறுகிய காலத்தில் 866 பேர் விசா தொடர்பாக இலவச விழிப்புணர்வை பெற்றுள்ளனர்.

அந்தந்த நாட்டு விசா நடைமுறைகள் என்ன? முற்பணங்கள் வழங்காமல் விசா பெற என்ன வழி? முற்பணங்கள் வழங்குவதாயின் முற்காப்புக்கள் என்ன?

இவை எல்லாவற்றையும் பற்றி பிரஸ்தாபிக்க தன் வியாபாரக் கிளையை கிளிநொச்சி நகரில் திசைகாட்டி ஆரம்பிக்கவுள்ளது.

# செவ்ரோனிற்கு 10 வருடம் பூர்த்தி

செல்டெக்ஸ் வர்த்தக குறியீட்டினை கொண்ட Havoline, Delo மற்றும் Lanka போன்ற உராய்வு நீக்கி எண்ணெய் விற்பனையில் முன்னணி வகிக்கும் Chevron Lubricants Lanka PLC நிறுவனம் இலங்கையில் தசாப்த கால வர்த்தகத்தை பூர்த்தி செய்துள்ளது.

# கல்பிட்டி-கட்டுநாயக்க இடையில் விரைவில் அதிவேக நெடுஞ்சாலை

கட்டார் நாட்டின் முதலீட்டாளர்கள் கட்டுநாயக்கவுக்கும் கல்பிட்டி பகுதிக்கும் இடையில் அதிவேக நெடுஞ்சாலை ஒன்றை அமைக்க தமது விருப்பத்தை இலங்கை அரசிடம் தெரிவித்துள்ளனர்.

இந்த நெடுஞ்சாலையானது தற்போது அமைக்கப்பட்டுவரும் கொழும்பு- கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலை மேலும் விஸ்தரிக்கும் வகையில் அமைந்திருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கட்டார் நாட்டின் முதலீட்டாளர்கள் இந்த 140 கிலோ மீற்றர் நீளமான அதிவேக நெடுஞ்சாலையை மாற்றீடு பாவனைக்காகவும் செயற்பாட்டுக்காகவும் பயன்படுத்தலாம் எனத் தெரிவித்துள்ளனர்.

இந்த அதிவேக நெடுஞ்சாலை நிர்மாணிப்பதற்கான பிரதான காரணம் கல்பிட்டி பகுதியில் அமைந்துள்ள சுற்றுலா பகுதியுடன் நேரடியாக கட்டுநாயக்க விமான நிலையத்தை இணைக்கும் வகையில் அமைந்துள்ளதென பொருளாதார அபிவிருத்தி அமைச்சு அறிவித்துள்ளது.

இதேபோல வடக்கு அதிவேக நெடுஞ்சாலை விரைவில் அமைப்பதாயின் அரசு தனியார் பங்களிப்பை நாடலாம்.

மேலும் கட்டார் முதலீட்டாளர்கள் கல்பிட்டி சுற்றுலா பகுதியில் 3 ஹோட்டல்களையும் நிறுவ திட்டமிட்டுள்ளதாக அறிவித்துள்ளனர்.

# வொடபோன் வழக்கு தீர்ப்பு

வொடபோன் இன்ரநஷனல் ஹோல்டிங் நிறுவனம் 25 ஆயிரம் கோடி ரூபாய் வருமான வரி செலுத்தத் தேவையில்லை என இந்திய உச்ச நீதிமன்றம் கடந்த வாரம் தீர்ப்பளித்துள்ளது.

வோடபோன் நிறுவனம்2007 ஆம் ஆண்டு மே மாதம் ஹட்சிசன் - எஸ்ஸார் குழுமத்தின் 67வீத பங்குகளை சுமார் ஒரு லட்சத்து 30 ஆயிரம் கோடி ரூபாய் கொடுத்து வாங்கியது.

இந்த நடவடிக்கையை ஒட்டியே அந்த நிறுவனம் அதனுடைய ஊழியர்களுக்கு அளித்த ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்திருக்க வேண்டிய ரூ.25,000 கோடியைத் தர வேண்டும் என்று இந்திய வருமான வரித்துறை வழக்குத் தொடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 113.01 | 114.88 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 176.51 | 180.83 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 147.18 | 151.41 |
| சுவிஸ் பிராங் | 121.66 | 125.76 |
| கனேடிய டொலர் | 111.92 | 115.45 |
| அவுஸ்திரேலிய டொலர் | 119.01 | 123.03 |
| சிங்கப்பூர் டொலர் | 89.26 | 91.94 |
| ஜப்பான் யென் | 1.45 | 1.49 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.30 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 31.01 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

# மரண அறிவித்தல்

# தேவசகாயம் மகேஸ்வரி



கொக்குவில் மேற்கு மணியர்பதி வீதியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தேவசகாயம் -மகேஸ்வரி 25.01.2012 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்ரமணியம் -பவளம் தம்பதியரின் செல்வப்புதல்வியும், காலஞ்சென்றவர்களான நமசிவாயம் - தங்கம்மா தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற தேவசகாயத்தின் மனைவியும் ஆவார். சாந்தினி, நந்தினி, நடனகுமார், பிறேம்குமார் நந்தகுமார், ஜெயக்குமார் ஆகியோரின் பாசமிகு தாயும், சிவராஜா, தர்மதேவா, கோசலா, ரிஷாந்தினி ,கிருஷாந்தி ஆகியோரின் அன்பு மாமியும், மகாதேவா, இரத்தினசபாபதி, பாக்கியநாதன், பரமேஸ்வரி, ஞானேஸ்வரி, கமலேஸ்வரி, அசோக்குமார், ஆகியோரின் அன்புச் சகோதரியும், ராஜேஸ்வரி, காலஞ்சென்றவர்களான ஞானேஸ்வரி, கனகலிங்கம், பரமேஸ்வரி மற்றும் சத்தியசீலன், மகேஸ்வரன், சகுந்தலாதேவி, மகேந்திரன் ஆகியோரின் மைத்துனரும், நிரோஜன் ,அர்ஜுன், தக்ஷன், சர்மிலா, மதுரா, ஆதீனன், ஆதீனா, சங்கமேந்தி, சிவசங்கரி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 29.01.2012 ஞாயிற்றுக்கிழமை கொக்குவில் மேற்கு மணியர்பதி வீதியிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று நண்பகல் 12 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் , நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

**மணியர்பதி வீதி,**
**கொக்குவில் மேற்கு,**
**கொக்குவில்.**

**தகவல்:-**
**தே.ஜெயக்குமார்**
**(ஆசிரியர்-மகன்).**

# நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கைகளை

# ஒரேநாளில் நடைமுறைப்படுத்த முடியாது

## ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு

(கொழும்பு)

**கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை ஒரே நாளில் நடைமுறைப்படுத்த முடியாது. 30 வருட பிரச்சினைகளுக்கு உடனடியாக தீர்வுகாண்பது கடினம். எனினும் முறைப்படி அவை நடைமுறைப்படுத்தப்படும் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.**

ஊவா மாகாணத்திற்கு நேற்றுமுன்தினம் விஜயம் செய்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ புத்தள நகரில் பல அபிவிருத்தித் திட்டங்களை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உடனடியாக இதனை நிறைவேற்ற வேண்டும் என அழுத்தம் கொடுப்பது முறையற்றது எனவும் ,தெரிவித்த ஜனாதிபதி காணிகளற்றோருக்கு காணிகள் பெற்றுக் கொடுக்கும் செயற்பாடுகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் .

2005 ஆம் ஆண்டிலிருந்து தாய் நாட்டை மீட்டு பாதுகாப்பதற்காக நாம் பாரிய செயற்றிட்டங்களை மேற்கொள்ள வேண்டியிருந்தது.

பயங்கரவாதிகள் நாட்டை துண்டாடுவதற்கு முயற்சிகளை மேற்கொண்ட போது அதனை தடுக்க நாம் மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு பாரிய தடைகளும் எதிர்ப்புகளும் அழுத்தங்களும் வந்தன. நாம் அத்தனைக்கும் முகங்கொடுத்தே நாட்டை மீட்டெடுத்தோம்.

நாம் நாட்டை மீட்டு பாதுகாத்தபோதும் மக்களின் நாளாந்த தேவைகளை நிறைவேற்றுவது முக்கியமானதாக அமைந்தது. அதனால் மக்களுக்குத் தேவையான அபிவிருத்தி உட்கட்டமைப்பு, நீர், மின்சாரம், பாதைகள் போன்ற பொதுவசதிகளை மேம்படுத்தும் நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தினோம்.

முழு உலகிலும் உணவு நெருக்கடி ஏற்பட்டபோதும் சர்வதேச நாடுகளில் எரிபொருள் விலை அதிகரித்த போதும் வங்கிகள் வீழ்ச்சியுற்று பொருளாதார நெருக்கடிகள் ஏற்பட்ட போதும் வேலையில்லா திண்டாட்டங்கள் அதிகரித்த போதும் நாம் உரிய செயற்றிட்டங்கள் மூலம் எமது நாட்டில் எத்தகைய பாதிப்புகளும் ஏற்படாத வகையில் முறையான நடவடிக்கைகளை மேற்கொண்டோம்.

அமெரிக்கா போன்ற நாடுகள் ஊழியர்களை வேலை நீக்கம் செய்த காலத்தில் நாம் 6 இலட்சமாக இருந்த அரச ஊழியர் தொகையை 13 இலட்சமாக அதிகரித்தோம். அது மட்டுமின்றி 20 ஆம் திகதி ஆகும் போது அவர்களுக்கு சம்பளத்தையும் பின்னர் சம்பள முற்பணத்தையும் வழங்கி வருகின்றோம். இதற்குப் பாரிய நிதி அவசியமாகின்றது.


நாட்டைச் சுதந்திரமாக்கியதாலேயே இவற்றைச் சரிவர மேற்கொள்ள முடிந்தது. தொடர்ந்து விவசாயிகளுக்கான நீர், உரமானியம் என சகல சலுகைகளையும் வழங்கி வருகின்றோம். உர விலையில் ஏற்ற இறக்கம் ஏற்பட்ட போதும் நாம் இன்றும் அதே மானிய விலையில் உரம் வழங்கி வருகிறோம்.

இக்காலத்தில் எமக்கெதிராக பல சேறு பூசல்களும் விமர்சனங்களும் முன்வைக்கப்படுகின்றன. எனினும் அதற்குப் பயந்து நாம் எமது தாய்நாட்டை முன்னேற்றுவதிலிருந்து விலகப்போவதில்லை. முதலில் எமது தாய்நாடு அதன் பின்னரே ஏணையவை.

நாட்டின் அபிவிருத்தியை நாம் தொடர்ந்து முன்னெடுப்போம். அதேவேளை கிராமிய மக்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றுவதிலும் அபிவிருத்தியை முன்னெடுப்பதிலும் நாம் திட்டங்களைச் செயற்படுத்துவோம்.

நாட்டில் தற்போது பாரிய முன்னேற்றத்தைக்காண முடிகின்றது. நாட்டில் உள்ள சனத்தொகையை விட தொலைபேசிகள் அதிகமாக புழக்கத்தில் உள்ளன. யுத்தம் முடிவுற்ற குறுகிய காலத்திலேயே நாடு பாரிய முன்னேற்றம் கண்டு வருகின்றது.

புதிய தொழில்நுட்பத்தை சகல துறைகளிலும் உபயோகப்படுத்த முனைந்துள்ளோம். இந்த முன்னேற்றகரமான செயற்றிட்டங்களுடனேயே நாம் எதிர்காலத்திற்குப் பயணிக்கின்றோம்.



கிராமங்கள் பற்றியும் நாட்டு மக்கள் பற்றியும் தெளிவில்லாதவர்கள் இவற்றை எரிச்சலுடன் நோக்குகின்றனர். தாய்நாட்டை டொலர்களுக்காக காட்டிக் கொடுப்பவர்களுக்கு இத்தகைய முன்னேற்றங்களில் விருப்பமில்லை.

நாட்டு மக்களாகிய நீங்கள் எம்மீது நம்பிக்கை வைத்துள்ளது போல் நாமும் மக்கள் மீது அசையாத நம்பிக்கை கொண்டுள்ளோம். மக்கள் எதிர்பார்ப்பை நிறைவேற்றுவதே எமது பொறுப்பு என அவர் மேலும் தெரிவித்தார். (அ)

# விஞ்ஞானபாட செயலமர்வு

துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களிடையே விஞ்ஞான பாடத்தில் அடைவு மட்டத்தை அதிகரிக்கும் நோக்குடன் விசேட செயலமர்வு நடைபெறவுள்ளது.இதற்கமைவாக நடமாடும் ஆய்வுகூட பாவனையும் ஒழுங்கமைப்பும் செய்முறையும் தொடர்பான செயலமர்வு எதிர்வரும் பெப்ரவரி மாதம் 3 ஆம் திகதி காலை 8.30 மணிக்கு மு/மாங்குளம் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளதாக துணுக்காய் வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி எல். மாலினி வெனிற்றன் தெரிவித்துள்ளார்.

இச் செயலமர்வுக்கு நடமாடும் ஆய்வுகூடங்கள் வழங்கப்பட்ட பாடசாலைகளில் இருந்து ஆய்வு கூடத்திற்கு பொறுப்பான விஞ்ஞானபாட ஆசிரியர்களையும் தரம் 8 தொடக்கம் தரம் 11 வரை விஞ்ஞானபாடம் கற்பிக்கும் ஆசிரியர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அவர் அறிவித்துள்ளார். (அ-3-15)

# இந்தியாவுடன் நட்புறவைப் பேண அர்ப்பணிப்புடன் செயற்படுகிறோம்

## மகாபோதி சங்கத் தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை- இந்திய நட்புறவை மேம்படுத்த மகாபோதி சங்கமும் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றது. இலங்கையின் 64 ஆவது சுதந்திரதினத்தை 12 ஆவது தடவையாகவும் சென்னையில் நடத்த கோலாகல ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று இலங்கை மகாபோதி சங்கத்தின் தலைவர் பானகல உபதிஸ்ஸதேரர் தெரிவித்தார்.

சென்னையில் நடைபெறவுள்ள இலங்கையின் சுதந்திர தினம் குறித்து அண்மையில் நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே உபதிஸ்ஸ தேரர் மேற்கண்டவாறு கூறினார்.

இவர் இங்கு தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

இலங்கை அரசாங்கம் செய்ய வேண்டிய பணியை தற்போது,மகாபோதி சங்கம் செய்கின்றது. நாடு பெற்ற சுதந்திரத்தை அர்த்தமுள்ளதாக்க 1891 ஆம் ஆண்டு தொடக்கம் மிகவும் பங்களிப்புடன் தியாகபூர்வமாகவே செயற்படுகின்ற சங்கமாகவே மகாபோதி காணப்படுகின்றது.

எதிர்வரும் பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதி சென்னையில் நடைபெறவுள்ள இலங்கையின் சுதந்திரதின விழாவிற்கு சிங்களம், தமிழ், மற்றும் முஸ்லிம் என சகல சமூகத்தினரும் கலந்து கொள்ளவுள்ளனர். அதேபோன்று இந்தியாவில் உள்ள இலங்கை அகதிகளுக்கு உலர் உணவுப் பொருட்களும் வழங்கப்படவுள்ளன. (அ-2)

# தீங்கிழைக்கும் நோக்கில் நாட்டுக்குள் பிரவேசிப்போரை தடுப்பதற்குத் திட்டம்

## அரசாங்கம் தெரிவிப்பு

தீங்கு இழைக்கும் நோக்கில் நாட்டுக்குள் பிரவேசிக்கும் நபர்களை தடுப்பதற்கு அரசாங்கம் விசேட திட்டங்களை அமுல்படுத்த உள்ளது.

பயங்கரவாதம், அடிப்படைவாத மதக் கோட்பாடுகளை வியாபித்தல் போன்ற நோக்கங்களுக்காக நாட்டுக்குள் பிரவேசிப்போரை தடுக்கும் வகையில் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கண்காணிப்பு கமராக்கள் பொருத்தப்படவுள்ளன.

இந்தக் கமராக்களின் மூலம் நாட்டுக்குள் பிரவேசிப்போர் மற்றும் நாட்டிலிருந்து வெளியேறுவோரின் புகைப்படங்களை சேர்த்துக் கொள்ள முடியும் என தெரிவிக்கப்படுகின்றது.

சுற்றுலா விசாக்களை பயன்படுத்தி புலிகளின் புலனாய்வு பிரிவினர் நாட்டுக்கு எதிரான அரச சார்பற்ற நிறுவனங்கள் , சர்வதேச குற்றச் செயல்களுடன் தொடர்புடைய நபர்கள் நாட்டுக்குள் பிரவேசிப்பதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் இவ்வாறான கமராக்கள் பொருத்தப்படாத காரணத்தினால் பல சேதவிரோதிகள் நாட்டுக்குள் பிரவேசித்து நாச வேலைகளில் ஈடுபட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ-2)

அன்னையே எமக்கருள் புரிந்திடம்மா
L கிருபா லேணர்ஸ் L
யாழ் நகரில் முன்னணி பயிற்றுவிப்பாளர்கள்
அரச அங்கீகாரம் பெற்ற சாரதிப் பயிற்சிப் பாடசாலை
பதிவு எண் D.S.589
உரிமையாளர் அ.கிருபாகரன்
தலைமை: 226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
கிளை :- விசுவமடு T.P:- 021 320 1515
கிளை :- A-9 வீதி, சாவகச்சேரி T.P:- 021 492 3202, 021 320 1818
கிளை: நெல்லியடி T.P: 021 3006550

# யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்களின் உதவியுடன் வடக்கில் அபிவிருத்தித் திட்டங்கள்

## ஆய்வு செய்ய பஷில் பணிப்பு



(கொழும்பு)

யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் உதவியுடன் வடக்கின் அபிவிருத்தித் திட்டங்கள் பற்றி ஆய்வொன்றினை மேற்கொள்ளுமாறு பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ உரிய அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

வடக்கில் மேற்கொள்ள வேண்டிய மீதமுள்ள அபிவிருத்திப் பணிகளை இனங்காணல் மற்றும் தற்போது இடம்பெற்று வருகின்ற அபிவிருத்தி பணிகளை துரிதப்படுத்தல் என்பன தொடர்பாக யாழ்.பல்கலைக்கழகத்துடன் இணைந்து ஆய்வொன்றினை நடத்துமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அமைச்சர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

இவ் அமைச்சின் கீழுள்ள துரித வடக்கு புனரமைப்புத் திட்டத்தின் கீழ் மேற்படி ஆய்வு மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் அதில் யாழ். பல்லைக்கழகத்தின் வவுனியா வளாக மாணவர்களை ஈடுபடுத்தவுள்ளதாகவும் துரித வடக்கு புனரமைப்புத் திட்டத்தின் பணிப்பாளர் எஸ். கே. லியனகே தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கில் செழிப்பான அபிவிருத்தி ஒன்றினை ஏற்படுத்துவதற்காக அரசாங்கம் மேற்கொண்டுவரும் வேலைத்திட்டங்களை மேலும் வெற்றியடையச் செய்வதற்கு செய்ய வேண்டிய பணிகளை இனங்காணுவது பயன்வாய்ந்ததாக அமையும் என்பதை அடிப்படையாகக் கொண்டே இவ்ஆய்வு நடைபெறவுள்ளது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழுள்ள நிகழ்ச்சித் திட்டங்கள் மூலம் வடக்கு அபிவிருத்தி பணிகள் இடம்பெற்று வருகின்றன.

இதன்பிரகாரம் உலக வங்கியின் நிதியுதவியின் கீழ் இயங்கிவரும் துரித வடக்கு புனரமைப்புத் திட்டத்தின் கீழ் வடக்கு மாகாண உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக 65 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

கிராமிய மக்களின் வாழ்வாதாரத்திற்கு மிகவும் இன்றியமையாத தேவைகளாகக் காணப்படும் வீதிகள், நீர்ப்பாசனம், குளங்கள், பாடசாலைகள், பொதுக்கட்டடங்கள், குடிநீர் உள்ளிட்ட 654 அபிவிருத்தித் திட்டங்கள் இதன்கீழ் ஆரம்பிக்கப்படும்.

அதில் 351 திட்டங்கள் தற்போது பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. மீதமுள்ள 303 அபிவிருத்தித் திட்டங்கள் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

மேலும் இத்திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 114 குளங்களை புனரமைப்பதற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அதில் 65 குளங்களின் புனரமைப்புப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டார். (அ-2)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வேம்படி மகளிர் உயர்தர பாடசாலையின் அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு பாடசாலையின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் பாடசாலை நலனில் அக்கறை கொண்ட பெற்றோர், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அதிபர் திருமதி கி.முத்துக்குமாரன் கேட்டுள்ளார். (அ)

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

வர்த்தக வங்கியின் சுன்னாகக் கிளையினால் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த அருணலு சிறுவர் கணக்கினைப் பேணும் தேர்வு செய்யப்பட்ட பாடசாலைகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களுக்கு பணப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

இந்நிகழ்வு எதிர்வரும் பெப்ரவரி முதலாம் திகதி புதன்கிழமை பிற்பகல் 4 மணிக்கு சுன்னாகக் கிளையின் வரவேற்பு மண்டபத்தில் இடம்பெறவுள்ளதாக சுன்னாகக் கிளை முகாமையாளர் தெரிவித்துள்ளார். (அ-7)

# சன்னார் மக்களை வெளியேற்றும் முயற்சிக்கு மன்னார் நகரசபை கவனயீர்ப்பு தீர்மானம்

மன்னார் நகரசபையின் 2012 ஆம் ஆண்டிற்கான முதலாவது கூட்டம் கடந்த 25 ஆம் திகதி நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் நகர சபை உறுப்பினர் எஸ்.ரெட்ணசிங்கம் குமரேஸ் சன்னார் தொடர்பாக கவனயீர்ப்பு தீர்மானம் ஒன்றினைக் கொண்டு வந்தார் .

அதில் தெரிவித்திருப்பதாவது, சன்னார் மக்கள் 1986 ஆம் ஆண்டு தொடக்கம் அப்பகுதியில் காடு வெட்டி துப்புரவு செய்து வசித்து வருகின்றனர். காணிக்கச்சேரியில் வைத்து அந்தக் காணிகள் அவர்களுக்கு உரித்தானது என்று அரசாங்க உத்தரவும் வழங்கப்பட்டுள்ளது.

யுத்தத்தினால் பல்வேறு இடம்பெயர்வுகளைச் சந்தித்த இப்பிரதேசத்து மக்கள் முள்ளிவாய்க்கால் வரை சென்று செட்டிக்குளம் பகுதியில் முட்கம்பி வேலிகளுக்குப் பின்னால் அடைக்கப்பட்டு கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன் மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இப்பொழுது இந்த மக்களை இங்கிருந்து வெளியேற்றிவிட்டு மற்றொரு சமூகத்தினரை குடியேற்ற சிரேஷ்ட அரசியல்வாதி முயற்சித்து வருகின்றார். இந்த அரசியல்வாதிக்கு அப்பகுதி உதவி அரசாங்க அதிபரும் துணைநின்று மக்களை தீய வார்த்தைகளால் ஏசி அடிமைகளா க நடத்துகின்றனர். அதிகாரியின் சாரதியும் அதிகாரியும் அரசியல் வாதியின் அடியாட்களாகச் செயற் படுவதாக சன்னார் மக்கள் எம்மிடம் நேரில் தெரிவித்தனர்.

எமது தீர்மானங்கள் அரசாங்க உயர்மட்டம் வரை செல்வதால் இம்மக்களின் நிர்க்கதியான நிலை எமது சபை ஊடாக உயர்மட்டத்தின் கவனத்திற்குச் சென்றடைய வேண்டும் என்பதற்காகவே இக்கண்டனத் தீர்மானத்தை இச்சபை ஏகமனதாக நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன் என்று கூறப்பட்டுள்ளது.

சன்னார் மக்கள் பிரச்சினை தொடர்பில் தெளிவின்மை காரணமாக ஒருவர் மட்டும் இந்தத் தீர் மானத்திற்கு எதிராக வாக்களித்ததாகவும். ஏனையோர் கண்டனத் தீர்மானத்திற்கு ஆதரவு தெரிவித்ததாகவும் ரெட்ணசிங்கம் குமரேஸ் தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் இந்த ஆண்டு மன்னார் நகரசபைப் பகுதியில் மேற்கொள்ளப்பட வேண்டிய பல்வேறு அபிவிருத்திப் பணிகள் குறித்தும் விவாதிக்கப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். கூட்டத்திற்கு மன்னார் நகரசபைத் தலைவர் ச.ஞானப்பிரகாசம் தலைமைதாங்கினார். (அ-2)

## நீதிமன்றத்தால் அபராதம்

போலியான காசோலைகளை வழங்கினார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் வெவ்வேறு இடத்தினைச்சேர்ந்த 3 நபர்களை யாழ்.பொலிஸார் கைது செய்து யாழ்.நீதிமன்றில் கடந்த 26 ஆம் திகதி ஆஜர்படுத்தியுள்ளனர். இம்மூன்று நபர்களுக்கும் எதிராக மூன்று வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு யாழ்.நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இவ்வழக்கினை விசாரித்த யாழ்.நீதவான் நீதிமன்ற நீதவான் ம.கணேசராஜா முடமாவடியைச்சேர்ந்த நபருக்கு 5 ஆயிரம் ரூபா காசுப்பிணையிலும் ஒரு இலட்சம் ரூபா இரண்டு ஆட்பிணையில் செல்வதற்கும் கொக்குவிலைச்சேர்ந்த நபருக்கு 25 ஆயிரம் ரூபா காசுப்பிணையிலும் இரண்டு இலட்சம் ரூபா நான்கு ஆட்பிணையிலும் செல்வதற்கும் கே.கே. எஸ். வீதியைச்சேர்ந்த நபருக்கு 39ஆயிரம் ரூபா காசுப்பிணையில் செல்வதற்கும் தீர்ப்பளித்தார்.

இம்மூன்று நபர்களும் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் யாழ் .நீதிமன்றில் கையொப்பமிடவேண்டும் எனவும் உத்தரவிட்டார். (2-4)

## போலி ஆவணங்கள் சமர்ப்பித்தவர் கைது

(கொழும்பு)

ஐக்கிய இராச்சிய விசா பெறுவதற்காக போலி ஆவணங்களை சமர்பித்த இலங்கையர் ஒருவர் ஜனவரி மாதம் 9 ஆம் திகதி கைது செய்யப்பட்டுள்ளார்.

தான் பிரித்தானியாவில் தங்கியிருந்த காலத்தை மறைக்கும் வகையில் போலியான இலங்கை குடிவரவு முத்திரையைக் கொண்ட கடவுச்சீட்டை இவர் சமர்ப்பித்திருந்தார்.

இவரது விசா விண்ணப்பம் மறுக்கப்பட்டதுடன் 10 வருடங்களுக்கு ஐக்கிய இராச்சியத்தினுள் நுழையத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயத்திலுள்ள ஐக்கிய இராச்சிய எல்லை முகவரக உத்தியோகத்தர்கள் போலியான குடிவரவு முத்திரைகளையும் விசாக்களையும் கண்டுபிடிப்பதற்கு விசேட பயிற்சி வழங்கப்பட்டுள்ளன என ஐக்கிய இராச்சிய எல்லை முகவரக அதிகாரியான கிளேயர் மறே கூறினார். (அ-2)





புதிய மகசின் சிறைச்சாலை கலவரம் தொடர்பில் ஊடகவியலாளர்களுக்கு விளக்கமளிக்கும் செய்தியாளர் மாநாடொன்று நேற்று முன்தினம் புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீரவினால் நடத்தப்பட்டது. அதனை தொடர்ந்து புதிய மகசின் சிறைச்சாலைக்கு செய்தியாளர்களுடன் விஜயம் செய்த அமைச்சர் கஜதீர அங்கு தீக்கிரையாக்கப்பட்டிருந்த கட்டடத்தை பார்வையிட்டதுடன் சிலரை சந்தித்து கலந்துரையாடுவதையும் படங்களில் காணலாம்.

# இந்திய மீனவர்களின் விடுதலைக்கு இந்தியாவின் அழுத்தமே காரணம்

## ஆங்கில நாளிதழ் தகவல்

(கொழும்பு)

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழையும் இந்திய மீனவர்களை கடற்படை கைது செய்வதற்கு இந்தியா கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளதாகவும் இந்த விடயத்தில் இலங்கை மீது இந்தியா கடும் அழுத்தங்களை பிரயோகிப்பதாகவும் கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு புல்மோட்டைக்கு வடக்கே ஆறு விசைப்படகுகளில் அத்துமீறி மீன் பிடித்துக் கொண்டிருந்த போது 43 தமிழக மீனவர்களும் கைது செய்யப்பட்டதற்கு இந்தியா கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. அத்துடன் இவர்களை உடனடியாக விடுதலை செய்யும் படியும் இந்தியா அழுத்தம் கொடுத்துள்ளது.

தற்போது திருகோணமலை வை.எம்.சி.ஏ மண்டபத்தில் தங்க வைக்கப்பட்டுள்ள இவர்களை இந்திய கடலோர காவல்படையினர் வந்து அழைத்துச் செல்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கைது செய்யப்படும் மீனவர்களை விடுவிக்கும் நிகழ்வுகள் இதற்கு முன்னர் இந்திய-இலங்கை கடல் எல்லையிலேயே நடைபெறுவது வழக்கம். ஆனால், இம்முறை மீனவர்களை அழைத்துச் செல்வதற்கு இந்திய கடலோர காவல்படை, இலங்கை கடற்பரப்புக்கு வரவுள்ளதாகவும் கொழும்பு நாளிதழ் தெரிவித்துள்ளது.

இந்த மாதத்தில் மட்டும் 8 படகுகளும் 56 மீனவர்களும் இந்தியாவின் தலையீட்டினால் விடுவிக்கப்பட்டுள்ளனர். (அ-2)

# தமிழ் சிறைக்கைதிகளுக்கு இந்துமாமன்றம் உதவி

களுத்துறை சிறைச்சாலையில் அடிப்படை வசதிகளின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளுக்கு அகில இலங்கை இந்துமாமன்றம் ஒரு தொகுதி உடுதுணிகளையும் அத்தியாவசிய பொருட்களையும் வழங்கியுள்ளது.

புதிய மகசின் சிறைச்சாலையில் கடந்த 24 ஆம் திகதி இடம்பெற்ற மோதலையடுத்து அங்கு தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் கைதிகளில் 180 பேர் அவசர அவசரமாக களுத்துறை சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டனர்.

இவர்களது உடைகள் மற்றும் பொருட்கள் புதிய மகசின் சிறைச்சாலையில் சூறையாடப்பட்டிருந்தது. இந்த நிலையில் மாற்று உடை கூட இல்லாத நிலையில் களுத்துறை சிறையில் கைதிகள் பெரும் அவலத்தினை சந்தித்திருந்தனர்.

இதனையடுத்து நேற்று முன்தினம் அங்கு விஜயம் செய்த இந்து மாமன்றத்தின் பிரதிநிதிகள் 2 இலட்சத்து 20 ஆயிரம் ரூபா பெறுமதியான உடுதுணிகள் மற்றும் அத்தியாவசிய பொருட்கள் என்பவற்றை கைதிகளுக்கு வழங்கியுள்ளனர். (அ-2-11)

## உணவில் அதிக உப்பு; பணிப்பெண் மூக்குடைவு

இலங்கைப் பணிப்பெண் ஒருவர் எஜமானியால் தாக்கப்பட்டு மூக்கு உடைபட்ட நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அப்பணிப்பெண் சமைத்த உணவிற்கு அதிகமாக உப்பு சேர்த்தமையின் காரணமாகவே எஜமானியால் தாக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் குவைத்தில் இடம்பெற்றுள்ளது. தாக்குதலுக்கு உள்ளான இலங்கைப் பணிப் பெண் 40 வயதானவர் என தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

# மூன்று இலட்சம் மக்களுக்கு மின்சாரம் வழங்கத்திட்டம்

## மின்சக்தி எரிசக்தி அமைச்சு

(கொழும்பு)

இந்த வருடத்தில் மேலும் 3 இலட்சம் குடும்பங்களுக்கு மின்சார வசதி அளிப்பதற்கான ஆயிரம் மின்சார திட்டங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக மின்சக்தி எரிசக்தி அமைச்சு கூறியது.


இதற்காக ஈரான் அரசாங்கத்தின் கடனுதவி மற்றும் முதலீடுகள் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அமைச்சர் சம்பிக்க ரணவக்கவுக்கும் ஈரான் தூதுவர் எம்.என்.ஹசன் பூருக்கும் இடையில் நேற்றுமுன்தினம் மின்சக்தி எரிசக்தி அமைச்சில் பேச்சுவார்த்தை ஒன்று இடம்பெற்றது.

இதன்போது இலங்கையில் மின்சார கட்டமைப்பை பலப்படுத்தி நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு ஈரான் அளித்துவரும் ஒத்துழைப்பிற்கு அமைச்சர் சம்பிக்க ஈரான் தூதுவரிடம் நன்றி தெரிவித்துள்ளார். ஈரான் உதவியுடன் ஆரம்பிக்கப்பட்ட மின்சாரத் திடடங்களின் முன்னேற்றம் குறித்தும் இங்கு ஆராயப்பட்டன.

மேலும் ஈரான் மீதான அமெரிக்க படையினால் இலங்கையில் முன்னெடுக்கப்படும் மின்சாரத் திட்டங்களில் சிறிது தாமதம் ஏற்பட்டிருப்பதாக இதன்போது சுட்டிக்காட்டப்பட்டது. அத்துடன் பிரச்சினைகள் தொடர்பில் முக்கிய கவனம் செலுத்தி இலங்கையின் அபிவிருத்தி இலக்குகளை பூர்த்தி செய்ய முழு ஒத்துழைப்பு வழங்குவதற்காக ஈரான் தூதுவர் இதன்போது உறுதியளித்துள்ளார்.

மேலும் இலங்கையில் மின்சக்தி அபிவிருத்தி திட்டங்களில் ஈரான் முதலீடு செய்ய உள்ளதாக ஈரான் தூதுவர் மேலும் உறுதியளித்துள்ளார். (அ-2)



திடீர் விபத்து ஏற்பட்டால் அதிலிருந்து எவ்வாறு மக்களை காப்பாற்றுவது என்பது தொடர்பான பயிற்சி ஒன்று நேற்று முன்தினம் காலை கல்கிசை கடற்கரையில் நடைபெற்றது. இப் பயிற்சியில் விமானப்படையினருடன் கடற்படையினரும் இணைந்து செயற்படுவதைப் படத்தில் காணலாம்.

# தாய்லாந்து பெண்ணுக்கு அபராதம் விதிப்பு

(கொழும்பு)

கொள்ளுப்பிட்டி ஆர்.ஏ.டி.மெல் மாவத்தையின் விபசார விடுதியொன்றை நடத்த உதவிய குற்றச்சாட்டை ஒப்புக் கொண்ட தாய்லாந்து பெண்ணொருவருக்கு கொழும்பு கோட்டை நீதவான் கனிஷ்க விஜேரட்ன 50 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளார்.

பனிடா லிப்ட் எனும் இப்பெண் கடந்த ஓகஸ்ட் மாதம் 6 ஆம் திகதி கொள்ளுப்பிட்டி பொலிஸாரினால் கைதானார்.

பொலிஸ் உத்தியோகத்தர். ஒருவர் மாறுவேடத்தில் சென்று இப்பெண்ணுக்காக 3 ஆயிரம் ரூபாவை செலுத்தினார். அதன்பின் அப்பெண்ணும் மற்றும் பலரும் கைது செய்யப்பட்டனர்.

இப்பெண்ணுக்கு நேற்றுமுன்தினம் 50 ஆயிரம் அபராதம் விதித்த நீதவான் ஏனைய சந்தேக நபர்களுக்கு எதிராக குற்றப்பத்திரத்தை தாக்கல் செய்யுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (அ-2)

# இலங்கையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த ஐரோப்பிய நாடுகள் ஆதரவு வழங்கவேண்டும்

## ஐரோப்பிய எம்.பி.க்கள் கருத்து

(கொழும்பு)

இலங்கையில் நல்லிணக்கத்தையும் புனரமைப்பையும் முன்னெடுத்துச் செல்ல ஐரோப்பிய நாடுகள் ஆதரவை வழங்க வேண்டும் என ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் கருத்து வெளியிட்டதாக வான் ஓடின் தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய நாடுகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஐரோப்பிய ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் போன்றோர் கடந்த 5 ஆம் திகதி ஐரோப்பிய நாடாளுமன்றத்தில் சந்தித்து கலந்துரையாடிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அதன் விபரம் வருமாறு,

இலங்கையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் பொதுவில் உடன்பட்டுள்ளனர். அண்மையில் இலங்கைக்கு சென்று திரும்பிய நாடாளுமன்ற உறுப்பினர்களும் இதன்போது கருத்துக்களை பகிர்ந்து கொண்டனர்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை வெளியிடப்பட்டுள்ள போதும் அதனை நடைமுறைப்படுத்த இலங்கை அரசாங்கம் முன்வர வேண்டும்.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு தீர்வைக்காண நல்லிணக்கம் ஏற்படுத்தப்படுவது அவசியமானதாகும். இந்நிலையில் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை இறுதிப்போரில் இடம்பெற்ற குற்றச்செயல்கள் குறித்த தகவல் எதனையும் வெளியிடாமல் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு அந்த அறிக்கையை முழுமையாக நிராகரித்துள்ளது.

எனவே இலங்கை அரசாங்கம் குறித்த விடயங்கள் தொடர்பிலும் தமது கவனத்தை திருப்ப வேண்டும் என்று ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் கருத்துரைத்தனர்.

இதன்போது கருத்துரைத்த ஐரோப்பிய ஒன்றியத்துக்கான இலங்கைத் தூதுவர் ரவீந்திரநாத் ஆரியசிங்க, நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை நடைமுறைப்படுத்த அவகாசம் தேவைப்படுவதாக குறிப்பிட்டார். (அ-2)

# சுதந்திரதினம் குறித்த கொண்டாட்டங்களுக்கு 21 ஆயிரம் மில்லியன் ரூபா செலவிடப்பட்டது

## அமைச்சர் டி.ஜே.செனவிரத்தின தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் 64 ஆவது சுதந்திரதினம் தேசத்துக்கு மகுடம் கண்காட்சி மற்றும் அதனுடன் இணைந்த அபிவிருத்தி திட்டங்களுக்கு 21 ஆயிரம் மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டுள்ளதாக பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் டபிள்யூ.டி. ஜே. செனவிரத்தின தெரிவித்தார்.

எமது நாட்டை ஆசியாவின் ஆச்சரியமாக கட்டியெழுப்புவோம் என்ற தொனிப்பொருளில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் இம்முறை சுதந்திர தின விழா மிக விமர்சையாக நடத்தப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சுதந்திர தினம் குறித்து விளக்கமளிக்கும் மாநாடு நேற்று முன்தினம் பொது நிர்வாக அமைச்சில் நடைபெற்றது. இங்கு கருத்துத் தெரிவித்த அமைச்சர்,

அநுராதபுரம் ஸ்ரீ சம்புத்த ஜெயந்தி மாவத்தையில் இம்முறை சுதந்திர தின விழா நடைபெறுகின்றது. அமைச்சர்கள், வெளிநாட்டுத் தூதுவர்கள், பிரதிநிதிகள், முப்படைத் தளபதிகள், அரச அதிகாரிகள், 55 அங்கவீனமுற்ற படைவீரர்கள் உட்பட 2 ஆயிரம் பேர் இந்த நிகழ்வில் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதுதவிர முப்படை வீரர்கள், சிவில் பாதுகாப்புப்பிரிவு, பொலிஸ், இளைஞர் படை என்பவற்றைச் சேர்ந்த 2ஆயிரத்து 600 பேர் அணி வகுப்பு மரியாதை நிகழ்வில் பங்கு பற்றுவர்.

இம்முறை தேசிய சுதந்திரதின விழாவை வெகு விமர்சையாக நடத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.


இதனுடன் இணைந்ததாக நாட்டின் பல்வேறு பகுதிகளில் மத அனுஷ்டானங்கள் நடத்தப்படும்.

பௌத்தமத அனுஷ்டானங்கள், பிரதமர் தி.மு.ஜயரத்னவின் தலைமையில் ஜயஸ்ரீ மகாபோதிக்கு அருகிலும் இந்து மத அனுஷ்டானங்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் தலைமையில் அநுராதபுரம் கதிரேசன் கோவிலிலும் கத்தோலிக்க மத அனுஷ்டானங்கள் அமைச்சர் மில்ரோய் பெர்ணாந்துவின் தலைமையில் சென்ஜோசப் தேவாலயத்திலும் முஸ்லிம் மத அனுஷ்டானங்கள் அமைச்சர்களான ரிசாத் பதியுதீன், ஏ.எச்.எம் பௌசி ஆகியோரின் தலைமையில் முஹிதீன் ஜும்ஆ மஸ்ஜிதிலும் நடைபெறும்.

தேசிய சுதந்திரதின விழாவின் போது சகல இனங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தி 100 மாணவர்கள் தேசிய கீதம் இசைக்கவுள்ளனர். (அ-2)

# இரண்டாம் உலக யுத்தம்

## ஒரு மீள்பார்வை 24



வி.சர்ச்சில்



ஹிட்லர்

அதேநேரத்தில் அட்லாண்டிக்கில் இருந்த ஹிட்லரின் கடற்படை சக்திகளின் நடவடிக்கைகள் அதிகரித்தன. ஆனால், சோவியத் யூனியனின் மீது படையெடுப்பதற்காக மிகப்பெரும் அளவில் தொடங்கிய தயாரிப்பு, பிரிட்டனுள் நுழைவதைப் பற்றிய சிந்தனையிலிருந்து ஹிட்லரின் தலைமையின் கவனத்தை இறுதியாகத் திசை திருப்பியது. மேலும் ஜேர்மன்; இத்தாலி மற்றும் ஜப்பானின் கூட்டு, பலப்படுவதானது சோவியத் யுனிய னுக்கு எதிரான ஆக்கிரமிப்போடு மிக நெருக்கமாகத் தொடர்புடையதாக இருந்தது; இது 1940 ஆம் ஆண்டு செப்ரம்பர் 27 ஆம் திகதி கையொப்பமான பெர்லின் உடன்படிக்கையில் வெளிப்பட்டது.

பிரட்டனுக்காக நடந்த சமரை 3 கட்டங்களாகப் பிரிக்கலாம். முதல் கட்டத்தில் (1940 ஆம் ஆண்டு ஆகஸ்டு 13- செப்ரம்பர் 6) வானில் ஆதிக்கம் பெற ஹிட்லரின் படைத்தலைமை முயற்சித்தது. பிரட்டிஷ் விமானப் படையின் விமானத்தளங்களின் மீது ஏராளமான தாக்குதல்கள் தொடுக்கப்பட்டதற்கும் (நாளொன்றுக்கு 1000-1800 விமானத் தாக்குதல்கள்) விண்ணில் நடைபெற்ற கடும் சண்டை நடக்கலாயின. ஆனால், ஜேர்மனிய விமானப்படை, விமானத் தளங்களின் மீதான தாக்குதல்களிலிருந்து லண்டனின் மீதான குண்டு வீச்சிற்குத் தன் சக்திகளைத் திருப்பியதால் தன் குண்டுவீச்சு விமானங்களின் இழப்பை ஈடுசெய்து மேற்கொண்டு ஹிட்லர் துருப்புக்களுக்கு தரும் எதிர்ப்பைப் பலப்படுத்த ஆங்கிலேயர்களுக்கு வாய்ப்புக் கிடைத்தது. செப்ரெம்பர் 15 ஆம் திகதி இரவில் லண்டன் மீது



ஜேர்மனியப் விமானப்படையின் தாக்குதலில் பேரழிவுக்குள்ளான பிரித்தானிய நகர்ப்பகுதி

நடந்த குண்டுவீச்சில் 1000 க்கும் அதிகமான பாசிச விமானங்கள் கலந்து கொண்டன. நகரின் மேலே க்டும் வான் சண்டை மூண்டது.

தொழிற்துறையின் இயக்கத்தைச் சீர்குலைப்பதுதான் இந்தக் குண்டு வீச்சுக்களின் நோக்கமாகும்.

மொத்தமாக பிரிட்டனுக்காக நடந்த சமரில் பாசிச ஜேர்மனிய விமானப்படை 46ஆயிரத்துக்கும் மேற்பட்ட விமானத் தாக்குதல்களைத் தொடுத்து பிரிட்னின் மீது சுமார் 60 ஆயிரம் டன் குண்டுகளை வீசியது, 1700 க்கும் கூடுதலான விமானங்களைப் பறிகொடுத்தது. ஆங்கிலேயர்கள் 915 விமானங்களையும் 500 க்கும் அதிகமான விமானிகளையும் இழந்தனர். இக்குண்டுவீச்சுக்களினால் ஒன்றுமறியாத சாதாரண மக்கள்-86

## யுத்தத்தின் தொடக்கம். சோவியத் யூனியனுக்கு எதிரான பாசிச ஆக்கிரமிப்பிற்கான ஏற்பாடுகள்

களுக்கும் இதுதான் காரணம்.

இரண்டாவது கட்டத்தின் (1940 செப்ரம்பர் 7- நவம்பர் 13) முக்கிய அம்சம் லண்டனும் பிரிட்டனின் மற்றய நகர்களும் குண்டுவீச்சுகளுக்கு உள்ளாக்கப்பட்டதாகும். மக்களை அச்சுறுத்தி அவர்களின் தார்மீக பலத்தைக் குலைப்பதுதான் இதன் நோக்கமாகும். செப்ரம்பர் 7 ஆம் திகதி ஜேர்மனிய குண்டு வீச்சு விமானங்கள் இரவு 8 மணி முதல் காலை 7 மணிவரை லண்டனை இடைவிடாது தாக்கி 300 டன்கன வெடி குண்டுகளையும் 13000 எரி குண்டுகளையும் வீசின. நகரின் விமான எதிர்ப்பு தற்காப்பு பலவீனமாயிருந்ததால் ஜேர்மனியர்கள் பல கட்டடங்களை நாசமாக்கினர்.



[illegible]களத்தில் வான்தாக்குதலுக்கான அச்சுறுத்தல், [illegible] ஆராயும் படையாள்

இதற்குப் பின் லண்டனின் மீதான விமானத் தாக்குதல் திரும்பத் திரும்ப

பிரிட்டனின் தலைநகருக்கு கொண்டு வரப்பட்ட குண்டுவீச்சு விமானப் படையும் விமான எதிர்ப்பு பீரங்கிகளும் பாசிச பிணந்தின்னி கழுகுகளுக்கு பலத்த எதிர்ப்பைக் காட்டின. இதன் விளைவாய் ஜேர்மனியர்கள் 60 விமானங்களையும் ஆங்கிலேயர்கள் 26 விமானங்களையும் இழந்தனர். இதையடுத்து லண்டனின் மீதான குண்டு வீச்சின் வேகங்கள் குறைய ஆரம்பித்தன. ஆங்கிலேயர்களின் தார்மீகபலம் உடைக்கப்படவில்லை.

மூன்றாவது கட்டத்தில் (1940 நவம்பர் நடுப்பகுதி முதல் 1941 மே வரை) பாசிச ஜேர்மனியப் படைத் தலைமை தனது விமானப்படையின் நடைமுறைத்தந்திரத்தை மாற்றிக் கொள்ளும்படி கட்டாயப்படுத்தப்பட்டது. இது தனது பகல்நேர விமானத் தாக்குதல்களை பெரிதும் குறைத்துக் கொண்டு இரவு நேரத் தாக்குதல்களை அதிகப்படுத்தியது; அதிலும் பர்மிங்காம், லிவர்பூல் பிரிஸ்டோல், கோவெண்டிரி போன்ற நாட்டின் முக்கிய தொழில்துறை மையங்களைத்

**வி.அ.மத்சுலேன்கோ**

தாக்கத் தொடங்கியது. லண்டனின் மீதான குண்டு விச்சுக்களும் முறையாகத் தொடர்நதன. பிரிட்டிஷ்

### பிரான்ஸின் சரணடைவிற்குப்பின் பிரிட்டன் மீதான தாக்குதல் ஆரம்பம்

ஆயிரத்துக்கும் அதிகமானோர்-பாதிக்கப்பட்டனர்; இவர்களில் சுமார் 40 ஆயிரம் பேர் உயிரிழந்தனர். 10 இலட்சத்துக்கும் மேலான கட்டடங்கள் பழுதடைந்தன. பல நகரங்கள் பேரழிவுக்குள்ளாயின.

ஆனால், பாசிச ஜேர்மினியின் முக்கிய நோக்கம்- பிரிட்டனை யுத்தத்திலிருந்து வெளியேற்றுவது- நிறைவேறவில்லை. பிரிட்டனின் தொழிற்துறை விசேடமாக பாதிக்கப்படவில்லை, இது ஜேர்மனிக்கு எதிரான யுத்தத்தைத் தொடர்ந்தது. அக்கால கட்டத்தில் சோவியத் யூனியனுக்கு எதிரான யுத்தத்திற்குத் தயார்ப்படுத்திக் கொள்வதுதான் ஹிட்லரின் முக்கிய கடமையாக இருந்ததும், இதானால், ஜேர்மனியர்கள் நன்கு சண்டைபோடக் கூடிய விமானப் படைப்பிரிவுகளை மேற்கேயிருந்து கிழக்கே கொண்டு வந்ததும் ஆங்கிலேயர்களின் வெற்றிக்குத் துணை செய்தன. சோவியத் யூனியனை முறியடிப்பதும் அவசியம், இதற்குப்பின் உலக ஆதிக்கத்தை வெல்லுவது சம்பந்தமான மற்றய திட்டங்களை நிறைவேற்றுவது என்று ஹிட்லர் முடிவு செய்தார். இதுபற்றி ஜெனரல் கால்டர் தனது நாட்குறிப்பில்

பின்வருமாறு எழுதினார்: 1940 ஆம் ஆண்டு ஜூலை 3 ஆம் திகதி இரண்டு பிரச்சினைகள்- பிரிட்டிஷ் பிரச்சினையும் கிழக்கத்தியப் பிரச்சினையும்- முன் நிற்கின்றன என்று அவன் குறிப்பிட்டான். சோவியத் யூனியனின் மீது படையெடுப்பது பற்றிய திட்டம் ஜூலை 31 ஆம் திகதி ஹிட்லரின் படைத் தலைமையகத்தில் உடனடிக் கடமையாக விவாதிக்கப்பட்டது. "ருஷ்யா முறியடிக்கப்பட்டால் பிரிட்டன் தனது கடைசி நம்பிக்கையை இழந்துவிடும்" என்று பாசிச ஜேர்மனியத் தலைமை முடிவு செய்தது. எனவே பிரிட்டனின் எதிர்காலம் கிழக்கு நோக்கிய படையெடுப்பின் விளைவுகளைச் சார்ந்திருக்குமாறு செய்யப்பட்டது. அதேநாளன்று ஜூலை 31 ஆம் திகதி கால்டர் எழுதினார்: "முகமூடி: ஸ்பெயின், வடக்கு ஆபிரிக்கா, பிரிட்டன்."

யுத்தக் கண்ணோட்டத்திலிருந்து பார்த்தால் ஜேர்மனிய விமானப் படையின் குண்டுவீச்சுகள் தமது இலட்சியத்தை நிறைவேற்ற இயலாமல் போனதற்கு முக்கிய காரணம் ஆங்கிலேயர்கள் எதிரியின் விமானத் தாக்குதல்களை முறியடிக்கும் முறைகளைப் படிப்படியாகக் கற்றுக் கொண்டதுதான். வானொலி கண்டு பிடிப்புச் சாதனம் கண்டு பிடிக்கப் பட்டதானது இதில் அவர்களுக்கு விசேட உதவி புரிந்தது. 1940 ஆம் ஆண்டிலேயே இது பிரிட்டனின்




லண்டன் மீதாக ஜேர்மனியின் விமானங்கள் தாக்குதலுக்காக

வான் எதிர்ப்பு தற்காப்பில் பயன் படுத்தப்பட்டது.

அட்லாண்டிற்கிற்கான சமர் (1939 செப்ரெம்பர்-1941 ஜூன்) காலனிகளிலிருந்து பிரிட்டனுக்கு வந்துகொண்டிருந்த சப்ளையை குலைத்து இதை முற்றுகையால் நசுக்குவதுதான் இதன் நோக்கம். இச்சமரில் சிறப்பு அம்சம் என்னவெனில் முதலில் இருதரப்புக் களிலுமே சமுத்திரப் போக்குவரத்து மார்க்கங்களில் குறைவான சக்திகள் தான் செயற்பட்டன. ஆனால், இந்தச் சூழ்நிலைகளிலும் நீர்மூழ்கிக் கப்பற் படைக்கு எதிரான பிரிட்டிஷ் தற்காப்பு முறை பலவீனமாக இருந்ததால் பாசிச ஜேர்மனிய நீர்மூழ்கிக் கப்பல்கள் நன்றாக பயன்படுத்தப் பட்டன.

(தொடரும்)



# நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய அதிசு
# மஹா கும்பாபிஷேக சிறப்


பக்தனுக்கு அருள்புரியும் பார்வதியே வந்திடம்மா
தரமான கட்டிட பொருட்களை பெற்றுக் கொள்ள
**கஜமுகன் ஹாட்வெயர்**
147,149, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.இல: 021 222 2833

பக்தனுக்கு அருள் புரிய பார்வதியே வந்திடம்மா
**RUBA VERSATILE TRADES**
Colombo-office:
176A,central Road,
colombo-12
Tel:0115-8302147,0115-83219
fax:0112392412
No:104A stanly Road,
Jaffna
Tel:-0212228330
Fax:-021-2227036

உன்னடியில் நாமிருக்க அருள்செய்வாய் தாயே
**யோகாஸ் நகைமாடம்**
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P:-021 222 9269
0776845450

பாரிலே துன்பம் போக்க அருள் புரிந்திடம்மா
**ஸ்ரீ அம்பிகை பல்பொருள் வாணிபம்**
அம்மன் வீதி,
நயினாதீவு-01
தொ.பே:-0602212995

உன்னை நினைத்தாலே புண்ணியம் பெருகிடுமே நாகபூஷணித்தாயே
பொருட்களை மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள நாட வேண்டிய இடம்
**அபினஜா ஸ்ரோர்ஸ்**
பிரதான வீதி,5 ஆம் வட்டாரம்.
நயினாதீவு.

DHL
நாகபூஷணித்தாயே எம்மைக் காத்திடம்மா
**திருமுருகன் கொம் நெற்**
உள்ளூர், வெளிநாடுகளுக்கான ஆகாய,
கடல் மார்க்கமான துரித கடிதங்கள், பொதிகள் சேவை
இல.259,கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
இல.46, ஆடியபாதம் வீதி, யாழ்ப்பாணம்.
இல.18, பிரதான வீதி, நெல்லியடி,
இல.05, திருநகர் பிரதான வீதி, கிளிநொச்சி.
2B, நெல்சன் பிளேஸ், கொழும்பு.

ஊரெங்கும் மங்களம் உன்னால் பெருகட்டும் தாயே
**நியூ ராகம்ஸ்**
உங்களுடைய முகூர்த்தப்பட்டுப்
புடைவைகளுக்கும்
ரெடிமெட் ஆடைகளுக்கும்
நாடவேண்டிய ஸ்தாபனம்
இல.7,8,24,நவீன சந்தை
வீதி (உட்புறம்),
யாழ்ப்பாணம்.
தொ.பே:-021 222 7179


## வானுயர உயர்ந்த வண்ணக் கோபுரம்



அறிவுவளர் நயினை நாகபூஷணி அம்மாளின் பாதகமலங்களை எப்பொழுதும் வேண்டி அருட்சிக்கும் பேறுபெற்ற நாம் அம்மாளின் அருள் ஆசிவேண்டிநிற்கின்றோம். தன்னை நாடி வந்து மனமுருகி வழிபடும் அடியவர்களுக்கு வேண்டுவனவற்றை ஈந்தருளும் உலகமாதா பாரிய ஸ்ரீமாதா அருளாட்சி செய்யும் திருக்கோயில் புனருத்தாரணம் செய்து புதுப்பொ லிவுடன் இன்று கம்பீரமாக காட்சியளிக்கின்றது. வானுயர்ந்து நிற்கும் அதிசுந்தர நூதன நவதள மஹா இராஜகோபுரத்திற்கும் அம்பிகையின் ஆலயத்தை புனருத்தாரணம் செய்த தென் சிற்பத்தை , சிற்பக்கலைஞரின் கைவண்ணத்தையும் காட்டிநிற்கின்றது. அம்பிகையின் பல திருவிளையாடல்களையும் குறிக்கும் நிலைகள் அழகானதாகும். அழகுக்கு ஒருவரும் இல்லாத வல்லி அருமறைகள் பேசும் புனருத்தாரண பிரதிஷ்டா திருமஞ்சன திருக்குடமுழுக்கு விழா நடைபெறவுள்ளது.


இதையிட்டு நாம் அளவிலா ஆனந்தமடைவதோடு பூர்வஜென்ம பாக்கியத்தினால் எமது இப்பிறவியில் பிறந்த பயனை பெற்று உய்வோம் என்பதில் சிறிதும் ஐயமில்லை. புனருத்தாரணம் தேவர்கள், முனிவர்கள், நாகவம்சத்தவர்கள் மற்றும் தவசீலர்களின் வழிபாட்டு முறையை அங்கீகரித்துள்ளது. ஆரியம் புகழ் நாகஇராஜேஸ்வரி அம்பாள் நாகத்தினூடாக அர்ச்சித்த இடமாகும். அதன் காரணமாகவே இக் காரணப் பெயரை காவியதோடு நாகராஜனுக்கும் கருடனுக்கும் அழியாத முத்தியின் சாமித்ய பதவியை அபயம் காத்த அம்பிகை கொடுத்துள்ளார். பிறவியையும் கடந்து சப்தசாகரத்தின் மத்தியில் அருளாட்சி செய்யும் அம்பிகைக்கு புனராவர்த்தன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் 33 குண்டங்களுடனும் அட்டமோத்திர யாகசாலையில் ஏழுநாட்களும் 12 காலங்களும் முறையாகக் கற்றாங்கு எரியோம்பும் சிவாச்சாரிய சிரோன்மணிகளால் நடாத்தப்படவுள்ளது. 2012 தை மாதம் உத்தராயணமும் ரேவதி நட்சத்திரமும் கூடிய நல்வேளையில் அம்பிகை சக்தி பீடங்களில் உயர்வான புவனேஸ்வரி பீடத்தில் மந்திர சிம்மாசனத்தில் அமர்ந்து சூரிய, சந்திரர்கள் உள்வரை சாகித்யமாகி அடியவர்களின் வழிபா டுகளை ஏற்றுகொள்வார். பஞ்சகிருத்தியங்களையும் நடாத்தும் புருஷோத்தர்களான தர்மம், அதர்மம், காமியம், மோசமாதி இவற்றைக்கொடுத்து அஞ்ஞானத்தை நீக்கி மெய்ஞ்ஞானத்தை அருளுவாள். அருவுருவத் திருமேனியில் சர்ப்பராஜகுடைதாங்க திருமறைகளின் நாத ஒலி விண்ணையும் பரவ, விண்ணோர்கள் எல்லாம் அம்பிகையை தரிசித்து பேறுபெற குடமுழுக்காம் மந்திர நீராட்டு வைபவத்தை நடாத்துவதற்கு கொடுத்துவைத்தவர்களாவர். நம் வளந்தோர்களின் ஆசியும் அம்பிகை யும் கடைக்கண் பார்வையும் எம் மீது நயனதீட்சை செய்து ஆட்கொள்ள பராசக்தியை வழிபட்டு தொண்டு செய்ய அம்பாள் கருணைபுரிய வேண்டுகிறேன்.


எல்ல உயிர்களும் நலன்கள்பெற்று வையத்து வாழ்வாங்குவாழ பிரார்த்திக்கின்றேன். இவற்றுக்கெல்லாம் காரணகர்த்தாவாக விளங்கும் தர்மத்தை பரிபாலிக்கும் தர்மகர்த்த பரிபாலன சபையின் முயற்சி திருவினையாக்கும். அம்பிகையின் கைங்கரியத்தை சிரமேற் கொண்டு திருப்பணிகள் செய்த தர்மசீலர்கள், தனவான்கள் பலவழிகளில் உதவும் கொடையாளிகளின் நன்கொடைகள் ஏராளம். சான்றே அவற்றை ஏற்று கண்ணுற்று ஆற்றிய சரியைத்தொண்டானது சிவ புண்ணியத்தைச் சேர்ந்தது.

சரியைத் தொண்டாற்றியவர்கள் எல்லாம் அம்மனின் குடமுழுக்கில் நனைத்து புண்ணிய சீலர்களாக தொண்டர் நம் பெருமைபேசும் அழியாத புகழையும் அம்பிகையின் பாதகமலங்களையும் சரண்புகுந்து அழியாத பேரின்பப் பெருவாழ்வு பெறுவார்களாக.

**சுபம்**

**சாகித்ய சிரோண்மணி**
**சிவஸ்ரீ.ப.முத்துக்குமாரசுவாமிக்குருக்கள்**
**ஆலய பிரதமகுரு, நயினை**
**நாகபூஷணி அம்மன் தேவஸ்தானம்**





## பேராசிரியரின்



சக்திபீடங்கள் அறுபத்து நான்கினுள் மணித்தீவில் (மணித்தீபத்தில்) புவனேஸ்வரிபீடம் அமைந்து விளங்குவதை தேவிபாகவதம், தேவி பராக்கிரமம் முதலிய சாக்த நூல்கள் குறிப்பிடுகின்றன. தொன்று தொட்டு நயினாதீவுக்கு வழங்கிவரும் பெயர்களுள் 'மணித்தீவு (மணித்தீபம்) என்பதும் தனிப் பெருஞ் சிறப்புடைய திருப்பெயராகும். இப்பெயரின் அடிப்படையில் நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலயம் இலங்கையில் புவனேஸ்வரி பீடமாகப் போற்றி வணங்கத்தக்க பெருமைக்குரியதாகத் திகழ்கின்றது.

வரலாற்றுத் தொன்மையும் வழிபாட்டுச் சிறப்பும்மிக்க இவ்வாலய கர்ப்பக்கிரகத்தினுள் சுமார் மூன்றரை அடி உயரமள்ள ஐந்து தலைகள் உடைய கருநாகக் கற்சிலை உருவமும் அதன் அடியில் உள்ள ஓர் அழகான பீடத்தில் ஓரடி உயரமான அதிசயமான வடிவமுடைய அம்பாளின் அருவுருவத் திருவுருவமும் பண்டுதொட்டு அமைந்து விளங்குகின்றன. தானாகத் தோன்றிய இவ்விரு வடிவங்களும் **தானே எழுந்த இத் தத்துவ நாயகி வானோர் எழுந்து மதியை விளக்கினாள்** என்ற திரு மந்திரப் பாடலுக்கு எடுத்துக்காட்டாக குண்டலினி சக்தியின் தூலவடிவங் களாக விளங்குகின்ற 11.03.1951 இல் இத்திருத்தலத்திற்கு வருகைதந்த தென்னிந்திய சிற்பக்கலை அறிஞர் வி.எம். நரசிம்மன் என்பவர் இவ் வாலய நாகச்சிலையைக் கருவி மூலம் பரிசோதனை செய்து, இச்சிலை பதின்நான்காயிரம் வருடப் பழைமையுடையதென்றும் நாகசக்தி வணக் கத்திற்கு ஆதாரமாக உலகில் வேறெங்கும் பார்க்க முடியாத வகையில் இச்சிலைகள் பிரத்தியட்சமாக அமைந்துள்ளன என்றும் குறிப்பிட்டுள் ளார். சக்தி பீடங்கள் பற்றி ஆய்வினை நிகழ்த்திவரும் மஞ்சுளா ரமேஷ் என்பவர் 51 சக்தி பீடங்கள் (இரண்டாம் பாகம்) என்ற தனது நூலில் இலங்கையி லுள்ள சக்திபீடம் நாகபூஷணி அம்மனே என்பதற்கு இந்த தலத்தின் பழை மையும் பெருமையுமே சான்றாக அமைந்திருக்கின்றன. நாகபூஷணி அம்மன் மூலவர் வடிவம் எங்குமே காணக்கிடைக்காத அற்புதமான சுயம் புவடிவம். ஐந்து தலைநாகம் படமெடுத்தது போலவும் அதோடு லிங்கம் போன்ற அமைப்பும் அதிலே தேவியின் அம்சமுமாக மெய்சிலிர்க்க வைக்கும் வடிவம் குருக்கள் வெள்ளிக்கவசத்தை அகற்றி எங்களுக்கு காண்பித்தபோது மெய்சிலிர்த்துப் போனோம். இந்த அம்மன் நாகதோஷம் போக்குவதிலும் புத்திரபாக்கியம் அளிப்பதிலும் மிகுந்த வரப்பிரசாதி ரொம்ப சக்தி வாய்ந்தவள் என்று குறிப்பிடுவது மிகவும் பொருத்தமான கூற்றாகும்.

கி.பி 1788 இல் சிறு கட்டடமாக விளங்கிய ஸ்ரீ நாகபூஷணி அம்பா ளுக்கு

# கவிதைக் கலசம்

## சங்குநாதம்

### முகத்திரைகள்

இருட்டுக்களை தீக்குச்சியால்
கிழியுங்கள்
நிஜத்தின் குழந்தைகள்
பிறக்கட்டும்
மரணத்தின் மூடுபனியை விரட்டுங்கள்
சொந்த வாழ்க்கையின் கையில்
தீப்பந்தங்கள் ஏந்தி
வறுமையின் முகத்திரையை
கிழியுங்கள்
ஆடம்பர அசுரர்களை அழித்து
பணம் குவிக்கப்பட்டுக்கிடக்கும்
மாளிகைகளை நொருங்குங்கள்
விதவைகள் கண்ணீராவது
விடுதலையாகட்டும்
வேற்றுமையில் நசிந்த சமூகத்தை
ஒற்றுமையில் ஒன்று சேர்ப்போம்
ஆயுள் என்பது
இயற்கைபோட்டதீனி
இதைத் தின்று முடித்து
இறந்துபோகும் முன்
இறக்காத ஒன்றை
உன் தலைமுறைகளுக்கு
விட்டுப்போ...

செ.மோகன்ராஜ்
நெடுந்தீவு-12

### கனவுகளாய்

இடிந்துபோய் -நான்
உட்கார்ந்த இரவுகள்
கண்ணீர் வற்றிக் கடலெடுத்து
அழுத கணங்கள்
படித்த பாடங்கள் மறந்து
கவிதைகளாய் விடையளித்த
பரீட்சைகள்
உனக்குப் பின்னால்
ஓடியது மனசு
சூனியமாய் தெரியும்
எதிர்காலக் கனவு -எல்லாம்
காதல் தீவிரவாதி நீ தந்தது
விரல்கள் கோர்த்து
பயணித்த பயணங்கள்...
தொலைபேசிச் சினுக்கங்கள்...
இயற்கையைக் காட்சியாக்கிய
நம் காதல்
இல்லாமலே போய்விட்டது

சிவாஷா, மல்லாகம்

### தோழன்

விழியில் விழி மூடு
விழிக்கும்போது- என்
விழித்திரைக்குள்
வரவேண்டும் - நீ
என் உயிர்த்தோழனாய்...
விதியை மதி
வெல்லும் போதும்
உயிர்விட வேண்டும்
நான் என்றும்
உன் உயிர்
தோழியாய்...

எஸ்.ஜிந்துஜா,
கோண்டாவில்

### அவரவர் பார்வையில்

**மௌனம்**
விடைகூற முடியா
வினாவுக்கான தீர்வு

**பட்டதாரி**
துளிர்விட காத்திருக்கும்
பட்டமரங்கள்

**பட்டதாரி**
வீட்டில் தண்டச்சோறு
ஊரில் சமூக சேவகன்
நாட்டில் வேலையற்றவன்

பா.மதனபாரதி
அல்வாய்

**மௌனம்**
நீயும் நானும் சந்திக்கும் போதெல்லாம்
வார்த்தைகள் மௌனமாகி விடுகிறது
கண்கள் வேகமாக பேசிக்கொள்கிறது

**உயிர்**
உடம்பு எனும் வாடகை வீட்டில்
உடற்சுமை உயிர்

**நட்பு**
நான் வாடி நின்றேன் நீ
நெருங்கி வந்தாய்
உன்னிடம் இருந்தது தூய அன்பு
என் காயத்தின் மருந்தாக

பா.கங்கா
வண்ணார்பண்ணை

### ஏனோ...

என் உள்ளக் குமுறல் கேட்டு
உறங்குகின்ற மேகங்கள்
உயிர்த்தெழுகின்ற போதும்
உன் உள்ளம் மட்டும்
உயிர்ப்பின்றி உறங்குவது ஏனோ...?

சி.ராதிகா
பொலிகண்டி

### முடிவில்லா பயணங்கள்

ஓய்வது இல்லாமல்
ஓடியோடி உழைத்திடினும்
குடும்பமதில் மகிழ்ச்சியில்லை
இயந்திரமாய் செல்லும் வாழ்க்கையிலே
எத்தனையோ பல வழிகள்
எம் காலது தளரும் வரை
ஓய்வின்றிப் பயணித்தால்
நீண்ட பாதையின்
முடிவுதான் என்னவோ...!

தென்கோவையூர்
ம.நிரோஷனா

### இமயம் தொட...

முகம் தெரியாதவர்க்கும்
வணக்கம் கூறும்
வெள்ளையரிடம் நீ கற்றுக்கொள்
எல்லா இனத்திற்கும்
புரியும் ஒரே மொழி
அதுதான் புன்னகை
அதை உன் ஆயுதமாக்கு
புரியாத புதிர்களைக்கூட
புன்னகையால் அவிழ்த்திடலாம்

மாவை நா.கஜேந்திரன்

### நினைவுள் மீளும் மின்கம்பம்

உன் நிமிர்வும் பொதுநலமும்
ஆராதனைக்குரியவை
பலரின் வருடல்களுக்கு மேனி கொடுத்து
பழக்கப்பட்டபோதும் நீ வெளிப்படுத்திய
அந்தநாள் நீதி நினைவுள் மீளும்
உன்னைக் கடக்கின்ற ஒவ்வொரு தடவையும்
ஏதோவென்று... மனதைக் குடைகிறது
உன்னைப் பற்றிய பேச்சுக்கள்...
என்னிலிருந்து விடுபடமுடியாதனவாய்..
வேரூன்றி எனது நினைவுள் தளைக்கிறது
நேற்றிரவும் உன்னருகே
சிறுபொறி வெட்டியதாம்
என் காலைத்தரிசனம் நீயானபோது
உனது பற்றுகையில் கடக்கும்
மின்கம்பங்களுக்கிடையே ஒரு வௌவால்
தொங்கிக் கொண்டிருக்கிறது விறைத்தபடி...!

கவிஞர் சு.க.சிந்துதாசன்

## மௌனத்தின் தேடல் – 106



### உல்லாச களியாட்டம்

இளம் சிட்டுக்களே...!
உன் ஒத்த பிஞ்சுகள்
ஊன்றுகோலோடு உலாவரும்போது
உல்லாச சைக்கிள் ஓட்டம்....
மனக்காயத்தோடு பயணிப்போரை
நோகவைக்கும் என்பதை உணர்ந்தாவது
உல்லாச களியாட்டத்தை...
தள்ளி வைத்தால்தான் என்ன

வ.ச.செல்வராசா
திருநாவலூர்

### துணிவே துணை

சித்திரம் பேசுதே- என்
சிந்தையை கவருதே
ஊனம் உடலிலே
உள்ளம் துணிவிலே
பரந்த இவ்வுலகிலே- எவர்க்கும்
பாரமில்லா ஜீவன்கள்

சியாமி

### பாடமடி நீ எனக்கு

விந்தை புரியும் வீரமணிகளே
கையிழந்தீர் காலிழந்தீர்
துணிவை இழக்கவில்லை
காலிழந்த எனக்கு -உங்கள்
காட்சி ஒரு பாடமடி
ஊனமுள்ள அனைவருக்கும்
ஊக்குவிக்கும் கோலமடி

க.அருணகிரி

### விதி

சிறகு இழந்த
சிறு கிளிகள் நாம்
சிறகடித்து வீதியில் செல்ல
விதி விடுமோ! வாழ்வுக்கு
வழிவருமோ!

தீ.சயூதரன்

### தொடரும்

பயணத்தின் தூரத்தை
பாதம் அறியாதிருக்க நெஞ்சில்
பாரச்சுமை தாங்கி தேகம் வலி ஓங்க
மழலைகளின்
பயணம் தொடர்கிறதே!

கே.ஆர்.விஜயகுமார்
யாழ்ப்பாணம்

### பயணம்

கொடிய போரால்
அழிந்து போன
எங்கள் தேசம்
வெளிநாடுகளின் உதவியுடன்
மீளவும் கட்டி
எழுப்பப்படுவதைக்காண
நாம் சைக்கிளில்
புறப்பட்டு விட்டோம்

சு.ஜெயரூபன்
பருத்தித்துறை

### எங்கே பயணம்

கனவில் தோன்றும் காட்சிபோல்
இரவில் சிறுவர் பயணமா?
அண்ணன் தங்கை பாசமா?
தூரபயணம் வேண்டாமே
தங்கை நிலையோ பரிதாபம்

க.அபர்ணா
வட்டுக்கோட்டை

### நம்பிக்கை

யார் யாரையோ நம்பி நின்றோம்
எல்லோருமே கைவிட்டனர்
கல்வியை நாம் நம்பிப் போறோம்
கைவிடாதென்ற எண்ணத்துடன்

துணவியூர் நடா

### நிலைப்பதற்காக?

வண்டியின் பின் இருக்க
வசதிகள் இல்லை
நின்றாவது நான் வந்து
படிக்கிறேன் அண்ணா
வாழ்க்கையில் நின்று
நிலைப்பதற்காக

காயத்திரி யஸ்ரினா
துணவி

### இருக்கையில்லா பயணம்

எத்தனையோ தடைதாண்டி
மீண்டவர்கள் நாங்கள்
அத்தனையும் அனுபவித்த
எங்களுக்கு இந்த
இருக்கையில்லா
சைக்கிள் பயணம் புதிதல்ல
தொடரும் எம் பயணம்

மு.அருமைச்சந்திரன், வரணி

### செய்தி

அண்ணன் தங்கை
இருவருமே
அடர்ந்த காட்டின்
நடுவினிலே
அனல் கக்கும்
வெயிலிலே
அழைத்துச் செல்ல
யாருமின்றி
அவசரமாய் செல்வது
அன்பான செய்தி
கேட்டா-இல்லை
அவலமான செய்தி கேட்டா

அ.அன்ரன், யாழ்ப்பாணம்

### பாசத்தின் வெளிப்பாடு

மிதிவண்டியை அண்ணன்
அதிவேகமாய்ச் செலுத்த
அதிலேறிய தங்கை பின்னால்
அமராது நிற்கின்றாள் துணிவோடு
இது சாகச விளையாட்டல்ல
சகோதர பாசத்தின் வெளிப்பாடு

துரை, தென்மட்டுவில்

### பாசப்பறவைகள்

வறண்டு போன காட்டினிலும்
வாட்டும் இந்த வெயிலிலும்
கரடுமுரடு பாதையிலும்
அண்ணன் துணை நம்பி
தங்கை சுமை தாங்கி
அவசரமாய் பறக்கும்
பாசப்பறவைகள் இவர்கள்

திருமதி அ.மேரிஅல்போன்சா, குருநகர்

## சங்குநாதம் மௌனத்தின் தேடல் – 107

**அன்பு வாசகர்களே !**



உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.
எனும் முகவரிக்கு 03.02.2012 ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளிற்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -



# நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய அதிச
# மஹா கும்பாபிஷேக சிறப்
























## ஆலய தலைவரின் வாழ்த்துரை



இன்றைய உலகில் ஆன்மீகம், ஆரோக்கியம் என்பது மனித வாழ்வின் இருகண்கள் என்றால் மிகையாகாது. இந்த வகையில் உயரிய நற்சிந்தனைகளைக் கொண்டதான இந்த மதநெறி உலகெங்கும் பரவி இருந்ததாக வரலாறுகள் உண்டு. சிறப்பாக பாரத கண்டத்தின் தொன்மையான இந்த இரு விடயங்களையும் அன்று முதல் இன்று வரை பழைமை மாறாது வழிப்படுத்தி வரும் நாடு நம்நாடு என்றால் மிகையாகாது.

எம்முன் தோன்றாத்துணையாகநின்று நெறிப்படுத்தும் சக்தியை அன்னையாகவும், தந்தையாகவும் வழிபடும் மரபு இந்துக்களின் தனிச்சிறப்பாகும். இந்த வகையில் அகில உலகிற்கும் தாயான அன்னை பல பல நயங்களில் அழைக்கப்படுகின்றாள். இலங்கையில் ஏக சக்திபீடமாக எழுந்தருளி இருந்து அருள் புரிபவள் அன்னை நயினை ஸ்ரீநாகபூஷணி . இத்தாய்க்கு 1998ஆம் ஆண்டின் பின் இன்று 29.01.2012 ,ல் மகா கும்பாபிஷகம் நடைபெறு கின்றது.

இப்பெரும் சாந்தி விழாவையும் அலைமோது கரைஓரம் அமைந்திருக்கும் 108 அடி உயரமான கோபுர கலச அபிஷேகத்தையும் காணவரும் அடியார் களுக்கு எல்லாம் வல்ல அம்பிகையின் நல்லருள் கிடைக்கவும் பிரார்த்திக்கின்றேன்.

அன்னையைத் தரிசிக்கவரும் அடியார்களின் நலன்கருதி விஷேட பிரயாண ஒழுங்குகள், அன்னதான ஒழுங்குகள் மற்றும் அனைத்து வசதிகளும் சிறப்பாக செய்யப்பட்டிருப்பதையும் அறியத் தருகிறேன். தரிசிக்கவரும் அனைத்து அடியாரும் அருள் பெற்று வளமுடன் வாழவும் வேண்டிய எமது உள்ளம் கவர் வலம்புரி மூலம் பிரார்த்திக்கிறேன்.

ஓம்சக்தி சக்தி சக்தி
ஆ.தியாகராஜா
தலைவர் ,ஸ்ரீ நாகபூஷணி அம்மன்
கோவில்,நயினாதீவு

## அன்னையை வணங்கி அனைத்தும் பெறுக!





அலைகடல் மத்தியில் வீற்றிருந்து அருளாட்சி செய்பவள் அன்னை ஸ்ரீ நாகபூஷணி. அவள் நாகமணிந்தவள் , நாகங்களால் பூசிக்கப்பட்டவள், அருட்பொலிவும் ஆன்மீ கப்பொலிவுமுடையது நயினைதீவு. இதனை புவனேஸ்வரி பீடம் என சிறப்புப் பெயரால் பேரறிஞர் போற்றுகின்றார்.


இப் பெருமாட்டியின் திருக்கோவில் இன்று புனரமைக்கப்பட்டு உள்ளங்கவரும் கலைக் கோயிலாக மாற்றப்பட்டுள்ளதுடன் ஆதி சுந்தர நுழைவாயிற்கோபுரமும் நூற்றெட்டடி உயரத்தில் அமைக்கப்பட்டு இத்திருநாளில் திருக்குடமுழுக்கு வெகு சிறப்பாக நடை பெறுகின்றது. இத்திருநாளில் அம்பிகையைத்தரிசிக்கவரும் அடியார்கள் அனைவருக்கும் சகல செல்வங்களும் பெற்று பெருவாழ்வு வாழ எம் பெருமாட்டி அருள் பாலிக்க வேண்டுமென நயினை ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதான சபையின் சார்பில் வாழ்த்தி வணங்கி அமைகின்றேன்.


ஓம் சக்தியே துணை
தம்பிமுத்து சிவானந்தன்
தலைவர்,
ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி
அன்னதான சபை,
நயினாதீவு

**மலரமைப்பு:-**
**நயினை லவன்**
**(எஸ்.பிரகணன்)**









## நயினை தலத்தில் வதிபவளே!

எடுப்பு

சந்ததம் நயினை தலத்தினில் வதிபவளே
சரித்திரம் போற்றும் நாகபூஷணித்தாயும் நீயே
கந்தனும் கணபதியும் கைலைவாசனும் சேர்ந்துன்
காட்சி தந்தடியவர் கவலைகள் தீர்க்கும் தாயே சந்ததம்

தொடுப்பு

இந்திரலோக மயன் என்னவே கலைஞர் வந்தார்
இந்தியச் சிற்ப நுட்பம் யாவுமே வடித்துத்தந்தார்
தந்த இக் கலைகள் யாவும் தாயே நின் அருளின் சாட்சி
தனி எழில் கோயில் கொண்டாய் சகலமும் உந்தன் ஆட்சி–சந்ததம்
நாகமும் கருடன் சேர்ந்து நாடகம் ஆடச் செய்தாய்
நாயக வணிகன் தந்த பொற்குவை நயந்து ஏற்றாய்
பாகமாய் உறையும் நாகதம்பிரான் அனலை தீவின்
பக்கமாய் அமரச் செய்தாய் பராபரை பணிந்தோம் அம்மா–சந்தம்
மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாகப் பொருந்தச் செய்தாய்
முத்தரும் சித்தர்களும் வழிபட முனையச் செய்வாய்
கீர்த்திபெற அருள்வாய் கீழாம் பகை களைவாய்
கிருபை புரிவாய் தாயே கருணை மயம் ஆனவளே!–சந்தம்


முடிப்பு


சித்திரத்தேரில் வந்து சிந்தையைக் குளிரச் செய்வாய்
தீர்த்த நல் மகிமையாலே தீவினைகளைவாய் நீயே
புத்திரப்பேறு ஞானம் பொருந்திட வரமும் ஈவாய்
புதுமைகள் புரியும் தாயே நயினையின் வாழ்வும்நீயே–சந்ததம்


கலைவாருதி,பசிக்கவி
சி.பரராசசிங்கம்

# அதிசுந்தர நவதள ,நவகலச மஹா இராஜகோபுர சிறப்பு மலர் —29.01.2012









## காண்போரை மெய்சிலிர்க்க வைக்கும் இராஜகோபுரம்



அழகிய கடல் சூழ்ந்த நயினையம்பதியிலே கோயில் கொண்டெழுந் தருளி அமர்ந்திருக்கும் அம்பிகை ஸ்ரீநாக பூஷணியின் கும்பாபிஷே கம் சிறப்புற வாழ்த்துரை வழங்குவதில் நான் பெருமையடைகிறேன்.


இலங்கையினுடைய வரலாற்றிலேயே பெருமைக்கும் புகழுக்கும் உரிய இடமாக நயினாதீவு காணப்படுகிறது. இத்தகைய பெருமை மிக்க இடத்தில் புத்த பெருமானின் புகழுக்குப் பாத்திரமாக உள்ள நாக தீப ராஜமகா விகாரையுடன் இணைந்து நயினாதீவு நாகபூஷணி அம்மனின் புகழும் அனைவராலும் போற்றப்படுகிறது. அனைத்து மக்களாலும் தரிசிக்கப்பட்டும் வருகிறது. அம்பிகையினுடைய ஆலயம் தற்போது வர்ணவேலைப்பாடுகளாலும் சிற்ப வடிவமைப்புகளாலும் மீண்டும் பொலிவு பெற்றுள்ளது. கண்ணைக்கவரும் அழகிய சிற்பங்கள், கட்டடக் கலையின் சகல நுணுக்கங்களையும் பயன்படுத்தி அமைக்கப் பெற்ற அழகிய இராஜ கோபுரம் காண்போரை மெய் சிலிர்க்க வைக்கிறது.

தூரத்தே வரும்போதே இருகரம் கூப்பி வணங்கத்தக்க வகையில் வாவென அழைப்பதுபோல அமைந்துள்ளது. இத்தகைய சிறப்புக்களுடன் கூடிய இவ்வாலயத்திற்கு கும்பாபிஷேகம் செய்து புதுப்பொலிவு காணும் நன்நாள் அம்பிகையுடைய ஆசியுடன் கிட்டியுள்ளது. இந்நிகழ்வு சிறப்புற அமைய வாழ்த்துவதோடு,

இவ்வூரினுடைய பேரும் புகழும் மென்மேலும் உலகெங்கும் பரவவேண்டுமென ஆசிகூறுகின்றேன். அநேகமாக சுற்றுலாப்பிரயாணிகளாலும் இந்து, பௌத்த யாத்திரியர்களாலும் பேசப்படத்தக்கதாக உள்ள இவ்வூரின்மகிமையை போற்றிக்காத்து வளர்க்கவேண்டிய இனிவரும் ஒவ்வொருவரினதும் கடமையாகும் என்பதை மனதில் நிறுத்தி அன்னையின் அருள் அனைவருக்கும் கிட்டுவதாகுக.

**வண.நவதகல.பதுமகீர்த்தி திஸ்ஸ தேரோ**
**விகாராதிபதி ,நாகதீப ரஜமகாவிகாரை**

## வானுயர உயர்ந்த வண்ணக் கோபுரம்



நாற்புறமும் கடலலைகள் சூழ்ந்து விளை யாடும் அழகிய நயினைபதியிலே கோவில் கொண்டு எழுந்தருளி அருளாட்சி செய்யும் அன்னை யினுடைய ஆலயம் புதுப்பொலிவு பெற்று குடமுழுக்கு காணுகின்ற இந்த நாள் மிகவும் சிறப்பான நாளாகும். அன்னையின் ஆலயம் தற்போது புதுப்பொலிவு பெற்றுள்ளது. கட்டடக்கலைக்கு சிறந்த எடுத்துக்காட்டாக அமைவது போல இந்திய சிற்பகலைஞரான புருஷோத்தமன் மற்றும் அவருடைய குழு வினரால் அமைக் கப்பட்ட சிற்பங்கள்யாவும் தத்ரூபம் ஆக அமைந்துள்ளது. அத்தனை சிற்பங்கள் மற்றும் ஓவியங்கள்யாவும் உயிரோட்டமுள்ளதாகவும் காண்போர் மனதைக் கவரும் வகையில் சிறப்பாக அமைந்துள்ளது. இவற்றுக்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல் வானுயர உயர்ந்தவண்ணக் கோபுரம் சிற்பக் கலையின் அத்தனை வகைகளையும் கோபுரத்தில் கண்கூடாக காணமுடியும்.

வரலாற்றுப்பெருமையும் புராதனத்தின் சான்றாகவும் அமைந்த அன்னையின் ஆலயம் தற்போது கட்டட சிற்பக்கலைகளுக்கும் எடுத்துக்காட்டாக அடுத்துவரும் தலைமுறையினரால் பெருமை கொள்ள வைக்கும் என்பதில் ஐயமில்லை. அன்னை ஸ்ரீ நாகபூஷணி அம்மனின் திருக்குடமுழுக்கு சிறப்பாக அமைய வேண்டுமென வாழ்த்துவதோடு அன்னையின் அருளாசி அனைவருக்கும் கி ட்டவேண்டும் என பிரார்த்திக்கின்றேன்.

மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்.

**நவரத்தினம் மோகனரூபன்**
**செயலாளர், நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய அறங்காவலர் சபை**

## குடமுழுக்கு காண்பவளே ஆடீரூஞ்சல்

சரித்திரத்தின் தாயவளே ஆடீரூஞ்சல்
தமிழ் மண்ணைக் காப்பவளே ஆடீரூஞ்சல்
உரித்துடைய நாகவழிபாட்டின் தூய
ஓங்கார வித்தகியே ஆடீரூஞ்சல்

நாகமது படமடுத்து ஆடஆட
நாற்புறமும் கடலலைகள் ஆர்ப்ப ஆர்ப்ப
பாகமுறு மேகசிவ கணமும் ஆட
பராபரையே நாகபரை ஆடீரூஞ்சல்

பாவலர்கள் நாவலர்கள் பணிந்து ஏத்த
பக்தர் குழாம் சித்தம் நிறைவாகி ஆட
தேவர் கணம் துதிபாடி தொழுது ஏத்த
தாய் நாகபூஷணியே ஆடீரூஞ்சல்

அதிகார நந்தியுடன் அடி நூற்றெட்டு
அழகொளிரும் கோபுரம் அணி செய்கின்ற
துதிதகைய சிற்பங்கள் சேர்ந்த கோயில்
குடமுழுக்கு காண்பவளே ஆடீரூஞ்சல்

நயினை லவன்
(எஸ்.பிரகணன்)

## என்னை வாழவைக்கும் அன்னையே நாகபூஷணி துணை

நாகம் அணிந்தவள் நயினையில் வீற்றிருப்பாள்
நாகம் தொழுதெழ நம்மையும் காத்திடவே
பாகம் சிவனுடன் பாங்காய் வீற்றிருப்பாள்
பாவம் தொலைக்க பதியில் காத்திருப்பாள்
சோகம் தவிர்த்து சுகமாய் வாழ நாம்
வேகமாய் வருவோமே வேண்டும் வரம் பெறுவோமே

நயினை மதி. அம்பிகைபாகன்


பிறவிப் பிணி அகற்றி பிரம்மமயம் ஆக்கிடம்மா
சிறி மீனாட்சி நகைமாடம்
குறிப்பு:-
நாளை முதல் 183, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.
183, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P:-021 222 6109

உன்னடியே நாமிருக்க வரங்கள் பல தந்திடம்மா
விக்கினேஸ்வரா ஸ்ரோர்ஸ் & ஹாட்வெயார்
6ஆம் வட்டாரம், நயினாதீவு.

மாண்புடனே வாழ வழிசெய்திடுவாய் தாயே
10 Kg நிறையுடைய ஒவ்வொரு பொதிகளுக்கும்
UK 625 /= Germany 710/= France 765/=
மேலும் சகல நாடுகளுக்கும் கட்டணங்கள் குறைக்கப்பட்டுள்ளது.
யாழ்ப்பாணம், கொழும்பு ஆகிய இடங்களில் பொதிகள் உங்கள் வீட்டிற்கே வந்து ஏற்றுக்கொள்ளப்படும்.
குறிப்பு :- 25Kg - 100 Kg வரையான பொதிகளுக்கு 550/= மட்டுமே
Arrul Global Express
International Courier & Cargo Service
இல.1 பிறவுண் வீதி நாவலர் வீதி சந்தி, யாழ்ப்பாணம்.
T.P : 021 222 6113

பக்தனுக்கு அருள்புரிய பார்வதியே வந்திடம்மா
நாகேஸ்வரி படகுசேவை
5ஆம் வட்டாரம், நயினாதீவு.
T.P:-0213213496
யோ. சிவஜெயந்தன் (ஜெயந்தன்)

ஊரெங்கும் மங்கலம் உன்னால் பெருகட்டும் தாயே
அதிநவீன ஆடைத் தெரிவுகளுக்கு....
ஸ்ரைல் பார்க்
எடுப்பான தோற்றம் பெற ....
Style park
171, K.K.S Road,
Jaffna.

பூலோகம் உய்வு பெற புவனேஸ்வரியே அருள் புரிவாய்
அபிநாஸ் வெதுப்பகம்
ABINAS BAKE
சந்தை, 5ஆம் வட்டாரம், நாயினாதீவு.
தொ.பே:-0213210199

WESTERN UNION MONEY TRANSFER
நாகபூஷணித்தாயே எம்மைக் காத்திடம்மா
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY
POST OFFICE
#303 K.K.S Road, Jaffna,
Tel:-0212225392
0212222670
Fax:-021-2223214
e-mail:srimurugan09@gmail.com
web:srimurugan@eureka.lk

# கருக்கலைப்பு சட்டமூலத்திற்கு கத்தோலிக்க ஆயர்கள் எதிர்ப்பு

(கொழும்பு)

கருக்கலைப்பு குறித்த சட்ட மூலத்திற்கு கத்தோலிக்க ஆயர்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

விசேட சந்தர்ப்பங்களில் கருவை கலைத்துக் கொள்ள அனுமதிக்கும் வகையில் சட்டத்தில் திருத்தங்களை கொண்டு வர அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

கருவிலேயே குழந்தைகளுக்கு பாதுகாப்பற்ற நிலைமையை ஏற்றுக் கொள்ளமுடியாது என கத்தோலிக்க ஆயர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எனினும் மனிதாபிமான அடிப்படையில் மட்டுமே கருக்கலைப்பு மேற்கொள்ளப்படும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

16 வயதுக்கும் குறைந்த சிறுமிகள் பாலியல் வல்லுறவினால் கருவுற்றால் அந்தக் கருவை கலைப்பதற்கும் ஊனமுற்ற கருக்களை கலைப்பதற்கும் சட்டத்தில் அங்கீகாரம் வழங்குவது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தி வருகின்றது.

எவ்வாறெனினும் கருக்கலைப்பு சட்டத்தை ஏற்றுக் கொள்ள முடியாது எனவும் இதுவும் ஓர் வகையில் கொலையாகவே கருதப்பட வேண்டுமெனவும் தெரிவித்துள்ளனர்.

கொலை எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ள முடியாது என்பதனால் இந்தச்சட்டத்திற்கு அரசாங்கம் அனுமதி அளிக்கக் கூடாது என ஆயர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். கடந்த 2001 ஆம் ஆண்டில் 30 இலட்சம் கருக்கலைப்புச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. (அ-2)

# பாகிஸ்தான் மருந்துக்கு இலங்கையில் தடைவிதிப்பு

(கொழும்பு)

பாகிஸ்தானில் இருந்து இலங்கையில் இறக்குமதி செய்யப்படும் மாரடைப்பை தடுப்பதற்கான Isosorbide Mononitrate என்ற மருந்தை இலங்கை அரசாங்கம் தடைசெய்துள்ளது.

இந்த மருந்து காரணமாக பாகிஸ்தானின் லாகூரில் 100 இற்கும் மேற்பட்டவர்கள் மரணமானார்கள் என்ற செய்தி வெளியானமையை அடுத்தே இந்த தடையை இலங்கை அரசாங்கம் கொண்டு வந்துள்ளது.

இந்த மருந்து இலங்கையில் பல்வேறு வியாபார குறியீடுகளில் இறக்குமதி செய்யப்பட்டு இருதய நோயாளிகளுக்கு வழங்கப்பட்டு வந்த நிலையில் தடைசெய்யப்பட்டுள்ளது. பாகிஸ்தானிலும் இந்த மருந்து தடை செய்யப்பட்டுள்ளது. (அ-2)

# ஜி.எஸ்.பி.வரிச் சலுகை பெறுவதற்கு வலுவான அறிக்கை சமர்ப்பிப்பு

## அமைச்சர் ரிசாத் தெரிவிப்பு

(கொழும்பு)



இலங்கைக்கு அமெரிக்காவின் ஜி.எஸ்.பி.வரிச்சலுகையை பெற்றுக்கொள்வதற்காக மிகவும் வலுவான அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் ரிசாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

கடந்த 24 ஆம் திகதி அமெரிக்காவில் இடம்பெற்ற விசாரணை நிகழ்வில் இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். இந்த நிலையில் அடுத்து சமர்ப்பிப்பை இலங்கை எதிர்வரும் பெப்ரவரியில் மேற்கொள்ளவுள்ளது.

இதனையடுத்தே இலங்கைக்கு ஜி.எஸ்.பி.வரிச்சலுகையை வழங்குவது தொடர்பில் அமெரிக்கா இறுதி தீர்மானத்தை எடுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இலங்கையில் தொழிலாளர் நலன் உரியமுறையில் மேற்கொள்ளப்படவில்லை என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே அமெரிக்கா மேற்படி வரிச்சலுகை நிறுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# நகை திருடிய பொலிஸாருக்கு சிறைத் தண்டனை விதிப்பு

(கொழும்பு)

கொம்பனி வீதி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரே தங்கச் சங்கிலியை களவாடிய குற்றத்திற்காக நீதிமன்றம் சிறைத்தண்டனை விதித்துள்ளது.

பெண் ஒருவரின் தங்கச் சங்கிலியை கொள்ளையிட்ட குறித்த பொலிஸ் உத்தியோகத்தருக்கு இரண்டாண்டு கால சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் 16 ஆம் திகதி பெண் ஒருவரிடமிருந்து 90 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்கச் சங்கிலியை குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் கொள்ளையிட்டுள்ளார்.

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள நோயாளி ஒருவரை பார்வையிடச் சென்ற ஒருவரின் தங்கச் சங்கிலியே இவ்வாறு கொள்ளையிடப்பட்டுள்ளது. (அ-2)



மக்கள் வங்கியின் 50 ஆவது ஆண்டினை முன்னிட்டு வங்கியில் அதிக தொகையினை வைப்பிலிட்டு உடுப்பிட்டி விநாயகர் முன்பள்ளிக்கு வர்ணம் பூசப்பட்டு மின்விசிறிகள் வழங்கப்பட்ட நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் மக்கள் வங்கி வல்வெட்டித்துறை கிளை முகாமையாளர் திருமதி ஆர். தவநாயகம் சிசு உதன பொறுப்பதிகாரி கே.கலையரசன் ஆகியோர் முன்பள்ளி ஆசிரியர்கள், மாணவர்களுடன் நிற்பதனைப் படத்தில் காணலாம்.




★ 1595-ஷேக்ஸ்பியரின் ரோமியோவும் ஜூலியட்டும் நாடகம் முதன் முதலாக அரங்கேறியது.

★ 1676-மூன்றாம் பியோதர் ரஷ்யாவின் மன்னனாக முடிசூடினான்.

★ 1814-நெப்போலியன் பொனபார்ட்டின் பிரெஞ்சு இராணுவம் பிரியென் நகரில் இடம்பெற்ற சமரில் ரஷ்யாவை வெற்றி பெற்றது.

★ 1819-ஸ்டாம் ஃபோர்ட் ராபில்ஸ் சிங்கப்பூரில் தரையிறங்கினார்.

★ 1861-கான்சஸ் ஐக்கிய அமெரிக்காவின் 34 ஆவது மாநிலமாக இணைந்தது.

★ 1863-ஐக்கிய அமெரிக்காவின் இடாகோ மாநிலத்தில் பெயார் ஆற்றருகில் இராணுவத்தினருக்கும் ஷோஷோன் பழங்குடிகளுக்கும் இடையில் இடம்பெற்ற சமரில் பல நூற்றுக்கணக்கான பழங்குடிகள் உயிரிழந்தனர்.

★ 1886-ஜேர்மனியரான கார்ல் பென்ஸ் பெற்றோலினால் இயங்கும் முதலாவது தானுந்துக்கான காப்புரிமம் பெற்றார்.

★ 1916-முதலாம் உலகப் போர்: பாரிஸ் ஜேர்மனியரின் குண்டுத் தாக்குதலுக்கு இலக்கானது.

★ 1929-சோவியத் ஒன்றியத்தில் இருந்து வெளியேற்றப்பட்ட லியோன் ட்ரொட்ஸ்கி துருக்கியை அடைந்தார்.

★ 1940-ஜப்பான், ஒசாக்காவில் தொழிலாளர்களை ஏற்றிச் சென்ற தொடருந்து ஒன்று வெடித்ததில் 181 பேர் உயிரிழந்தனர்.

★ 1944-இரண்டாம் உலகப் போர்: போலந்தில் கொனியுச்சி என்ற இடத்தில் சோவியத்துணை இராணுவத்தினரினால் பெண்கள், குழந்தைகள் உட்பட கிட்டத்தட்ட 38 பேர் உயிரிழந்தனர்.

★ 1946-ஐக்கிய அமெரிக்காவில் CIG எனப்படும் மத்திய உளவுத்துறை குரூப் (Central Intelligence Group) அமைக்கப்பட்டது.

★ 1996-இத்தாலியில் வெனிஸ் நகரில் உள்ள ஒப்பரா மாளிகையான லாஃபெனீஸ் தீயினால் அழிந்தது.

★ 2005-சீனாவின் பெருநிலப் பரப் பில் இருந்து 1949 ஆம் ஆண்டிற்குப் பின்னர் முதற் தடவை யாக வர்த்தக விமான ஒன்று தாய்வானுக்கு வந்து சேர்ந்தது.

**பிறப்புக்கள்**

★ 1860-ஆன்டன் சேகொவ், ரஷ்ய எழுத்தாளர் (இ.1904)

★ 1866-றொமெயின் ரோலண்ட், நோபல் பரிசு பெற்ற பிரெஞ்சு எழுத்தாளர் (இ.1944)

★ 1926-அப்துஸ் சலாம், நோபல் பரிசு பெற்ற பாகிஸ்தானிய இயற்பியலாளர் (இ.1996)

**இறப்புக்கள்**

★ 1934-பிரிட்ஸ் ஹேபர், நோபல் பரிசு பெற்ற ஜேர்மனிய வேதியியலாளர் (பி.1868)

★ 1963-றொபேட் புறொஸ்ட், அமெரிக்கக் கவிஞர் (பி.1874)

★ 1981-பாலகிருஷ்ணன், நாதஸ்வரக் கலைஞர் (பி.1945)

★ 1998-பி.எஸ்.பி. பொன்னுசாமி, இந்திய விடுதலைப் போராட்ட வீரர் (பி.1908)


**சிறப்பு நாள்**


★ கிப்ரல்டார்- அரசியலமைப்பு தினம்





★ 1970- இந்திய ஒலிம்பிக் வீரர் ராஜ்வர்தன் சிங் ரத்தோரின் பிறந்த தினம்.

# அதிசுந்தர நவதள ,நவகலச மஹா இராஜகோபுர சிறப்பு மலர் —29.01.2012









## ஸ்தபதியின் உள்ளத்திலிருந்து...



நயினையம்பதியிலே அருளாட்சி செய்து அடியவர் துயர் நீக்கி இன்னருள் புரிந்து கொண்டிருக்கும் அன்னை நாகபூஷணிக்கு இன்று நடைபெறும் பெருஞ் சாந்தி விழாவைகாண்பது என்பது முற்பிறப்பில் செய்த புண்ணியமே இந்து சமயக் கோயில்களை ஒரு குறியீடாக காட்டவேண்டும் எனில் அதற்கு கோபுரம் என்ற வடிவமே பொருத்த முடையதாக இருக்கும். இந்துக் கோயில் கட்டடக்கலையில் உயரிய இடத்தினைப் பெற்று ஒளிர்வது கோபுரம் எனும் கட்டுமானம் ஆகும். கோபுரங்கள் கட்டடக்கலைத்திறனை மட்டுமல்லாது சிற்பக்கலைத்திறனையும் புலப்படுத்தி நிற்கின்றன.

இதற்கு இக்கோயில் கோபுரம் ஓர் உரைக்கல் எனலாம்.108 அடி உயரமான ஒன்பது நிலைகளைக்கொண்ட 700 சிற்பங்களுடன் விளங்கும் சக்திவாய்ந்த இக்கோபுரத்தை அமைப்பதற்கு கிடைத்த பாக்கியத்தை இட்டு நான் பெருமகிழ்வடைகின்றேன்.

இவ் ஆலய அதிசுந்தர நவதள மஹா இராஜ கோபுரத்தை கண் குளிரக்காணவரும் அனைத்து மக்களும் அன்னையின் அருளாசியை பெற்று நலமாகவாழ எல்லாம்வல்ல நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மனை வேண்டி நிற்கின்றேன்.

**திரு.கலியப்பெருமாள்**
**புருஷோத்தமன்**
**கொள்ளிடம். சீர்காழி,**
**தமிழ்நாடு.**

## அருட்காட்சிதனை தந்திடம்மா

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை
பொன்னம்பலவன்
ஞானகுரு வாணிபதம் நாடு

*அலைக்கடலின் ஓசையினில் அருள்*
*அளிக்கும் – அம்பிகையே*
*ஆலமர விருட்சமாய் ஆழிதனைத்*
*தன்ன கத்தே – கொண்டவளே*
*இடர்களைந்து இன்னல்களைக்களைந்*
*தெறிந்து– இன் முகம்காட்டிடுவாய்*
*ஈசன் உறைதேவியார் அரவமதில்*
*அமர்ந்திருந்து – அம்மா நீ*
*திரு குடமுழுக்குக் காட்சிதனை எமக்குத்*
*தந்தருள்வாய்.*

செ. தையல்நாயகி
அம்பிகை அடியார்

## அன்னைக்கு நியம கும்பாபிஷேகம்

அன்னையே அமுதனைய வல்லியே
ஆலிக்கும் நாகபூஷணி அம்மா
நின்னையே மகிழ்விக்க நவதளமாம்
நியம நவகலச கும்பாபிஷேகம்
தொன்மையைச் சொல்ல ராஜகோபுரம்
திரவியமாம் பிரதிஷ்டா அபிஷேகம்
நன்மையே நாட்டுக்கு வெற்றியுண்டு
நம்தமிழ் ஒருபோதும் தோற்காது

கே.எஸ். சிவஞானராஜா
கொக்குவில்

**மலரமைப்பு**
**நயினை லவ**
**(எஸ்.பிரகண**

## ...யின் வாழ்த்துரை

சென்ற நூற்றாண்டில் ஆகம மரபுப்படி 26.04.1951, 3.06.1963, 28.08.1983, 1.4.1998 ஆகிய திகதிகளில் மகா கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்று இந்த நூற்றாண்டில் 29.1.2012 ஞாயிற்றுக்கிழமை மஹா கும்பாபிஷேக பெருஞ்சாந்திவிழா முதன்முறையாக 33 குண்ட மஹாயாகப் பிரதிட்டை விழா மிகவும் சிறப்பாக நடைபெறத் திருவருள் கைகூடியுள்ளது. பிரதிஷ்டா பிரதம சிவாச்சாரியராக நயினைக்குருமணி சிவஸ்ரீ ப. முத்துக்குமாரசாமி அவர்கள் தலைமையில் இப்பெருஞ்சாந்தீ விழாநடை பெறுகின்றது. எண்ணெய்க்காப்பு 25.1.2012 தொடக்கம் 27.1.2012 வரை நடைபெற்றது. பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் இதில் கலந்து கொண்டனர்.

நயினை நாகபூஷணி அம்பாள் ஆலய இரண்டாவது திருச்சுற்றில் அலைகடலின் ஓரத்தில் கிழக்கு நோக்கியதாக புதிதாக அமைக்கப்பட்ட இராஜகோபுர மஹாகும்பாபிஷேகமும் இன்று நடைபெறுகின்றது. மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோவிலில் ஒன்பது நிலைக் கோபுரங் களைத் தரிசிப்பது போன்று இலங்கையில் நயினாதீவு நாகபூஷணி அம்பாள் ஆலயம் இப்புதிய ஒன்பது நிலைக் கோபுரத்தை தரிசிப்பது கோடி புண்ணியம் தரும்.

108 அடி உயரமான ஒன்பது நிலைகளைக் கொண்ட 700 சிற்பங்களுடன் விளங்கும் சக்தி வாய்ந்த இக்கோபுரத்தை இலங்கையில் நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலயத்தில் மட்டும் தரிசனம் பண்ண முடிகின்றது. இக்கோபுரம் சக்தியின் எண்ணற்ற வடிவங்களையும் மற்றும் தெய்வீக வரலாறுகளையும் தாங்கி நிற்கும் சிற்பக்களஞ்சியமாக காட்சி தருகின்றது. இந்த அழகுமிக்க இராஜகோபுரத்தை இவ்வளவு சிறப்பாக குறுகிய காலத்துள் நிர்மாணித்த பெருமை தமிழ்நாடு, சீர்காழி கொல்லிடம் திரு .கலியப்பெருமாள் புருசோத்தமன் ஸ்தபதியையும் அவரது குழுவினரையும் சாரும். யாழ்ப்பாணத்திலுள்ள சமய, ஆன்மீக சுற்றுலாத் தலங் களுள் தினந்தோறும் ஆயிரக்கணக்கான அடியவர்கள் வந்து வணங்கும் திருத்தலச் சிறப்பும் இந்துக்கள் மட்டுமன்றி பௌத்த சமயத்தினரும் வந்து வழிபடும் வழிபாட்டுச் சிறப்புமிக்கதாக நயினாதீவு நாகபூஷணி அம்பாள் ஆலயம் விளங்குகின்றது.

நாகபாம்பு பூக்கொண்டு வந்து வழிபட்ட நாகபூஷணி அம்பாள் ஆலயத்தின் பாலஸ்தாபனம் நிகழ்ந்து கவின் மிகு கலைக் கோயிலாக நிர்மாணம் செய்யப் பெற்று மஹா கும்பாபிஷேகப் பெருவிழா நிகழ்வது தேவியின் திருவருட் செயலாகும்.

**பேராசிரியர் டாக்டர்.மா. வேதநாதன்**
**தலைவர், இந்து நாகரிகத்துறை,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,**
**யாழ்ப்பாணம்.**


நாகேஷ்வரியே அருள்தர வேண்டும் அம்மா
சிறி நதியா
நகை மாளிகை
டிஜிட்டல் கலர் லாப்
வீடியோ & ஸ்ரூடியோ
01, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே:– 021 2222709
கிளை:– 56,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே:– 021 2226744
லக்ஸன் பிளாஸா கட்டடம், 108/A நாவலர்வீதி, யாழ்ப்பாணம். தொ.பே:– 021 2228412

அகிலமாளும் நாயகியே எமக்கு அருள் தந்திடம்மா
விக்கினேஸ்வரா படகு சேவை
விக்கினேஸ்வரா No 1,
நியூ விக்கினேஸ்வரா
கஜமுகன் படகுசேவைகள்
6ஆம் வட்டாரம்,
நயினாதீவு.

பூலோகம் உய்வுபெற புவனேஸ்வரியே வரமருள்வாய்
பூபாலசிங்கம் புத்தகசாலை
இல4, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்

ஊரெங்கும் மங்கலம் உன்னால் பெருகட்டும்
கௌசி கபே & ஸ்ரீ நாகஜோதி,
ஸ்ரீ நாக கமலம், பத்ரரூபி
படகுசேவை
1ஆம் வட்டாரம்,
நயினாதீவு.
T.P:-0776092556

வேண்டும் வரம் தந்திடும் நாகபூஷணித் தாயே
கணேசன் ஸ்ரோர்ஸ்
அழகிய ஜவுளிகளின்
சாம்ராட்சியம்
201, கே.கே எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

பக்தனுக்கு அருள் புரிய பார்வதியே வந்திடம்மா
S.Gajendran
proprítor
077 4685157
PERAVEENA
HARDWARE
Importers & Exporters and Dealers Cement, Hardware,Electricals, Aluminum, Glass & miscellaneous general, Merchants
No:198K.K.S.Road,
Jaffna.
Tel:-0212224901
Fax:-021-2224910

அகிலமாளும் அன்னையின் ஆசி அனைவருக்கும் கிடைக்க வேண்டுகின்றோம்
SDS COMPUTER
SERVICES -JAFFNA
#42/1, College Road,
Jaffna.
Tel:-021 510 0105
fax:-021 222 4500

# இந்திய வீடுகள் எங்கே?




யுத்தத்தில் அழிக்கப்பட்டு வீடுகளை இழந்த ஈழத்தமிழர்களுக்காக 50 ஆயிரம் வீடுகளை கட்டித் தருவோம் என்று இந்திய அரசு அறிவித்தது. இன்று முள்ளிவாய்க்கால் யுத்தம் முடிந்து மூன்று வருடங்களாகப் போகின்றது இது வரை வெறும் 50 மாதிரி வீடுகளைத்தான் இந்தியாவால் கட்ட முடிந்திருக்கிறது. இந்த 50 வீடுகளைக் கொடுக்கத்தான், இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா சென்ற வாரம் இலங்கை வந்தார். புது வீடுகளையும், எல்லாவற்றையும் இழந்து சோகத்தில் இருக்கிற ஈழத்தமிழர்களின் இன்றைய நிலைமையையும் அறிய ஒரு வன்னி விசிட் செய்தோம்.

"எங்கட வீடுகளை எல்லாம் குண்டு போட்டும் ஷெல் அடித்தும் அழிச்சுப்போட்டு, ஆரோ தார வீடுகளைக் கட்டித்தர, அவையள் படுற பாடு பெரியபாடு" என்று, எடுத்தவுமே இலங்கை அரசுமீதான பெரும் ஆதங்கத்துடன் அவேசமாக பேசுகிறார், முல்லைத்தீவு வள்ளிபுனத்தைச் சேர்ந்த 53 வயதான லட்சுமி இராசரத்தினம் என்ற தாய்.

ராஜபக்ச அரசு நடத்திய கடைசி யுத்தத்தில் மாத்திரம் இரண்டு லட்சத்திற்கு மேற்பட்ட வீடுகள் அழிக்கப்பட்டிருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. பெரும்பாலான வீடுகள் அரச படைகளின் விமானத் தாக்குதல்களுக்கு இலக்காகியும் ஷெல்தாக்குல்களுக்கு உள்ளாகியும் அழிந்துள்ளன. அதைவிட சிங்கள இராணுவத்தினர் தமிழ் நிலங்களை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தபின்னர் புல்டோசர் முதலிய தமது இராணுவ வானங்களால் இடித்து அழித்த வீடுகள் ஏராளம். வீடுகள் இல்லாத நிலையில் இப்பகுதியில் மீண்டும் மக்கள் குடியேறுவது எப்படி?

இந்நிலையில்தான் இந்தியா ஈழமக்களுக்கும் 50 ஆயிரம் வீடுகளை கட்டிக் கொடுப்பதாக வாக்களித்தது. ஆனால், அந்தவீடுகள் ஈழத் தமிழர்களுக்குப் போய்ச்சேர வேண்டும் என்றும் அந்த அடிப்படையில் தாமே வீடுகளைக் கட்டிக்கொடுக்கப் போவதாகவும் இந்தியா சொன்னதை இராஜபக்ஷ அரசு நிராகரித்து விட்டது. இதனால், இந்தியாவால் வீடுகள் கட்ட இயலாது, வீட்டுத் திட்டம் இழுபட்டுக் கொண்டிருந்தது.

ஐ.நா.வெளியிட்ட போர்குற்ற அறிக்கையில் இந்தியா வாக்களித்தபடி இன்னும் தமிழ் மக்களுக்கு வீடுகளைக் கட்டிக் கொடுக்கவில்லை என்று குறிப்பிட்டதைத் தொடர்ந்து, மீண்டும் இந்திய உயர் மட்டக்குழு ஒன்று இலங்கைவந்து நூற்றுக்கணக்கான வீடுகளை அமைப்பதற்குரிய நடவடிக்கையை துரிதப் படுத்தியது. ஆனால், இலங்கை தன் பிடிவாதத்தில் இருந்து இறங்கி வரவில்லை. இறுதியில் இலங்கை அரசே வீடுகளைக்கட்டி ஈழத்தமிழர்களுக்கு கொடுக்கட்டும் என்று இந்தியா இறங்கி வரவேண்டியதாகி விட்டது.

யாழ்ப்பாணம் அரியாலையிலும் கிளிநொச்சியில் பளையிலும் முல்லைத்தீவிலும் அவசரமாக சில மாதிரி வீடுகள் கட்டப்பட்டன. அவற்றைத்தான் இப்பொழுது எஸ்.எம். கிருஸ்ணா திறந்து வைத்துள்ளார்.

"எங்கட வீடு எவ்வளவு வடிவான வீடு. எத்தின தரம் சண்டையளுக்குள்ள இடிஞ்சு அழிஞ்ச பிறகும் கட்டினம். சொந்தமாய் உழைச்சுகட்டினனாங்கள் திரும்பி வரேக்குள்ள எல்லாம் மண்ணோட மண்ணாய் அழிச்சுப் போட்டு கிடந்தது. வாழ்ந்த வீடு இப்படி இடிச்சு அழிச்சு– எங்கட வாழ்க்கையை அழிச்சது பற்றி, நான் எப்பிடிப் பேசுறது? அத எப்பிடித் தாங்கிறது? இப்ப அழிச்சவியளே பிச்சை போடுகிற மாதிரி கட்டித் தாராங்கள்" என்று கண்ணீருடன் அழுகிறார் கிளிநொச்சி முரசுமோட்டையைச் சேர்ந்த 48 வயதான கண்மணி பாக்கியநாதன். கண்மணி பாக்கியநாதனின் இரண்டு பிள்ளைகளும் கணவரும் முள்ளிவாய்க்காலில் ஷெல் தாக்குதலில் கொல்லப்பட்டார்கள்.

"எங்கட மக்களின் வீடுகள் மட்டுமா அழிந்தது? உறவுகள் அழிக்கப்பட்டார்கள். சொத்துக்கள் அழிக்கப்பட்டன. அங்கங்கள் பறிக்கப்பட்டன. நகரங்கள், கிராமங்கள், மரம் செடி கொடிகள், பிராணிகள் என்று முழுத் தேசமும் வாழ்வுப் போராட்டமும் இராஜபக்ச அரசால், அரச படைகளால் அழிக்கப்பட்டன. எல்லாத்துக்குப் பிறகும் வாழவேணும் எண்டுதானே திரும்பி வந்தனாங்கள். மிஞ்சியிருக்கிற எங்கட பிள்ள குட்டிகளுக்காக வாழ ஆசைப் படுறம். அதுகள் பாம்பு பூச்சிகள் கடிக்காத நல்ல வீடுகளில் வாழ வேணும். இனியும் எங்களால் கஷ்டப்பட ஏலாது எண்டு வந்தால் ஒரு மாதத்துக்கு இருக்கச்சொல்லி தறப்பாள குடுத்திட்டு போனவையள், அதே போக்குத்தான். இப்ப 50 வீடுகள மட்டும் கட்டிக் கொடுத்துட்டு, அதைவிட அதிக செலவில் விழா எடுத்து புகழ் தேடியிருக்கினம்" என்று மிகுந்த விரக்தியுடன் கிளிநொச்சி பொன்நகரைச் சேர்ந்த சிவநாதன் செல்லுத்துரை பேசினார்.

வன்னியிலிருந்து மக்களை வெளியேற்றிவிட்டு அந்த மக்களின் வீடுகளையும் வீட்டுத் தளபாடங்களையும் கொண்டுதான் இராணுவத்தினர் தமது முகாம்களை அமைத்துள்ளார்கள். தடுப்பு முகாமிலிருந்து கொண்டு வரப்பட்ட மக்கள் தறப்பாள் கூடாரங்களிலும் தகரக் கூடாரங்களிலும் தற்காலிகமாக தங்க வைக்கப்பட்டு, இப்பொழுது ஆண்டுக்கணக்காக அந்தக் கூடாரங்களிலேயே வாழ்கிறார்கள். வெயிலிலும் மழையிலும் அந்தக் கூடாரங்களில் தவிக்கும் மக்களின் சோகம் பெரும் கொடிய துயரமாய் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

"இந்தா வீடு கட்டித் தாறம். அந்தா வீடு கட்டித் தாறம் என்று சொல்லிச்சினம். இந்த தகரக்கூட்டுக்குள்ள குழந்தை குட்டியள வைச்சுக் கொண்டு எத்தின நாளைக்கு இருக்கிறது? புள்ளயளுக்கு எல்லாம் ஒரே நோய் நொடியாய் வருது. யுத்தத்தில எங்கள சாவடிச்ச மாதிரி சொந்த காணியிலயும் இப்படி வாழ வைச்சு சாவடிக்கிறாங்க" என்று மிகவும் கோபத்துடன் பேசினார் முல்லைத்தீவு வற்றாப்பளையில் உள்ள 34 வயதான இளந்தாய் கவிதா காளிமுத்து.

சரி,இந்தியாவின் வீடுகளாவது ஈழத்தமிழர்களுக்கு கிடைத்தனவா என்றால் "பாதிக்குப் பாதிதான்" என்கிறார்கள் பாதிக்கப்பட்ட தமிழர்கள்.

"எங்கள அழிக்கிறதுக்கின்னே யுத்தத்தை நடத்தி அழிச்சப்புறம், எங்களுக்குக் கிடைக்கிற வீடுகளையும் பறிச்சுக் கொண்டு போறாங்க. மன்னார் மதவாச்சி வீதியில போரால் பாதிக்கப்பட்ட மக்கள் என்கிற பேரில சிங்கள சனத்த குடியேத்தி எங்களுக்கு வந்த வீடுகள அதுகளுக்கு கட்டிகுடுக்கிறது எவ்வளவு அநியாயம்?" என்று கொதித்தபடி பேசினார் முல்லைத் தீவில் முறிகண்டியைச் சேர்ந்த 51 வயதான மாணிக்கம் கணபதி.

வீடுவேணும் என்றால் காணி நிலத்தைத் தாருங்கள் என்றும் காணியில் புத்தர்சிலை வைக்க அனுமதியுங்கள் என்றும் வற்புறுத்துகிறது இலங்கை அரசு. ஈழத்தமிழர்கள் மத்தியில் சிங்களக்குடியேற்றத்தைச் செய்யவும் பௌத்த மதத்தைப் பரப்பவும் முயலும் சிங்கள இராணுவம், ஈழத்தமிழர்களுக்காக இந்தியா வழங்கிய வீடுகளை வைத்தும் தமது அரசியலையும் ஆக்கிரமிப்பையும் செய்யப் பார்க் கின்றது.

கிடைத்த வீடுகளிலும் சில வாழ முடியாதவை. "மழையால ஈர வீட்டுக் குள்ள கிடந்ததால எங்கட கிராமத்தில இது ரெண்டாவது செத்தவீடு. எத்தின தரம் கேக்கிறது? படிச்சு படிச்சு சொன்னம் இதுக்குள்ள இருக்க ஏலாதின்னு. கேட்டா, வேற இடத்தில காணியும் வீடும் தாறம் காணியை விட்டு எழும்புறீங்களான்னு கேக்கிறாங்க" என்று வீடின்றி தாயை இழந்த செல்வா குறிப்பிட்டார். செல்வாவின் இரண்டு சகோதரிகள் முள்ளி வாய்க்கால் யுத்தத்தில் இறந்துபோக, இரு சகோதரிகளினதும் குழந்தைகளை வளர்த்து வந்த அவரது தாய் இந்தக் கூடாரத்தில் வாழ்ந்ததால் குளிர் பிடித்து இறந்தார். இதனால் விஷம் அருந்திய செல்வா அதிர்ஷ்டவசமாக தப்பினார்.



இப்படித்தான் தூக்கம் இன்றி இந்தக் கூடாரங்களில் மக்கள் தவிக்கிறார்கள். எப்பொழுதும் உயிரைப் பறிக்கக்கூடிய வாழ்வைத்தான் தொடர்ந்தும் ஈழத்து மக்கள் வாழ்கிறார்கள் இன்னும் எத்தனை நாட்கள் தொடருமோ ஈழத்தமிழர்களின் இந்த சோகம்?

நன்றி: குமுதம்

# கப்பற்றொழில் வேலைவாய்ப்பு பற்றிய விழிப்புணர்வு

**அடிப்படைக் கல்வி அறிவு இல்லாது கப்பலில் சேர்ந்தால் sea service இன் பின் college இல் சேர்ந்து படிப்பதில் சிரமமாக இருக்காதா?**

அனேகமானவர்களிடம் உள்ள தயக்கம் இது கப்பலில் cadet ஆகச் சேர்பவர் படித்து officer ஆக வரவேண்டும் என்ற எண்ணத்துடன் தேவையான படிப்பு சம்பந்தப்பட்ட புத்தகங்களுடன் செல்வது போலவே rating இல் உள்ளவர்களும் படிக்கும் நோக்குடன் புத்தகங்களுடன் சென்று sea service பெறும் 3 தொடக்கம் 4 வருடங்களில் அடிப்படைக் கல்வியுடன் college இற்குத் தேவையான படிப்பறிவையும் பெற்றுவிடுகின்றனர். இதனால் college இல் சேர்ந்து தயக்கமில்லாது படிக்கக் கூடியதாகவும் இலகுவாக certificate எடுக்கக் கூடியதாகவும் உள்ளது. கப்பலில் வேலை செய்யும் போது எங்களிடம் email இல் தொடர்பு கொண்டு அல்லது vaiswa.com எனும் இணைய முகவரியில் பிரவேசிப்பதன் மூலம் படிக்கலாம்.

**கப்பலில் seaman ஆக வேலை செய்யும் போது எப்படிக் கற்பது? அதற்கு நேரம் கிடைக்குமா?**

Cadet ஆக கப்பலின் சேர்பவர்களின் முக்கிய வேலைகள், படிப்பும் officer மார்களின் வேலைகள் பழகுவதும் ஆகும். ஆனால், Seaman ஆக சேர்ப்பவர்கள் வேலை செய்வதற்கென்றே சேர்க்கப்படுகின்றனர். பொதுவாக அவர்களுக்கு Cadet யை விட சம்பளம் அதிகம். எனவே, Seaman மார்கள் தாங்களாகவே நேரத்தை ஒதுக்கி கப்பலில் உள்ள officer களின் உதவியுடன் அல்லது vaiswan.com இன் உதவியுடன் படிக்க முயற்சி எடுத்தல் வேண்டும். பல Seaman மார்கள் கிடைக்கும் நேரத்தைப் பயன்படுத்தித் தாங்களாகவே கல்விகற்று officer ஆக வந்துள்ளனர்.

ஏதோ சில காரணங்களுக்காக இளமையில் கல்வி கற்காமல் விட்டுவிட்டால் அக் குறைபாட்டுடன் ஆயுள் பூராக வாழ வேண்டும் என்றில்லை. மேலை நாடுகளில் வேலை செய்தபடியே கல்வி கற்பதற்காக பல வசதிகளை அரசாங்கம் செய்து கொடுக்கின்றது. அங்கு அனுபவத்துடன் படிப்பதில் அதிக நன்மை உள்ளது எனப் பலர் நம்புகின்றனர். வேலை நேரம் முடிந்ததும் இரவு 7 மணி தொடக்கம் 9 மணிவரை வயது வந்தவர்களுக்காக கல்லூரிக்குச் (adults college) சென்று அல்லது internet இல் online இல் படிக்கின்றார்கள். அதேபோல கப்பலில் வேலை செய்பவர்களும் ஆர்வத்துடன் பயின்றால் nautical & engineering college இல் சேர்ந்ததும் இலகுவாக படித்து பரீட்சையில் சித்தி அடையலாம். சுயமாகக் கல்வி கற்க விருப்பம் உள்ளவர்களின் வசதிக்காகவே vaiswan.com இல் கப்பற் படிப்புப் பகுதி தொடங்கப்பட்டுள்ளது.

Nautical college இல் கப்பலில் செய்யும் வேலைகள் அனைத்தைப் பற்றித்தான் கற்பிக்கின்றார்கள் என்பதை நன்கு கவனித்தல் வேண்டும். உதாரணமாக life-boat ஐ இறக்கி வேலை பார்த்த அன்று புத்தகத்தில் life -boat யைப் பற்றி கூறப்பட்டவற்றை படித்தல் வேண்டும். விளங்காதவற்றை officer இடம் கேட்டுத் தெரிந்து கொள்ளல் வேண்டும். இதே போல engin room இல் piston ring மாற்றம் செய்யப்பட்ட அன்று புத்தகத்தில் அது பற்றி என்ன கூறப்பட்டுள்ளது என்பதைக் கற்றல் வேண்டும். இவை தவிர theory ஆகக் கற்பதற்குப் பல பகுதிகள் உள்ளன.

இவற்றைப் பாடப்பரப்பில் கண்டறியலாம். எனவே, கப்பலில் கற்கும் போது செய்முறையில் அறிபவற்றை collage இற்குச் சென்று முறையாக கற்கும் போது இலகுவாக இருக்கும்.

**cadet ஆக கப்பலில் சேர என்ன செய்ய வேண்டும்?**

பலமேற்கத்தைய நாடுகளில் உள்ள shipping கம்பனிகள் வருடாவருடம் cadet மார்களை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் (ஆசிய நாட்டிலும்) இருந்து தெரிவு செய்து கம்பனிச் செலவிலேயே college training இற்கு அனுப்புகின்றனர். training இன் பின்னர் certificate எடுத்ததும் அவர்களது கம்பனியில் வேலை செய்தல் வேண்டும். இதை scholarship என்று கூறுவர். ஆங்கிலம் சரளமாகப் பேசக் கூடியதுடன் நல்ல அடிப்படைக்கல்வி (உ-ம்) GCE (O/L) இல் ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்கள் உட்பட 5 C தர சித்திகள் அல்லது HND/HNC Nautical Science அல்லது HND/HNC Marine Engineering அல்லது இவைகளுக்கு ஈடான தராதரம் உள்ளவர்கள் இந்தக் கம்பனிகளுக்கு நேரடியாக விண்ணப்பிக்கலாம். இவை அனேகமாக வருடாவருடம் தை அல்லது புரட்டாதி மாதங்களில் விண்ணப்பங்கள் கோருவர். இது தவிர இலங்கை மற்றும் ஆசிய நாட்டு தனியாரினது shipping கம்பனிகளிலும் cadet ஆக வேலை செய்வதற்கு விண்ணப்பங்கள் கோருவது வழக்கம்.

**எந்த நாடுகளில் marine college கள் உள்ளன? எது நல்லது?**

இலங்கை, இந்தியா, சிங்கப்பூர், மலேசியா, கொங்கொங், அவுஸ்திரேலியா மற்றும் லண்டன் ஆகிய நாடுகளில் பிரசித்திபெற்ற marine college கள் உள்ளன. ஒவ்வொரு இடமும் ஒருவிதத்தில் நன்மையுள்ளவை. இலங்கை, இந்தியா ஆகிய இடங்களில் குறைந்த செலவில் படிக்கலாம். லண்டனில் படித்து பெற்ற certificate உடன் அனேகமான உலகில் எல்லா கம்பனிகளிலும் தொழில் பெற வாய்ப்புக்கள் அதிகம் உண்டு. ஆனால், நிறையச் செலவாகும்.

**எனக்கு நிறைய வயதாகிவிட்டது. நான் college இல் சேர்ந்து எனது மகனுக்கு ஈடான வயதுடைய மாணவர்களுடன் படிக்கலாமா?**

தொழிற்கல்வி என்பது பாடசாலையில் படிப்பது போல் அல்லாது எந்த வயதிலும் சேர்ந்து படிக்கலாம். marine college இல் 20 வயதுடையவர்களும் 50 வயதுடையவர்களும் ஒன்றாகப் படிப்பது சர்வசாதாரணம். எனவே, வயது வித்தியாசம் பற்றி தயக்கம் தேவையில்லை. உண்மையில் college இல் வயது வந்தவர்களுக்கு அனுபவசாலிகள் என்று கூறி நல்ல மரியாதை இளமையில் ஏதோ காரணத்திற்காக படிப்பைத் தொடர முடியாதவர்கள் எத்தனை பேர் வயது வந்தவர்களுக்கான கல்லூரியில் (adults college) சேர்ந்து பட்டப் படிப்பு முடித்துள்ளனர். தொழில் நுட்பம் நாளுக்கு நாள் முன்னேறிக் கொண்டே செல்கிறது.

ந.சிவரத்தினம்
சர்வதேச இணைப்பாளர்
வல்வை. மாலுமிகள் நலன்புரிச் சங்கம்.

(தொடரும்)

# முன்னாள் போராளிகள் பொலிஸ் சேவையில்

## புனர்வாழ்வு ஆணையாளர் தெரிவிப்பு

புனர்வாழ்வளிக்கப்பட்டு சமூகத்துடன் இணைக்கப்பட்டுள்ள முன்னாள் விடுதலைப் புலிகளின் போராளிகளை பொலிஸ் சேவையில் இணைத்துக் கொள்ள அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் மேஜர் ஜெனரல் சந்தன ராஜகுரு தெரிவித்துள்ளார்.

புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகள் தேவையான கல்வி மற்றும் ஏனைய தகைமைகளை கொண்டிருந்து பொலிஸ் சேவையில் இணைய விரும்பினால் அவர்கள் நிச்சயமாக இலங்கைப் பொலிஸ் சேவையில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள் என குறிப்பிட்டுள்ளார்.

சுமார் ஆயிரம் முன்னாள் போராளிகளுக்கு தற்போது பல்வேறு நிலையங்களில் புனர்வாழ்வளிக்கப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, புனர்வாழ்வளிக்கப்பட்ட போராளிகள் பொலிஸ் சேவையில் இணைந்து கொள்வதற்கான வாய்ப்பு உள்ளது என்றும் அவர்கள் இப்போது சமூகத்தில் ஒன்றிணைக்கப்பட்டவர்களாகவுள்ளனர்.

அவர்களுக்கு நாம் பாரபட்சம் காட்டமுடியாது. அவர்களுக்கு போதிய கல்வித் தகுதியிருந்தால் அவர்கள் மீது கிரிமினல் குற்றச்சாட்டுக்கள் இல்லாதிருந்தால் பொலிஸ் சேவையில் இணைவதற்கு விண்ணப்பிக்கலாம் எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். (அ-2)

# அழுத்தங்களை பிரயோகிக்க வேண்டாம்

# ஐ.நா. செயலாளரை கோருகிறது இலங்கை

இலங்கை மீது அழுத்தங்களை பிரயோகிக்க வேண்டாம் என அரசாங்கம் ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் பான் கீ மூனிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமை குழு அமர்வுகளின் போது இலங்கைக்கு எதிராக பல்வேறு அழுத்தங்கள் பிரயோகிக்கப்படக் கூடுமென அரசாங்கம் அச்சம் வெளியிட்டுள்ளது.

குறிப்பாக தாருஸ்மான் குழுவில் அங்கம் வகித்த ஸ்டீவன் ராட்னர் இலங்கைக்கு எதிராக போர்க் குற்றச்சாட்டுக்களை முன் வைக்கத் திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறான அழுத்தங்கள் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைப் பிரகடனத்தை மீறும் வகையில் அமைந்துள்ளது என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

ஸ்டீவன் ரட்னரின் சட்டவிரோத செயற்பாடுகள் குறித்து ஜெனீவாவிற்கான இலங்கைத் தூதுவர் தமரா குணநாயகம் அரசாங்கத்திற்கு தெரிவித்துள்ளார்.

ஐக்கியநாடுகள் அமைப்பின்செயலாளர் நாயகத்தினால் நியமிக்கப்பட்ட குழு உறுப்பினர் ஒருவர் உறுப்பு நாடு ஒன்றுக்கு எதிராக செயற்படும் முதல் சந்தர்ப்பம் இதுவென இலங்கை அரசாங்கம் குற்றம் சுமத்தியுள்ளது. (அ-2)

# அரசாங்கத்தின் செயல் அருவருக்கத்தக்கது!

## சட்டத்தரணிகள் அமைப்பு குற்றச்சாட்டு

(கொழும்பு)

கொழும்பு கோட்டை தொடரூந்து நிலையத்திற்கு அருகில் கடந்த 25 ஆம் திகதி நடத்தப்படவிருந்த கறுப்பு ஜனவரி கூட்டம் நடத்தப்படுவதை தடுக்க அரசாங்கமும் அரசாங்கத்துடன் சம்பந்தப்பட்ட பிரதிநிதிகளும் பயன்படுத்திய அருவருக்கத்தக்க ஆயுத தந்ரோபாயம் அமைதியாக உள்ள அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளதாகவும் இதனை தாம் வன்மையாகக் கண்டிப்பதாகவும் ஜனநாயகத்திற்கான சட்டத்தரணிகள் அமைப்பு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அமைதியான கூட்டம் ஒன்றை தடுக்க காவற்றுறையினர் நீதிமன்ற தடையுத்தரவை பெற்றுக்கொண்டுள்ளதாகவும் பொலிஸ் மற்றும் நீதிமன்றம் உட்பட அரச நிறுவனங்களில் அடிப்படை உரிமை பாதுகாத்து அவற்றை முன்னேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் இதன்மூலம் உரிமை பாதுகாக்கப்படும் எனவும் அமைப்பின் ஏற்பாட்டாளர் லால் விஜேநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவம் குறித்து கடுமையாக ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் இப்படியான சம்பவங்கள் காரணமாக நாட்டின் சட்டத்திற்கும் அமைதிக்கும் குந்தகம் ஏற்படும் எனவும் அவர் மேலும் கூறியுள்ளார். (அ-2)

# நாட்டின் அபிவிருத்தியின்போது தனிமனித ஆரோக்கியமும் பேணப்பட வேண்டும்

## சுகாதார அமைச்சர் மைத்திரிபால தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு, கிழக்கு என்ற பாகுபாடு இன்றி நாட்டின் எல்லா பிரதேசங்களும் ஒரே பார்வையில் அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும் என்பதே அரசாங்கத்தின் பிரதான நோக்கம் சுகாதார அமைச்சர் மைத்திரி பால சிறிசேன தெரிவித்தார்.

இலங்கை மருத்துவ சங்கமும் யாழ். மருத்துவ சங்கமும் இணைந்து நடாத்தும் பிராந்திய மாநாட்டின் முதல் நாள் நிகழ்வு யாழ். டில்கோ சிற்றி ஹோட்டலில் நேற்றுமுன் தினம் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

கடந்த 30 ஆண்டு காலப்பகுதியில் தொடர்ந்து யாழ்ப்பாணத்திற்கு வந்து சென்றுள்ளேன். ஆனால் முன்னைய காலங்களை விட இங்கு தற்போது வரும் பொழுது அநுராதபுரத்திலிருந்து யாழ்ப்பாணம் வரும் வரையில் நல்லதொரு அபிவிருத்தியினை அவதானிக்க முடிந்தது.

வடகிழக்கில் அனைத்து பிரதேசங்களிலும் துரித கதியில் அபிவிருத்திப்பணிகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றது.

இவ் அபிவிருத்திகளினால் மனிதர்களின் அபிவிருத்தி ஆரோக்கியமடையவில்லை என்றால் நாம் முன்னெடுக்கின்ற இப்பௌதீக அபிவிருத்திகளினால் எவ்வித நன்மையும் இல்லை.

அபிவிருத்தியின் பிரதான எண்ணக்கரு ஆரோக்கியமான மனித சமுதாயத்தினை கட்டியெழுப்புவதாகும். இவ்வாறான நிகழ்வுகள் மூலம் சிறந்த தொரு சமுதாயத்தினை உருவாக்க முடியும்.

இதனை ஏற்பாடு செய்த இலங்கை வைத்திய சங்கத்தினை நான் பாராட்டுகிறேன். இச்சங்கம் இலங்கையில் மட்டுமல்ல ஆசியாவிலும் ஒருமுக்கிய இடத்தைப் பெற்றுள்ளது.

இங்கு பணிபுரியும் வைத்தியர்களைப் பொறுத்த வரையில் எம் நாட்டில் மட்டுமல்ல சர்வதேச மட்டத்திலும் திறமை வாய்ந்தவர்களாகத் திகழ்கின்றனர்.

விசேடமாக தாய் சேய் மரண வீதத்தை நோக்கும் போது சர்வதேச மட்டத்தில் சிறந்த நிலை யில் உள்ளோம்.

நாம் கடந்த பல வருடங்களாக வைத்தியத்துறையில் பல சாதனைகளை நிகழ்த்தி வருகின்றோம். மலேரியா போன்ற நோய்களையும் கட்டுப்படுத்தியுள்ளோம்.

நாம் செயலமர்வுகளை நடத்துவதன் நோக்கம் யாழ்ப்பாணத்திலுள்ள சுகாதாரத்துறையினருக்குள்ள சவால்களை எவ்வாறு எதிர்கொள்வதென்பதற்காகவே ஏற்படுத்தியுள்ளோம்.

யாழ்ப்பாணத்திலுள்ள வைத்தியத்துறைக்கு உள்ள சவால்களும் இலங்கையின் ஏனைய பிரதேசங்களிலுள்ள வைத்தியத்துறைக்கும் உள்ள சவால்களும் ஒன்றாகத்தான் உள்ளது.

கடந்த 30 வருட கால யுத்தத்தில் அநேகமானவர்கள் உடல் உள ரீதியால் பாதிக்கப்பட்டு உள்ளனர். இதனால் அனைவரும் வைத்தியத்துறைக்குள் உள்வாங்கப்பட வேண்டும் என்பதே எமது பிரதான நோக்கம்.

யாழ்ப்பாணத்தில் பட்டம் பெற்று வெளியேறுகின்ற சகல வைத்தியர்களும் தமது சேவையினை இங்குள்ள மக்களுக்கு ஆற்ற வேண்டும்.

அவர்கள் எங்கு சென்றாலும் பரவாயில்லை. யாழ்ப்பாணத்தில் குறைந்தது 4 வருடங்களேனும் தமது சேவையினை முன்வந்து ஆற்றவேண்டும்.

இரண்டு பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், வைத்தியர்கள், பணிப்பாளர்கள் ஆகியோர் மாணவர்கள் கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபடும் போதே எவ்வாறான பிரதேசங்களில் அதிகமாக பணிபுரிய வேண்டும் என்ற மனோ நிலையை ஏற்படுத்த வேண்டும்.

அரசாங்கம் என்ற வகையில் சகல பிரச்சினைகளும் எங்களுக்கு சமம் தான். எனவே இவ்வாறான பிரச்சினைகளை தீர்ப்பதற்கு நீங்களும் எமக்கு ஒத்துழைப்பு நல்க வேண்டும்.

இதுபோன்ற செயலமர்வுகளை வெளியிடங்களிலும் நடத்துவதற்கு தீர்மானித்து உள்ளோம். இது நல்ல தொரு வேலைத்திட்டமாகும்.

மக்களுக்கு தேவை, அன்பு கொண்ட வைத்தியமே. ஆகையால் நாம் எமது மக்களுக்காக சேவை யாற்ற முன்வர வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(அ-2-4)

# தமிழ்மொழியை புறக்கணித்து நாம் வரலாற்று தவறு இழைத்துவிட்டோம்

## அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவிப்பு

சிங்களமொழிக்கு முக்கியத்துவம் கொடுத்து தமிழ்மொழியை புறக்கணித்து விட்டோம். இந்த வரலாற்றுத்தவறை நிகழ்காலத்திலும் செய்யக்கூடாது என்று இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

ஏனைய மொழிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து நவீன வளர்ச்சியுடன் ஒன்றித்து செயற்படாவிட்டால் இலங்கையால் வெற்றி இலக்குகளை அடைய முடியாது.

எனவே நவீன உலகத்திற்கு ஏற்ப உள்நாட்டிலும் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சில் நேற்று முன்தினம் நடைபெற்ற விசேட நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் டலஸ் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இவர் இங்கு தொடர்ந்தும் கூறுகையில்,

பௌத்தர் என்ற வகையில் நாம் வரலாற்றில் முக்கிய தவறுகள் மூன்றை செய்துள்ளோம்.

சிங்களமொழிக்கு மாத்திரம் முன்னுரிமை கொடுத்து தமிழ் மற்றும் ஆங்கிலமொழிகளை புறம் தள்ளியமையால் இன்று இலங்கை பின்னடைந்துள்ளது. அதேபோன்று உலக நடப்பிற்கு ஏற்ப தொழில் நுட்ப வளர்ச்சியை முன்னெடுப்பதில் தோல்வி கண்டமையால் வளர்ச்சி இலக்குகளை அடைவதில் சிரமம் ஏற்பட்டுள்ளது.

பிக்குகள் அரசியல் கட்சிகளுக்குள் பிளவுபட்டு அடையாளங்களை இழந்து வருகின்றனர். இது நாட்டுக்கோ பௌத்த தர்மத்திற்கோ நன்மையாக அமையாது என்றார்.(அ-2)

# தேசிய நீச்சல் போட்டியில் யாழில் இருந்து 25 மாணவர்கள்

(யாழ்ப்பாணம்)

இலங்கை தேசியமட்ட நீச்சல் போட்டியில் இம்முறை யாழ். மத்திய கல்லூரி மாணவர்கள் 25 பேர் பங்குபற்றவுள்ளனர் என யாழ். பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நேவின் பத்மதேவா அறிவித்துள்ளார்.

1969 ஆம் ஆண்டுக்கு பின்பு இந்த வருடம் தேசிய மட்ட நீச்சல் போட்டியில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த மாணவர்கள் பங்குபற்றுகின்றனர். இது மிகுந்த மகிழ்ச்சியைத் தருகின்றது.

கொழும்பு ஆனந்தாக் கல்லூரியில் எதிர்வரும் மாதம் 9, 10, 11 ஆம் திகதிகளில் நடைபெறும் இந்த தேசிய மட்ட நீச்சல் போட்டியில் பங்கு பற்றும் 25 மாணவர்களுக்கான பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்த மாணவர்களுக்கான பயிற்சிகள் அனைத்தும் எனது தலைமையில் 5பேர் கொண்ட பயிற்சியாளர் குழுவினால் வழங்கப்படுகின்றது.

என்னுடன் இணைந்து பயிற்சி வழங்குபவர்கள் இலங்கை பொலிஸ் நீச்சல் பிரிவைச்சேர்ந்த அதிகாரிகள்.

கொழும்பில் நடைபெறும் தேசியமட்ட நீச்சல்போட்டியில் யாழ். மாவட்டத்தைச்சேர்ந்த மாணவர்கள் வெற்றிபெறுவர் என்பதில் எனக்குப் பூரண நம்பிக்கையுள்ளது.

இந்தப் போட்டியில் பங்குபற்றும் மாணவர்களுக்கான உதவிகள் அனைத்தும் இலவசமாக வழங்கப்படுகின்றது.

உடைகள் மற்றும் போக்குவரத்துச் செலவீனங்களை பாரம்பரிய கைத்தொழில்கள்மற்றும்சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா வழங்குகின்றார்.

இது தவிர வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறியும் பல உதவிகளை வழங்கி வருகின்றார்.

இந்தப்போட்டியில் 13, 15, 17, 19 ஆகிய வயதுப் பிரிவுகளைச் சேர்ந்த போட்டியில் மாணவர்கள் பங்குபற்றுகின்றனர் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

# எண்பது இலட்சம் ரூபா செலவில் சி.க.கூ.ச.புதிய கட்டடம் அமைக்கும்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் புதிய கட்டடம் ஒன்றை கட்டவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்.மாவட்டத்தின் சிக்கன கடன் வழங்கு சங்கங்கள் சமாசத்தின் விசேட பொதுக்கூட்டம் நேற்றுக்காலை யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் புதிய கட்டடம் அமைப்பது தொடர்பான அனுமதி பெறவுள்ள நிதியங்களின் விபரத்திலேயே மேற்படி கட்டடம் அமைப்பதும் அதற்கான செலவீனமும் ஆராயப்பட்டது.

இக்கட்டடம்80இலட்சம்ரூபாவிற்கு மேற்படாமல் கே.கே.எஸ். வீதியில் தட்டாதெருச் சந்திக்கு அண்மையில் அமையவுள்ளது.

கட்டட ஒதுக்குநிதியானது ஞானப்பிரகாசர் ஞாபகார்த்த நிதி, வட்டி வருமான ஒதுக்கம், ஆக்கத் தொழிற்பாட்டு நிதியம் ஆகியவற்றில் ஒதுக்கப்பட்ட 41 இலட்சத்து 69 ஆயிரத்து 473 ரூபாயையும் மேலதிக நிதியினை வேறுவழியினூடாக பெற்றும் ரூபா 80 இலட்சத்திற்கும் மேற்படாமல் தளமேல் மாடியினையும் மதிலையும் அமைப்பதற்கு பொதுச்சபையின் அனுமதியினையும் ஆணையாளரின் அனுமதியினையும் பெற்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

அதற்கமைவாகக் கட்டட உபசபை, இயக்குநர் சபை மீளவும் சமாச மூலங்களை ஆராய்ந்து பதினொரு நிதியங்களையும் அதற்குரிய வட்டியினையும் பாவிப்பதற்கு பொதுச் சபையின் அனுமதியையும் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரின் அனுமதியினையும் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-4)

நாகபூசணியின் பாதம் பணிவோம்
ஆச்சி Foodcity Center
இல.44, கம்டன் ஒழுங்கை,
வெள்ளவத்தை.
தொ.பே:- 0112 366484
V.S.P
லக் ஒயில்
இல:26 A, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 0212224135, 0212229165
1969
தயாரிப்பாளரும்
ஏக விநியோகஸ்தரும்
பரிமளா ஸ்ரோர்ஸ்

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய அதிசுந்தர நவதள ,நவகலச மஹா இராஜகோபுர

மஹா கும்பாபிஷேக சிறப்பு மலர் —29.01.2012



# ஆர். வி.ஜி R.V.G

மருந்தகம்

504, ஆஸ்பத்திரி வீதி, (O.P.D முன்பாக) யாழ்ப்பாணம்.
தொ.பே.இல: 021 222 2129

ஆங்கில மருந்து வகைகள், ஊட்டச்சத்துக்கள்
மற்றும் பால்மா வகைகள் அனைத்தையும்
நியாயமான விலையில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்

ஸ்தாபனம்

58, நல்லூர் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.
தொ. பே. இல : 021 222 6806

# அண்ணா தொழிலகம் ஜீவாகாரம்

உள்ளூர் உற்பத்திகளுக்கு ஆதரவு வழங்குவோம் என்றும் மக்கள் விரும்பிப் பாவிப்பது

அண்ணா கோப்பி
அண்ணா அரிசி மா
குரக்கன் மா
ஆட்டா மா
அண்ணா மிளகாய்த் தூள் வகைகள்
அண்ணா பத்தி வகைகள்
அண்ணா பற்பொடி
அண்ணா இனிப்பு வகைகள்




உள்ளூர் உற்பத்தியான ஜீவாகாரம் சிறியோர் முதல் பெரியோர் வரை பாவிக்க உகந்தசத்துணவு. இரசாயனக் கலவை அற்றது

தொலைபேசி இல: 021 224 1565

அன்னையை தினம் துதித்து
சகல இன்பமும் பெற்றிடுவோம்



# Nallur Saravana Tex

# நல்லூர் சரவணா ரெக்ஸ்

இல. 526,529,பருத்தித்துறை வீதி
நல்லூர்,
யாழ்ப்பாணம்.
தொ.பே:-021 222 1723

இல. 770, 772, தட்டாதெருச் சந்தி,
கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே :- 021 222 0421





இல. 171,பிரதான வீதி
சம்பத்வங்கிக்கு அருகாமை,
நெல்லியடி.
தொ.பே:- 021 226 2992

அகிலம் ஆளும் ஈஸ்வரியே எமக்கு அருள் தாரும் அம்மா

# J.T ரான்ஸ்போட்

40 வருடகால மதிப்போடு விளங்கும்

யாழ். வணிக நிலையம்

இல.336, 338, (மேல்மாடி) ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.




J.T ரான்ஸ்போட்

இல.302,ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்

நயினை நாகபூஷணி எமக்கருள்தருவாய் தாயே!

MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

# ராம்கோ சீமெந்து

# RAMCO CEMENT

ராம்கோ சீமெந்தை பயன்படுத்துங்கள்!
உங்கள் பணத்தை மீதப்படுத்துங்கள்!



தொ. பே: 021 222 7603,
021 222 2350

ஆசியாவின் முதலாம் தர(நம்பர்-1) தொழிற்சாலையாக தெரிவு செய்யப்பட்ட RAMCO சீமெந்து (கோபுரமார்க்) என்பதை மக்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ராம்கோ சீமெந்தின் ஏக இறக்குமதியாளர்கள்

ஈஸ்வர பகவான் அன் கம்பனி

91, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

# நயினை நாகபூஷணி அம்மன் ஆலய மஹாகும்பாபிஷேக சிறப்புக் கட்டுரை


## நாகம் வழிபட்ட நாயகிக்கு இன்று மஹாகும்பாபிஷேகம்

மக்களின் துயர் துடைக்கும் அருள் நிலையங்களாக ஆலயங்கள் இருக்கின்றன. காலத்திற்குக் காலம் ஆலயத்தில் திருப்பணிகள் தடையின்றி சிறப்புடன் நடைபெற வேண்டும். அன்பும் பக்தியும் சிரத்தையும் கொண்டு அன்பர்கள், அடியார்கள், உருகி, உருகி வழிபட்டு ஆறுதல் அடைய வேண்டும். பிரார்த்தனைகளிலே தான் உடலும், உயிரும், உள்ளமும் மனமும் அசைக்க முடியாத சக்தியைப் பெறும்.

சாந்தியும் சமாதானமும் நிறைந்த புண்ணிய பூமியாகிய நயினாதீவில் அம்பிகை எழுந்தருளி உலகெங்கிலுமுள்ள ஆன்மாக்களுக்கு அருள் பாலித்துக் கொண்டிருக்கின்றாள். உலகத்திற்கு தாயாகிய அன்னை பல சக்தி பீடங்களில் அமர்ந்திருக்கின்றாள். இவ்வாலயத்தில் புவனேஸ்வரி பீடமாக அமர்ந்து அருள் பாலிக்கின்றாள். இலங்கைத் திருநாட்டில் இப் புனித ஆலயத்தைப் போன்ற தொன்மையும் கீர்த்தியும் வாய்ந்த சக்திபீடம் பிறிதொன்றில்லை எனலாம். தனது அளப்பரும் கருணையினால் உயிர்வர்க்கத்தை அரவணைத்துக் காத்து வருகின்றாள். ஒரு சர்ப்பம் ஒருநாள் இங்கே வசித்து தவஞ்செய்து தனது சாபம் நீங்கப் பெற்றது. அதனைத் தனது திருமேனியில் அணிந்து சாப நிவர்த்தி செய்தமையால்த்தான் இங்கு எழுந்தருளிய அன்னை அம்பிகை நாகபூஷணியென்னும் திருநாமம் உடையவளாக விளங்குகின்றாள்.

பன்னிரண்டு வருடங்களுக்கு ஒருமுறை நடைபெறும் கும்பாபி ஷேகம் சகலவிதமான நோய்களையும் நீக்கும் கும்பாபிஷேகம் எல்லாவற்றையும் விடச் சிறந்த கிரியையாகும். இதனால் பேரானந்தப் பெருவாழ்வும் கோடி புண்ணியமும் கிடைக்கும் என்பது ஆன்றோர் வாக்கு. கும்பாபிஷேகம் என்பது பல்வேறுபட்ட குறைபாடுகளையும் நீக்கி இறைவனது திருவருள் பாலிக்குமாறு செய்யும் பெருஞ் சாந்தியாகும். இச்சாந்தியானது ஆலயங்களில் உரிய காலங்களில் செய்ய வேண்டியது இன்றியமையாதது. பிறந்திருக்கும் இப் புத்தாண்டு எமது திருக்கோயில்களுக்கு அணி செய்யும் ஆண்டாக மலர வேண்டும் என்பதே எம் போன்றவர்களின் விருப்பமாகும். அந்த வகையில் நயினை அம்பிகையின் கருணையும் இதற்குத் துணை செய்வதாக அமைய வேண்டும். எனவே தான் நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மாளுக்கு இன்று ஞாயிற்றுக்கிழமை மகா கும்பாபிஷேகம் நடை பெறத் திருவருள் பாலித்துள்ளது.

இன்று நயினாதீவில் இந்திரலோகம் எனப் போற்றத்தக்க வகையில் அம்பிகையின் ஆலயத்தில் சிறப்பான பலவகைப்பட்ட பாரிய திருப்பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. ஆலய உட்பிரகாரத்தில் நிரந்தர சீமெந்துக் கூரையிடுதல், சீமெந்துக் கூரை திராவிடச் சிற்ப வேலைப்பாடுகளுடன் நவீனப்படுத்தல், புதிதாக தூண்கள் அமைத்து திராவிட சிற்ப முறைப்படி அழகுபடுத்தல், ஆலய சுற்றுமதில்கள் அமைத்தல், அம்பிகையின் அலங்காரத் தோற்றம் கொண்ட சிலைகள் அமைத்தல், இரதோற்சவ இளைப்பாற்று மண்டபம், புதிய கருமபீடங்கள் அமைத்தல் இன்னோரன்ன பல திருப்பணிகள் இடம் பெற்றுள்ளன. ஆலய கிழக்கு வெளிவாசலில் 108 அடி உயரமான இராஜகோபுரம் சிற்ப



வேலைப் பாடுகளுடன் அழகுறக்காட்சி தருகின்றது.

திருப்பணிகள் பல தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருப்பதை அடியார்கள் பலர் அம்பிகையைத் தரிசிக்க அம்பாள் ஆலயத்திற்கு சென்று நேரில் கண்டு மகிழ்ந்ததையும் அருட் கடாட்சத்தை பெற்றுக் கொண்டதையும் நாம் நேரடியாகக் கண்டு கொள்ளக்கூடியதாக இருந்தது. அம்பிகை ஆலயத் திருப்பணி வேலைகள் யாவும் நல்ல முறையில் நடைபெற்றுள்ளது. தங்களது சிரமம் பாராது உள்ளன்போடு அயராத கண்ணும் கருத்துமாக அறங்காவலீர் சபைத் தலைவர் கா.ஆ.தியாகராசா அவர்களதும் ஏனைய அறங்காவலர்களதும் அயராத உழைப்பும் அர்ப்பணிப்பும்தான் திருப்பணிகள் சிறப்புடன் நிறைவேறக் காரணமாகும். இப்பெரும் திருப்பணிகளை முன்னெடுத்துச் சென்று நிறைவேற்றியிருப்பது அம்பிகையின் தெய்வீகச் செயலாகும். பாலஸ்தாபனம் செய்யப்பட்டு மிகவும் குறுகிய காலத்தில் மகா கும்பாபிஷேகம் செய்யப்படுகின்றமை பாராட்டுக்குரியதாகும்.

*அலைபாயும் ஆழ்கடலில் அடியார் கூட்டம்*
*ஆர்ப்பரித்து கரையேறி அருளே சேர்க்க*
*தலைவாயில் கோபுரத்தின் முன்னே கூடித் தம்*
*வசத்தை இழந்து நின்று தாயே என்று*
*நிலையாய உன்னுருவம் நினைந்து உள்ளம்*
*நெக்குருவ நின்றுருகும் தெய்வக்காட்சி*
*கலையாது நயினையுறை நாகம்மாளே! கண்*
*பணிப்பக் குடமுழுக்கு ஆடீர் அம்மா!*
*ஆழ்கடலில் அடியார் கூட்டம் அலைமோதிக்*
*கரை சேர்த்து அம்பிகையின் கோடி ரத்தின முன்*
*தாயே என்று உள்ளம் நெக் குருகி நின்று*
*கண்ணீர் மல்கி*

அம்பிகையை வழிபடும் காட்சி அருட் காட்சியாகும். நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில் ஆதீன பிரதம சிவாச்சாரியார் சாகித்திய சிரோன்மணி சிவாகம திவாகரன் சிவ ஸ்ரீ பரமசாமி குருமணி முத்துக்குமாரசாமி சிவாச்சாரியார் அவர்கள் பிரதம சிவாச்சாரியாராக இருந்து மகாகும்பாபிஷேகத்தைச் சிறப்பாக நடாத்தி வைக்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். அம்பிகையின் மகாகும்பாபிஷேகத்தை கண்டுகளிக்கவும் அருளமுதைப் பெற்றுக் கொள்வதற்காகவும் நாட்டின் பல பாகங்களிலிருந்தும் அடியார்கள் நயினாதீவுக்கு வருகை தரவுள்ளார்கள். குறிப்பாக வெளிநாடுகளில் வாழும் நயினையைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான அடியார்களும் ஏனைய வெளிநாடுகளில் வ்சிக்கும் அடியார்களும் அம்பிகையை தரிசிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் பெருமளவில் நயினையம்பதியில் கூடி அம்பிகையின் அருட்கடாட்சத்தை பெற்றுக் கொள்ளவுள்ளார்கள். இவ்வாறு வருபவர்களுக்கெல்லாம் நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அமுத சுரபி அன்னதான சபையினர் அன்னதானம் மேற்கொண்டு செயற்பட்டு வருகின்றார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

நயினை
நா.க.குமாரசூரியர் (ஜே.பி)

இன்று ஞாயிற்றுக்கிழமை நடை பெறும் மஹாகும்பாபி ஷேகம் சிறப்பாக நடை பெற அம்பிகையின் திருவருளும் ஆசியும் நிறைவோடு கிடைக்க வேண்டுமெனப் பிரார்த்திப்போம். நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாளை நேரில் வந்து தரிசித்து எல்லா நலன்களையும் பெற்று மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வோமாக.

உங்கள் மனதில் பயம் எனும் கதவு அடைக்க வருகிறதா? நம்பிக்கையுடன் சக்தியை பிரார்த்தனை செய்யுங்கள். *– யோசப் மர்பி*

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# திருக்குடமுழுக்கு கண்டு எங்கள் குறை தீரம்மா!

உலகளாவிய ரீதியில் நம்பிக்கைத் தெய்வமாக இருக்கக்கூடிய நயினை நாகபூசணி அம்மனுக்கு இன்று மகா கும்பாபிஷேகம் நடைபெறுகின்றது.

நயினை நாகபூசணி அம்மன் மீது மக்கள் கொண்ட அளவுகடந்த பக்தியை மனித மொழிகளில் கூறிவிட முடியாது.

உலகில் நயினை நாகபூசணியின் திருவருளின் பெருமை பற்றி பேசாத மக்கள் இல்லை எனலாம்.

அந்தளவுக்கு நயினை அம்மன் மீது நம்பிக்கை. ஆழ்கடல் நடுவே வீற்றிருக்கின்ற மணிபல்லவத் தாயை நினைத்தால், எல்லாக்குறையும் தீரும் என்று எண்ணுகின்ற அற்புதம் இந்து மக்கள் என்ற எல்லை கடந்து பிற சமயத்தவர்களிடமும் இருப்பது அற்புதமானது.

ஈழத்தமிழ் மக்கள் கடந்த மூன்று தசாப்த காலத்தில் படாதபாடு இல்லை. சந்திக்காத இழப்புகள் இல்லை. இழந்தவற்றையும் பறிகொடுத்தவற்றையும் வெளியில் கூறமுடியாத துயரமிருக்கிறதே அந்த கொடுந் துயரையும் அனுபவித்தவர்கள் நாங்கள்.

நிலைமை இதுவாக இருந்த போதிலும் எங்களுக்கும் எதிர்காலம் உண்டு. எங்களுக்கும் என்றோ ஒரு நாள் விடிவு கிடைக்கும் என்ற நினைப்பு; ஐ.நா. சபை உட்பட இந்தியா, அமெரிக்கா போன்ற நாடுகள் எங்களைக் கைவிட மாட்டா என்ற நம்பிக்கையில் ஏற்பட்டதல்ல.

மாறாக எங்கள் நயினைத் தாய் இருக்கிறாள். அவள் எங்களை ஒருபோதும் கைவிடாள் என்ற தெய்வ நம்பிக்கையில் ஏற்பட்டதாகும்.

ஈழத்தமிழ் மக்களை பொறுத்தவரை இலங்கையில் காலத்துக்கு காலம் ஆட்சி செய்தவர்கள் புரிந்த கயமைத்தனங்கள் ஏராளம்.

கயமைத்தனங்கள் செய்தது மட்டுமல்ல, அதனை மறைப்பதற்கும் இருட்டடிப்பு செய்வதற்குமாக கூறிய பொய் உரைகள் நினைக்கவே நெஞ்சம் துணுக்குறும்.

அந்தளவில் ஈனத்தனங்கள் நடந்தேறின– நடந்தேறுகின்றன. இவை இலங்கை அரசுகளின் செயலாக இருக்க, உலக நாடுகள் எங்களை ஏமாற்றியமை, எங்கள் விடயத்தில் அவர்கள் செய்த அதர்மத்தனங்கள் ஈழத்தமிழ் இனத்துக்கு உதவ யாருமே இல்லை என்று கூறும் அளவிற்கு நிலைமையை உருவாக்குகிறது.

இருந்தும் நம் இருப்புப் பற்றிய நம்பிக்கை தெய்வத்தின் மீதாக இருந்தது. அதன் காரணமாகவே இன்னும் எங்கள் இருப்பு அசைக்க முடியாததாக உள்ளது.

எத்தனைதான் பௌத்த விகாரைகளை அமைத்தாலும் தென் பகுதியிலிருந்து வருகின்ற சிங்கள மக்கள் நயினாதீவில் உறைகின்ற நாகபூசணியையும் நல்லூரில் ஆட்சி செய்கின்ற நல்லைக் கந்தனையும் தரிசிக்காமல் செல்வார்களா என்ன?

யாழ்ப்பாணத்துக்கான தங்களின் பயணத்தில் அடையக்கூடிய பெரும் பேறாக இருப்பது, இவ்விரண்டு ஆலயங்களின் தரிசிப்பென்றால் அது மிகையன்று.

ஆழ்கடலின் மத்தியில் வீற்றிருக்கும் அன்னபூரணியாள் தன்னிடம் வருகின்ற அத்தனை பேருக்கும் அன்னம் கொடுத்து அனுப்புகின்ற செயலை ஒருகணம் நினைத்துப் பார்க்கின்றேன்.

மனித சக்திக்கு அப்பால்பட்டது அது. மனிதர் நினைத்து ஒவ்வொரு நாளும் அமுது கொடுத்தல் என்பது முடியாத காரியம். அதனை அமுது கொடுத்த அந்த அன்னை நாகபூசணியால் மட்டுமே முடியும்.

இத்தகைய அதிசய சிறப்புக்களுடன் வீற்றிருந்து அருள்நல்கும் நாகபூசணியாளுக்கு இன்று குடமுழுக்கு. வானுயர்ந்த இராஜ கோபுரத்துக்கு கலச அபிசேகம்.

ஓம் என்ற ஓங்காரத்தை இசைக்கும் குரைகடல் மத்தியில் இன்று நடக்கும் குடமுழுக்கு எங்கள் விடிவுக்கான திருமுழுக்கு.

தாயே! தலையசைத்து வணங்கினோம் எங்கள் துயர் போக்கு என்று வேண்டுகின்றோம்; அருள்க!

# முள்ளியவளை கலைமகளின் அமுத விழா விரைவில்

முள்ளியவளை கலைமகள் வித்தியாலயத்தின் அமுதவிழா மிக விரைவில் கொண்டாடப்படவுள்ளது.

இதற்கான முன்னேற்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றபோதிலும் கடந்தகால இடப்பெயர்வுகளினால் பாடசாலையின் ஆவணங்கள் அழிந்துள்ளன.

பாடசாலையின் ஆவணங்கள் அழிந்துள்ளமையால் பாடசாலையின் பழைய மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள், ஆதரவாளர்கள் எனப் பலருடனும் தொடர்புகளை ஏற்படுத்தமுடியாத நிலைமை காணப்படுகின்றது.

இதனைக் கருத்திற்கொண்டு பாடசாலையின் பழைய மாணவர்கள் மற்றும் நலன்விரும்பிகளையும் 0777 698000 என்னும் கையடக்கத்தொலைபேசி இலக்கத்துடனோ அல்லது kalaimahal 1929@gmail.com என்னும் மின்னஞ்சல்முகவரியுடனோ தொடர்பு கொண்டு பழைய மாணவர்களை தமது விபரங்களைத் தெரிவிக்கும்படி வித்தியாலயத்தின் அதிபர் கேட்டுள்ளார்.

பழைய மாணவர்கள் தமது முகவரிகளை வித்தியாலயத்திற்கு எதிர்வரும் பெப்ரவரி மாதம் 5 ஆம் திகதிக்கு முன்னர் உரிய தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு வழங்குவதன்மூலம் வித்தியாலயம் பழைய மாணவர்களுக்கு அமுதவிழா அழைப்பிதழ்களை அனுப்பி வித்தியாலயத்தை சிறப்படைய செய்யமுடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ–2)

# கிளி.பாடசாலை மாணவர்களுக்கு மூக்குக் கண்ணாடி வழங்க முடிவு

## சமூக சேவைகள் அதிகாரி தெரிவிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு மூக்குக் கண்ணாடி, சக்கர நாற்காலி போன்ற உபகரணங்களை பெற்றுக் கொடுக்க சமூக சேவைத் திணைக்களம் மூலம் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. ளபட்டு வருவதாக கிளிநொச்சி மாவட்ட சேவை அதிகாரி வே. தபேந்திரன் தெரிவித்துள்ளார்.

இதற்கான விபரங்களை சேகரிக்கும் நடவடிக்கைகள் கிளிநொச்சி மாவட்ட வலயக் கல்வி திணைக்களமூடாக முன்னெடுக்கப்படுகின்றது.

போசாக்கு இன்மையாலும் யுத்தம் காரணமாகவும் ஏனைய வழிகளாலும் கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகளில் கல்வி பயிலும் பெருமளவு மாணவர்கள் பார்வைக்குறைபாடுள்ளவர்களாகவும் உடல் ஊனமுற்றவர்களாகவும் காணப்படுகின்றனர்.

இவ்வாறான மாணவர்களின் நலனை நோக்காகக் கொண்டே கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைத்திணைக்களத்தினர் குறித்த உபகரணங்களை பெற்றுக்கொடுக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ–2)

# பாடசாலை தினமும் பரிசளிப்பு விழாவும்


(யாழ்ப்பாணம்)

யாழ்.கந்தரோடை தமிழ்கந்தையா வித்தியாசாலை பாடசாலை தினமும் பரிசளிப்பு விழாவும் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வித்தியாசாலை அரங்கில் அதிபர் கா.சசிதரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண பாடசாலைகள் வேலைப் பகுதி பணிப்பாளர் க.குகநேசன் சிறப்பு விருந்தினராகத.சித்தார்த்தன் ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (அ-2-7)

# தவத்திரு யோகர் சுவாமிகளின் நற்சிந்தனை

## என் குருபர புங்கவ சிங்கமே



**தன்னைத் தன்னால் அறிந்திட வேண்டுமே**
**தானா யெங்குஞ் நெறிந்திட வேண்டுமே**
**பொன்னை மாதரைப் போக்கிட வேண்டுமே**
**புவியி னாசை நீக்கிட வேண்டுமே**
**கண்ணைப் போலறங் காத்திட வேண்டுமே**
**கமல பாதந் தொழுதிட வேண்டுமே**
**எண்ணம் யாவு மிறந்திட வேண்டுமே**
**என்கு ருபர! புங்கவ சிங்கமே!**

# ஏமாற்று ஈர்ப்புக்களைத் தவிர்ப்போம் என்றும் இயேசுவோடு வாழ்வோம்


இரண்டாம் ஜோன் போல் பாப்பாண்டவர் தமது மீட்பரின் பணி என்னும் திருமடலில் இருபத்தோராம் நூற்றாண்டின் மனிதர்கள் போதனைகளை விட சாதனைகளுக்கும் அறிவுரைகளை விட வாழ்க்கை அனுபவங்களுக்கும் அதிக அழுத்தம் கொடுக்கின்றார்கள் என்றார். இந்த மனநிலை எல்லாக் காலத்து மனிதர்களுக்கும் இருக்கிறது.

இயேசுவின் காலத்திலும் இயேசுவின் போதனை செயல்களும் அனைவரையும் வியப்பில் ஆழ்த்தி திகைப்புறசெய்தன. அவரதுபோதனை அதிகாரம் நிறைந்ததாக இருந்தது. அந்த அதிகாரத்தை இயேசுவின் செயல்களிலும் அவர்கள் கண்டனர். இன்று நற்செய்தியின் படி இயேசுவுக்கு தீய சக்திகளுக்குமிடையே ஒரு பெரிய போராட்டம் நிகழ்வதை நாம் காண்கின்றோம்.

தீய ஆவியை இயேசு துரத்தும் போது அந்த ஆவி யார் என்று சான்று பகர்கிறது. நீர் கடவுளுக்கு அர்ப்பணமானவர் என்கிறது. இயேசு கடவுளுக்கு அர்ப்பணமானவர் என்னும் உண்மையை இயேசுவின் சீடரே படிப்படியாகத்தான் அறிந்து கொண்டார்கள். ஆனால் தீய ஆவியோ இயேசுயார் என்பதை முத்தி அறிக்கையிட விரும்புகிறது. இவ்வாறு இயேசு பற்றிய தகவலைத் தீய ஆவி அறிக்கையிட்ட போது இயேசு அதை கடிந்து கொள்கிறார். வாயை மூடு. இவரை விட்டு வெளியே போ என்று இயேசு அதிகாரத்தோடு அதட்டி வெளியேற்றி னார். எனவேதான் மக்கள் திகைப்புற்று இது என்ன இது அதிகாரம் கொண்ட புதிய போதனையாக இருக்கிறதே என்று வியந்தனர். இதிலிருந்து இயேசு பற்றிய நம்பிக்கை அறிக்கை ஒரு தகவலாக இருக்கலாமே தவிர கடவுளின் திட்டத்தை ஏற்றுப் பணிகின்ற பண்பு தீய ஆவிக்கு இல்லை. மாறாக மனிதரின் உள்ளத்தில் மாற்றம் ஏற்பட வேண்டும் என்பதே இயேசுவின் பணியின் நோக்கம் மனி தர் உள்ளத்தில் மாற்றம் பெற்று கடவு ளின் வெளிபாட்டை ஏற்று அவர் அனுப்பிய அவர் தம் மகனில் நம்பிக்கை கொள்ள வேண்டும். இந்நோக்கம் எம் மில் நிறைவேற்றி இந்தப் பணியை செய்ய எமக்கு இன்று குருக்கள் ,ஆயர்கள் தரப்படுகின்றனர்.

## பரமபிதா காட்டிய பாதை

ஆனால் இந்த பங்கு குருவானவர் வேண்டாம். இந்த ஆயரும் வேண்டாம் இவர்கள் என்ன செய்கிறார்கள் இந்த மாதிரி கோஷம் இன்று பரவலாக கேட்கிறது. இந்த கோஷங்கள் ஒன்றும் புதிதல்ல. எப்போதும் இறைவாக்கினர் களை இறைவன் அனுப்ப தொடங்கினாரோ அப்பொழுதே இறை வார்த்தைகளை உரைப்பவர்கள் வேண்டாம் என்பது ஒன்றும் வரலாற்றில் புதிதல்ல. இன்றைய வாசக ஒளியில் நாம் சிந்திக்க வேண்டும். இறைவன் இறைவாக்கினர்களை ஏற் படுத்தி அவர்கள் வழியாக தன் எண்ணங்களைப் பகிர்ந்து கொண்டு தம் மக்களை வழிநடத்தி வந்தார். ஆகவே இன்றைய இறைவாக்கினர் களான ஆயர்களும் குருக்களும் இறைமக்களிலிருந்து இறைமக்களுக்காக இறை வார்த்தையை அறிவித்து இறைவழியில் அவர்களை அழைத்து செல்ல இறைவனால் அழைக்கப் பட்டுள்ளனர்.



இதற்காகவே பிறந்தேன். இதற்காகவே உலகிற்கு வந் தேன் என்று இயேசுவைப் போல சவால் விட்டுப் பேசினால் சிலுவையில் அறையும் சிலுவையில் அறையும் என்ற கோஷம் அதிகரிக்கலாம். எதுவானாலும் ஆண்டவரின் வாக்கு கிடைக்காத பஞ்சம் உருவாக இறைவாக்கினர்கள் காரணமாக இருக் கக் கூடாது.

இயேசுவின் போதனைகளையும் செயல்களையும் கூர்ந்து கவனிப்போம். அது எங்கள் வாழ்விற்கு வியப்பூட்டும். உங்கள் வாழ்க்கையில் அதிசயத்தையும் ஆச்சர்யத்தையும் எல்லோரும் வியக்கும் வண்ணம் உண்டாக்கும். எனவே ஏமாற்று ஈர்ப் புகளைத் தவிர்ப்போம். என்றும் இயேசுவோடு இருப்போம்.

**ம. பிரான்சிஸ்க்**
**கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்.**

# கிழக்கு பல்கலைக்கு துணைவேந்தராக தமிழரை நியமிப்பதற்கு நடவடிக்கை

## பிரதியமைச்சர் முரளிதரன் தெரிவிப்பு

இலங்கையில் கிழக்குப் பல்கலைக்கழகத்துக்கு புதிய துணைவேந்தர் நியமிக்கப்படும் வரை அங்கு தகுதிவாய்ந்த அதிகாரியாக பணியாற்ற பெரும்பான்மை இனத்தவர் ஒருவரை பதில் துணைவேந்தராக நியமிப்பதற்கு அரசு எடுத்திருந்த நடவடிக்கை கைவிடப்பட்டுள்ளதாக துணையமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழகத்திற்கு துணைவேந்தர் ஒருவரை நியமிப்பதற்காக தமிழர்கள் மூவரின் பெயர்கள் சிபார்சு செய்யப்பட்டு அவர்களில் ஒருவரை ஜனாதிபதி நியமிப்பதற்கு முன்னதாக குறுகியகால நிர்வாகத்துக்காக தகுதிவாய்ந்த அதிகாரியாக பணியில் இருந்துவரும் ஒருவர் அந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டமை தமிழ்மக்கள் மத்தியில் சந்தேகத்தை ஏற்படுத்துவதாக துணையமைச்சர் முரளிதரன் குறிப்பிட்டுள்ளார்.

இந்த சூழ்நிலையில் உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திசாநாயக்க அந்த அறிவித்தலை உடனடியாக இரத்து செய்து புதிய துணைவேந்தரை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக தம்மிடம் உறுதியளித்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

கிழக்குப் பல்கலைக்கழக துணைவேந்தரின் கடமைகளுக்காக தகுதிவாய்ந்த அதிகாரி என்ற பொறுப்பில் இருந்தவரையே நியமிப்பதாக தகவல் வெளியான நிலையில் அந்த நடவடிக்கையை கண்டித்து பல்கலைக்கழக மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

உயர்கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள விசேட வர்த்தமானி அறிவித்தலில் பல்கலைக்கழக குழு உறுப்பினரான பேராசிரியர் நிமால் ரஞ்சித் அத்தநாயக்க துணைவேந்தரின் கடமைகளை நிறைவேற்றும் பொறுப்பில் நியமிக்கப்பட்டுள்ளார் என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

ஏற்கனவே கடந்த மூன்று வருடங்களாக பதில் துணைவேந்தராக கலாநிதி கே. பிரேம்குமார் கடமையாற்றி வந்துள்ளார்.

துணைவேந்தரின் கடமைகளுக்கு குறித்த அதிகாரி நியமிக்கப்பட்டிருப்பது ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல எனக்கூறிய பல்கலைக்கழக மாணவர்கள் விரிவுரைப் பகிஷ்கரிப்பு போராட்டத்தில் ஈடுபடப்போவதாக அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# தைப்பூச இலட்சார்ச்சனை

(யாழ்ப்பாணம்)

மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி கோயில் தைப்பூச இலட்சார்ச்சனை வைபவம் இன்று ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலை 10 மணிமுதல் பக்தர்களுக்கான இலட்சார்ச்சனை பொது உபயமாக நடைபெறும் என மாவை ஆதீனம் அறிவித்துள்ளது.

இப்போது உபயத்தில் பங்குபற்ற விரும்பும் பக்தர்கள் முன்பதிவு செய்து சங்கல்பித்து ஷண்முகார்ச்சனையில் பங்குபற்றி இலட்சார்ச்சனை செய்யுமாறு மஹாராஜ ஸ்ரீ து.ஷ. இரத்தினசாமிக்குருக்கள் கேட்டுள்ளார். (அ)

# விபரத்தை சமர்ப்பிக்கவும்

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் கல்வி பயிலும் விசேட தேவையுடைய மாணவர்களின் விபரத்தினை எதிர்வரும் பெப்ரவரி மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் துணுக்காய் வலயக் கல்வி அலுவலகத்திற்கு அனுப்பிவைக்குமாறு துணுக்காய் வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி எல். மாலினி வெனிற்றன் அதிபர்களுக்கு அறிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில்,

இவ்வாண்டு விசேட தேவையுள்ள மாணவர்களுக்கான பல செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளதால் பாடசாலைக்கு அனுப்பப்பட்டுள்ள விபர படிவத்தை பூரணப்படுத்தி உடன் அனுப்பி வைக்குமாறு அவர் அறிவித்துள்ளார். (அ-3-15)

# கண்ணீர் அஞ்சலி

பிறப்பு
11
11
1936



இறப்பு
25
01
2012

## அமரர் திருமதி தேவசகாயம் மகேஸ்வரி

(மணியர்பதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில்)

தேவசகாயம் தேடிப் பெற்று தேர்ந்தெடுத்த தேவ ஈஸ்வரியே! தவமிருந்த சுப்பிரமணியம் தம்பதியர் தந்து உதவிய சுந்தரியே!
மணியர்பதிக்கு மணியாகத் திகழ்ந்த மாண்பான மகேஸ்வரியே! கணிப்பீட்டில் மணிக்குன்றே!
சாய்ந்ததேனோ! எமை விட்டு பாய்ந்ததேனோ!
ஆறு பிள்ளைகளையும் ஆற்றலுள்ளவர்களாய் ஆற்றுப்படுத்திய தாயே!
வேறு பிள்ளை என்றெண்ணாது தன்பிள்ளை போல் மருமக்களை வழிப்படுத்திய மாமியே!
பேறு பெற்ற பேரக்குஞ்சுகளின் பெருமை மிகு பாசப்பாட்டியே! ஊறேதும் தெரியாத உத்தமியே!
ஊரவரின் உறுதுணையின் உச்சமே! வாழ்வாங்கு வாழ்ந்தாய் வளத்தோடு வளர்ந்தாய்
ஆழ் துயரம் தந்தாய் ஆள்வானிடம் சேர்ந்தாய் சூழ் உலகை வென்றாய் சூழ நன்மை செய்தாய்
பாழான காலனவன் பாழ்படுத்திச் சென்றதேனோ? குணமாகி நின்றாய் குலக் கொழுந்தாக குவிந்தாய்.
மணம் வீசி மகிழ்ந்தாய் மனம் குளிரப் பிறர்க்கீந்தாய்
பதினாறும் பெற்றாய் மணியர் பதியிலே மிளிர்ந்தாய் யாரோடும் பகை கொள்ளாய் யமனானவன் பகை கொண்டதேனோ!
பிறக்கின்ற போதே இறக்கின்ற தேதி இருக்கின்ற போது
பறக்கின்ற போது பதறியழுவதால் கிடைக்கின்ற பயனேது
மறப்பதும் நினைப்பதும் கனதிமிகு களைப்பான போதும்- ஆன்மீக
உறவால் இறையடி உயர்ந்தாய் என நினைப்பதில் தவறேது
சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு
ஆழ்ந்த அனுதாபங்கள்
வீழிசை ஊர் அன்பன் (7391)

# வடமாகாண சிறந்த நூற்பரிசுத் தேர்வுப்போட்டி-2011

வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் வருடாவருடம் வடமாகாண எழுத்தாளர்களை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டு மேற்படி போட்டிகளை நடாத்தி வருகின்றது. இப்போட்டிக்கான நிபந்தனைகள் பின்வருமாறு,

01. நூல்கள் யாவும் 2011 ஜனவரி 01 ஆம் திகதிக்கும் 2011 டிசெம்பர் 31 ஆம் திகதிக்கும் இடையில் அச்சில் வெளிவந்தவையாகவும் முதல் பதிப்பாகவும் இருத்தல் வேண்டும்.
02. நூலாசிரியர் வடமாகாணத்தின் 05 மாவட்டங்களில் ஒன்றினை பிறப்பிடமாக கொண்டவராக இருத்தல்வேண்டும்.(யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி)
03. ஒருவர் எல்லாத்துறை போட்டிகளிலும் பங்குபற்றலாம். நூலின் ஆசிரியர் ஒருவராக மட்டும் இருத்தல் வேண்டும்.
04. நூலின் 04 பிரதிகள் திணைக்களத்திற்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.
05. பின்வரும் துறைகளில் போட்டிகள் இடம்பெறும். நூலாசிரியர்கள் தான் எந்தப்பிரிவில் தனது ஆக்கத்தை சேர்த்துக்கொள்ள விரும்புகின்றார் என்பதை கட்டாயம் குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.

| | |
|---|---|
| 1. உயர்கல்வி | 5. சிறுகதை |
| 2. ஆய்வும் விமர்சனமும் | 6. நாவல் |
| 3. பல்துறை | 7. நாடகம் |
| 4. கவிதை | 8. சிறுவர் இலக்கியம் |

06. நூல்கள் தமிழ்மொழி மூலம் ஆக்கப்பட்டிருப்பதுடன் நூலில் பதிப்பித்த ஆண்டும் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.
07. நூல்களை பதிவுத் தபாலின் மூலமாகவோ அல்லது வலயக் கல்விப் பணிமனை, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கோ நேரடியாக ஒப்படைக்கலாம்.
08. நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.
09. விண்ணப்ப முடிவுத்திகதி 2012.04.23 ஆகும். இத்திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக

பணிப்பாளர்,
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,
வலயக் கல்வித்திணைக்களம்,
யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். குறித்த திகதிக்கு பின்னர் கிடைக்கும் நூற்பிரதிகள் தொடர்பில் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படமாட்டாது.

போட்டிக்காக அனுப்பி வைக்கப்படும் நூல்கள் மீண்டும் கையளிக்கப்படமாட்டாது.

மேலதிக விபரங்களுக்கு 021-3202990 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

செயலாளர்,
கல்வி அமைச்சு,
வடமாகாணம். (சீ-5697)

# அடிலெய்டிலும் அடி வாங்கியது இந்தியா 298 ஓட்டங்கள் வித்தியாசத்தில் படுதோல்வி



இந்தியா–அவுஸ்திரேலியா மோதிய 4 ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் கிரிக்கெட் போட்டி அடிலெய்ட்டில் நடந்தது.

அவுஸ்திரேலியா முதல் இன்னிங்சில் 7 விக்கெட் இழப்புக்கு 604 ஓட்டங்களை குவித்து டிக்ளேர் செய்தது. இந்தியா முதல் இன்னிங்சில் 272 ஓட்டங்களுக்கு சுருண்டது. பலோ ஆன் கொடுக்காமல் அவுஸ்திரேலியா 2ஆவது இன்னிங்சை ஆடியது. அந்த அணி 5 விக்கெட் இழப்புக்கு 167 ஓட்டங்களை எடுத்து ஆட்டத்தை இடைநிறுத்தியது இதனால் இந்தியாவுக்கு 500 ஓட்டங்கள் இலக்காக நிர்ணயிக்கப்பட்டது.

2ஆவது இன்னிங்சை விளையாடிய இந்தியா நேற்றுமுன்தினம் 4ஆவது நாள் ஆட்ட நேர முடிவில் 6 விக்கெட் இழப்புக்கு 166 ஓட்டங்களை எடுத்து தோல்விப்பாதையில் இருந்தது.

நேற்று 5ஆவதும் மற்றும் கடைசி நாள் ஆட்டம் நடைபெற்றது. ஆட்டம் தொடங்கிய 1 மணி நேரத்தில் இந்திய அணி எஞ்சிய 4 விக்கெட்டுக்களையும் இழந்தது. மேலும் 35 ஓட்டங்களை எடுப்பதற்குள் இஷாந்த்சர்மா (2), விர்த்திமான் சகா (3), சகீர்கான் (15), உமேஷ் யாதவ் (1) ஆகியோர் ஆட்டம் இழந்தனர். இந்திய அணி 69.4 ஓவரில் 201 ஓட்டங்களுடன் சுருண்டது.

இதனால் 298 ஓட்டங்களால் இந்திய அணி படுதோல்வி அடைந்தது. ஷேவாக் அதிகபட்சமாக62ஓட்டங்களைஎடுத்தார். அவுஸ்திரேலிய தரப்பில் நாதன் லயன் 4 விக்கெட்டும் ஹாரிஸ் 3 விக்கெட்டும் கைப்பற்றினார்.

அவுஸ்திரேலிய பயணத்தில் இந்தியா தான் விளையாடிய 4 டெஸ்டிலும் நேற்று 0–4 என்ற கணக்கில் தொடரை இழந்தது. கடந்த ஆண்டு ஜுலை–ஆகஸ்ட் மாதம் இங்கிலாந்து சுற்றுப்பயணத்தில் இந்தியா தான் விளையாடிய 4 டெஸ்டிலும்தோற்று (0–4)வெள்ளைஅடிக்கப்பட்டது.

இந்தவெற்றியின் மூலம் அவுஸ்திரேலிய 4–0 என்ற கணக்கில் டெஸ்ட் தொடரை கைப்பற்றியது. அவுஸ்திரேலியாவிலும் இந்தியா முழுமையாக சரணடைந்தது. இரு அணிகளுக்கிடையேயான இரண்டு 20 ஓவர் போட்டியில் முதல் ஆட்டம் எதிர்வரும் முதலாம் திகதி புதன்கிழமை சிட்னியில் நடக்கும்.

இந்திய அணி இறுதியாக வெளிநாடுகளில் விளையாடிய 8 டெஸ்ட் போட்டிகளில் 8–0 விகிதத்தில் தோல்வியைத் தழுவியமை குறிப்பிடத்தக்கது. அதேவேளை, ஐ.சி.சி. டெஸ்ட் தரவரிசையிலும் இந்திய அணி 3 ஆவது இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளது.

## அவுஸ்திரேலிய ஓபன் விக்டோரியா அஸரென்கா சம்பியனானார்

அவுஸ்திரேலியன் ஓபன் டென்னிஸ் போட்டியின் மகளிர் ஒற்றையர் இறுதிப் போட்டியில் பெலாரஸ் வீராங்கனை விக்டோரியா அஸரென்கா சம்பியன் பட்டம் வென்றுள்ளார்.



அவுஸ்திரேலியாவில் நேற்று நடைபெற்ற மகளிர் ஒற்றையர் இறுதிப் போட்டியில் 3ஆம் தர்வரிசை வீராங்கனையான விக்டோரியா அஸரென்கா, ரஷ்யாவின் மரியா ஷரபோவாவை எதிர்கொண்டார்.

விக்டோரியா அஸரென்கா 4ஆம் தரவரிசை வீராங்கனையான ஷரபோவாவை 6–3, 6–0 என்ற நேர் செட்களில் மிக எளிதாக வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தை தட்டிச் சென்றுள்ளார். விக்டோரியா பெற்றுள்ள முதல் கிராண்ட்ஸ்லாம் பட்டம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

## மஹேலவை நியமித்ததை விமர்சிக்கிறார் அர்ஜுன

மஹேல ஜெயவர்த்தனவை மீண்டும் அணித்தலைவராக நியமித்தமை இலங்கை அணியின் தோல்விகளை முடிவுக்கு கொண்டு வருவதற்கான சரியான வழியல்ல எனவும் அர்ஜுன கூறியுள்ளார்.

இது தலைவலிக்கு தலையணையை மாற்றுவதைப் போலுள்ளது. மஹேல மேலும் இளமையாகப் போவதில்லை.

அவர் இப் பதவியை மீண்டும் ஏற்றுக் கொண்டமை ஆச்சரியமளிக்கிறது. இளையவர்களை தலைமைத்துவத்திற்காக நாம் வளர்க்க வேண்டும் எனவும், கிரிக்கெட்டில் அரசாங்கத்தின் தலையீடே நிதிப்பற்றாக் குறைக்கு வழி வகுத்தது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இலங்கை அணியின் பயிற்றுநராகவிருந்த ஜெவ் மார்ஷை அகௌரவமான முறையில் இலங்கை நீக்கியதாக இலங்கை அணியின் முன்னாள் தலைவர் அர்ஜுன ரணதுங்க விமர்சித்துள்ளார்.


அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த ஜெவ் மார்ஷ் கடந்த செப்ரெம்பர் மாதம் இலங்கை அணியின் பயிற்றுநராக இரு வருட கால ஒப்பந்தத்தில் நியமிக்கப்பட்டார்.

சுமார் நான்கு மாதங்களின் பின் இவ்வாரம் மார்ஷ் நீக்கப்பட்டு, தென்னாபிரிக்க அணியின் முன்னாள் பயிற்றுநர் கிரஹம் போர்ட் இலங்கை அணியின் புதிய பயிற்றுநராக நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இது குறித்து அர்ஜுன ரணதுங்க கூறுகையில், மார்ஷ் போன்ற தொழில் வாண்மையாளர் களை நீக்குவதில் ஸ்ரீலங்கா கிரிக்கெட் செயற்பட்ட விதம் அவமானகரமாகும்.

மார்ஷைநீக்கியமை இலங்கையின் தேசிய கிரிக்கெட் அணியுடன் இணைந்து செயற்படும் அல்லது செயற்படதிட்டமிட்டுள்ள தொழில்சார் உத்தியோகஸ்தர்களுக்கும் தவறான சமிக்ஞையை அளிக்கிறது. எதிர்காலத்தில் முன்னிலை பயிற்றுநர்கள், உடற்கூற்று மருத்துவர்கள் இலங்கையிடமிருந்து பதவிகளை ஏற்றுக்கொள்வதற்கு முன் இரு தடவை சிந்திப்பார்கள். ஸ்ரீலங்கா கிரிக்கெட் மிகத் தவறான முன்னுதாரணத்தை ஏற்படுத்தி விட்டது என்றார்.

# 72 ஓட்டங்களுடன் இங்கிலாந்து சுருண்டது; 2ஆவது டெஸ்ட்டிலும் பாகிஸ்தான் வெற்றி



இங்கிலாந்து அணியுடனான 2 ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தான்அணி 72 ஓட்டங்களால் வெற்றி ஈட்டியுள்ளது.

இப்போட்டியில் வெற்றிபெறுவதற்கு 145 ஓட்டங்கள் மாத்திரம் பெறவேண்டிய நிலையில் 2ஆவது இன்னிங்ஸை ஆரம்பித்த இங்கிலாந்து அணி 72 ஓட்டங்களுடன் சுருண் டது.

இதன் மூலம் மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரின் வெற்றியையும் பாகிஸ்தான் அணி தனதாக்கியுள்ளது.

அபுதாபியில் நடைபெற்ற இரண்டாவது போட்டியில் பாகிஸ்தான் அணிமுதல் இன்னிங்ஸில் 257 ஓட்டங்களையும் இங்கிலாந்து அணி முதல் இன்னிங்ஸில் 327 ஓட்டங்களையும் பெற்றன.

போட்டியின் மூன்றாவது நாளான நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பாகிஸ்தான் அணி 5 விக்கெட் இழப்புக்கு 104 ஓட்டங்களை பெற்றிருந்தது.

நான்காவது நாளான நேற்று அவ்வணி 214 ஓட்டங்களுடன் சகல விக்கெட்டுக்களையுமிழந்தது. இதில் அசார் அலி 69 ஓட்டங்களையும்அசாட்சபிக்43ஓட்டங்களையும்பெற்றனர்.

இங்கிலாந்து பந்துவீச்சாளர்களில், சுமார் 30 மாதங்களின் பின் டெஸ்ட்போட்டிகளுக்கு திரும்பிய மொண்டி பனேசர் 62 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

இங்கிலாந்து அணி வெற்றிபெறுவதற்கு 145 ஓட்டங்கள் எனும் இலகுவான இலக்கொன்றே நிர்ணயிக்கப்பட்டது. எனினும் 15 ஆவது ஓவரில் இங்கிலாந்து 21 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் அலிஸ்டயர் குக் 7 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அப்போதிருந்து இங்கிலாந்து விக்கெட்டுக்கள் மளமளவென சரியத்தொடங்கின.

ஆரம் பத்துடுப்பாட்ட வீரர் அன்ரூ ஸ்ரொரஸ் 32 ஓட்டங்களைப் பெற்றார். மற் பிரயர் 18 ஓட்டங்களைப்பெற்றார். வேறொவரும் 7 இற்கு மேற்பட்ட ஓட்டங்களைப்பெறவில்லை.

குக் 7 ஓட்டங்களையும் இயன் பெல் 3 ஓட்டங்களையும் பெற்றனர். கெவின் பீற்றர்சன், ஜொனதன் ட்ரொட், ஜேம்ஸ் அண்டர்சன் ஆகியோர் தலா ஒரு ஓட்டத்தைப் பெற்றனர். ஏனையவீரர்கள்ஒருஓட்டத்தையும்பெறவில்லை.

பாகிஸ்தான் பந்து வீச்சாளர்களில் அப்துர் ரஹ்மான் 24 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுக்களை வீழ்த்தினர். இது அவரின் சிறந்த டெஸ்ட் பந்துவீச்சு பெறுதியாகும். சயிட் அஜ்மல் 22 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் மொகமட் ஹபீஸ் 11 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டை கைப்பற்றினர். அப்துர் ரஹ்மான் இப் போட்டியில் சிறப்பாட்டக்காரராக தெரிவானார். இத்தொடரின் 3 ஆவது போட்டி எதிர் வரும் 3ஆம் திகதி டுபாயில் ஆரம்பமாகவுள்ளது.


**குத்தகைக்கு**

வவுனியா நெடுங்கேணியில் உள்ள நயினாமடு கிராமத்தில் 10 ஏக்கர் காணியில், இரண்டு ஏக்கர் காணி தோட்டம் செய்வதற்கு, தண்ணீர் இறைக்கும் வசதிகளுடன் குத்தகைக்கு உண்டு.

தொடர்பு கொள்ளவும்.

0775024412

**மணமகன் தேவை**

யாழ் இந்து 23 வயதுடைய பெண்ணிற்கு லக்கினத்தில் செவ்வாய் உத்தரட்டாதி கிரக பாவம் 50 உடைய பெண்ணிற்கு வெளிநாட்டுப் பிரஜாவுரிமையுடைய மணமகன் தேவை.

தொடர்பு:-

075 - 0469793

(7393)

**திருமண சேவை**

அவரவர் சாதி, சமயம், தகுதிக்கு ஏற்றபடி ஐம்பது வருடங்களாகத் திருமணங்களை நிறைவேற்றி உலக சாதனை படைத்த புகழ்மிகு "சர்வதேச புலவர் திருமண சேவையுடன்" தொடர்பு கொண்டால் நீங்கள் விரும்பியபடி உங்கள் திருமணங்களை நிறைவேற்றிக் கொள்ளலாம்.

**மதுரகானம்**

238, அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 2227147, 0713352215
57, விகாரை லேன், வெள்ளவத்தை, கொழும்பு -6.
தொலைபேசி: 0112363435

(7376) இயக்குநர் :- புலவர் செ.து. தெட்சணாமூர்த்தி

# அதிகாரப் பகிர்வை இலங்கை அரசு...

தமிழ் மக்கள் வாழும் வடக்குக் கிழக்குப் பகுதிகளுக்கு அரசியல், பொருளாதார அதிகாரங்களுக்கான உத்தரவாதம் தேவைப்படுகின்றது. இந்நிலையில் இவ் விவகாரம் தொடர்பில் இந்தியா அதிகளவுக்கு ஆதரவான பங்களிப்பை வழங்க வேண்டும்.

சுயநிர்வாகத்துடன் 13ஆவது திருத்தச் சட்டத்தின் ஊடாக அதிகாரப் பகிர்வுக்கான அழுத்தத்தை இந்தியா இலங்கை அரசாங்கத்துக்கு கொடுக்க வேண்டும். இந்த அழுத்தமானது மேலாதிக்கப் போக்கை கொண்டதோ அல்லது தலையீடு செய்யும் நடவடிக்கையோ அல்ல. ஆனால் தார்மீகமானதும் வழிகாட்டும் விதிமுறையுமாக இது உள்ளது என பேராசிரியர் அனுராதா எம்.செனோய் கூறியுள்ளார்.

இவ்விவகாரம் தொடர்பில் பேராசிரியர் அனுராதா எம்.செனோயின் கருத்துக்கள் நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில், இலங்கை கொடுப்பதை உறுதிப்படுத்துங்கள் என்ற தலைப்பில் பிரசுரமாகியுள்ளது. அதில் தெரிவிக்கப்பட்டுள்ள முக்கியமான விடயங்கள் இங்கே தொகுத்து தரப்படுகின்றது.

இந்திய வெளிவிவகார அமைச்சரின் இலங்கை விஜயமானது எப்போதுமே முக்கியமான விடயமாக இருந்து வருகிறது.

இந்த விஜயத்தை இலங்கையின் சகல சமூகங்களும் அரசியல் வட்டாரங்களும் மிகவிழிப்புடன் அவதானிக்கின்றன.

தமிழ் மக்களுக்கான அதிகாரப் பகிர்வு தொடர்பில் இந்திய வெளிவிவகார அமைச்சர் கிருஸ்ணாவின் வார்த்தைகள் குறித்தும் இந்தியாவின் சார்பாக கிருஸ்ணா தெரிவித்த உறுதிப்பாடுகள் தொடர்பாகவும் இந்தியா எவ்வளவுக்கு உறுதியாக பற்றிப்பிடிக்கும் என்பது குறித்து தமிழர்களும் ஜனநாயகவாதிகளும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றனர்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந் துரைகளை நடைமுறைப்படுத்தும் என்று கிருஷ்ணா நம்புகிறார். அத்துடன் அதிகாரப் பகிர்வை அடிப்படையாகக் கொண்ட இதய சுத்தியுடனான அரசியல் இணக்கப்பாட்டை இந்தியா எதிர்பார்ப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

அத்துடன் 13ஆவது திருத்தச் சட்ட மூலத்தை அடிப்படையாக கொண்ட அரசியல் தீர்வு காணும் நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு சாத்தியமான எந்த உதவியையும் இந்தியா வழங்கும் என்று அவர் உறுதியளித் துள்ளார்.

ஆனால் இலங்கை அரசாங்கம் சமாதானத்தை ஏற்படுத்தவும் நம்பிக்கையை கட்டியெழுப்பவும் அந்நியப்படுத்தப்பட்டுள்ள சமூகங்கள் மத்தியில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தவும் உண்மையாகவே செயற்படுகின்றதா?

அத்துடன் இடம்பெயர்ந்தோருக்கும் பாதிக்கப்பட்டோருக்கும் நீதி வழங்கவும் இந்த உள்நாட்டு யுத்தத்தில் காணாமல்போனோர் தொடர்பாகவும் கொழும்பு உண்மையாகவே செயற்படுகின்றதா?

சர்வதேச நெருக்கடி குழு, மனித உரிமைகள் கண்காணிப்பகம், ஐக்கிய நாடுகள் சபை அமைப்புகள், இலங்கையின் ஜனநாயக, மனித உரிமை அமைப்புகள் மற்றும் பலமேற்கத்தேய நாடுகள் இலங்கையின் சமாதான முயற்சிகள் தொடர்பில் திருப்தி கொண்டதாக இல்லை.

தமிழினப் படுகொலைக்கு பொறுப்பான குற்றவாளிகளை பொறுப்புக் கூறவைப்பதற்கான முயற்சிகள் எதையும் நல்லிணக்க ஆணைக்குழு மேற்கொள்ளவில்லை.

இச் சூழ்நிலையில் பாதிக்கப்பட்டோரோ, இறந்தவர்களோ அல்லது காணாமல் போனோரோ நீதி கூறமுடியுமா? அல்லது இழப்பீட்டையேனும் கேட்க முடியுமா?

மாகாண சபைகள் மற்றும் அதிகாரப் பகிர்வு விடயத்தில் 13-வது திருத்தத்தை பொறுத்தவரை 1988 இல் இது பிரகடனப்படுத்தப்பட்ட காலம் முதல் ஜனநாயகத்துக்கு எதிரான முறையில் ஆகக் குறைந்தளவு சிறுபான்மை இனங்களுக்கான உரிமைகளுடன் பெரும்பான்மையினர் ஆட்சியொன்றை ஜனநாயகத்துக்கு எதிரான கோட்பாட்டை கடைப்பிடிப்பது இயற்கையில் அத்தியாவசியமானதும் மரபு ரீதியானதும் என்ற அடிப்படையில் ஒற்றையாட்சி முறைமையையே இலங்கையின் ஆளும்வர்க்கம் விரும்புகிறது.

இத் திருத்தத்தை நடைமுறைப்படுத்து வதற்கு பல்வேறு அரசியல் கட்சிகள் எதிர்ப்புத் தெரிவித்திருந்தன. உள்நாட்டு யுத்தத்தின் நீண்டகால கட்டத்தின் 13ஆவது திருத்தம் நடைமுறைப்படுத்தப்பட்டிராத நிலை யில் இத் திருத்தத்தை தேசியத்துக்கு எதிரானது என்று கடுமையாக எதிர்க்கும் அணிகளைக் கொண் டுள்ள வெற்றிக்களிப்பில் இருக்கும் அரசாங்கம் இதனை நடைமுறைப் படுத்துமா?

இலங்கையின் உள்மட்ட அரசியலில் பாரிய வகிபாகத்தை இந்தியா செலுத்துவது தெளிவானதாகும். வேறுபட்ட பாரம்பரியங்கள் கலாசாரத்தை கொண்டிருந்தாலும் தென்னிந்தியாவுடன் இலங்கைத் தமிழர்கள் இன ரீதியான பிணைப்பைக் கொண்டவர்கள். ஸ்திரமானதும் ஜனநாயக ரீதியானதும் ஆட்புல ஒருமைப்பாட்டைக் கொண்டதுமான இலங்கையே இந்தியா விரும்புகிறது.

கடந்த கால மற்றும் எதிர்கால மோதல்கள் இந்தியாவுக்கு பாதிப்பையே ஏற்படுத்தின இந்திய அமைதி காக்கும் படையின் துன்பியலான பயனற்ற வரலாறுகளும் ராஜீவ் காந்தி படுகொலையும் வெளியுறவுக் கொள்கையின் மனப் போக்கின் வரலாற்றில் எழுதப்பட வேண்டியதாகும். ஆனால் தற்போதைய களநிலை யதார்த்தம் கவனத்திற்கு எடுக்கப்பட வேண்டிய விடயமாகும்.

ஜனநாயக ரீதியான சமஷ்டி முறையிலான மதச்சார்பற்ற தனது நிறுவ னங்களாலேயே பல்வேறு நெருக்கடிகளுக்கு தன்னால் தீர்வு காணக்கூடியதாக இருக்கின்றது என்பதே தனது வெற்றி என்பதை இலங்கைக்கு இந்தியா வெளிப் படுத்த வேண்டியுள்ளது.

இந்தியாவின் இந்தியாவின் அரசியலமைப்பில் சிறுபான்மையினரின் உரிமைகள் ஆழமான முறையில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இவற்றை வரையறுக்கப்பட்ட காலத்தில் நடைமுறைப்படுத்த வேண்டுமென ஏன் இலங்கையை இந்தியாவால் கேட்க முடியாது?

இப் பிராந்தியத்தில் சட்ட ரீதியாக தனது பலத்தை இந்தியா பயன் படுத்துமென உலகு எதிர்பார்க்கின்றது. அபிவிருத்தி உதவியாக பல மில்லியன்களை இந்தியாவால் கொடுக்க முடியுமாக இருந்தால் இலங்கை அரசாங்கத்தினால் ஜனநாயக ரீதியான உரிமைகள் தொடர்பான பதிலளிக்கும் கடப்பாட்டுக்கும் இது பொருந்த வேண்டும். குறைவானது எதுவும் ஏற்றுக்கொள்ள முடியாததாகும் என்றும் இக் கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-11)

## மண்டைதீவுக்கு விரைவில் மின்சாரம்

(மண்டைதீவு)

மண்டைதீவுக்கு விரைவில் மின்சாரம் வழங்கப்படவுள்ளதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

அமைச்சர் தலைமையில் நேற்று நடந்த விசேட கூட்டத்தில் இம் முடிபு எடுக்கப்பட்டது.

இக்கலந்துரையாடலில் வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ சந்திரசிறியும் கலந்து கொண்டார். (ந)

## ஜ.நா...

பேரவைக் கூட்டத்தொடர் நடைபெறும் போது வரும் பெப்ரவரி 27-ம் திகதி ஜெனிவாவில் உலகெங்கும் இருந்து தமிழர்களை ஒன்று திரட்டி பேரணி ஒன்றை நடத்த நாடு கடந்த தமிழீழ அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் மார்ச் 5-ம் நாள் மற்றொரு பேரணி சுவிட்சர்லாந்து தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ளதாகவும் அந்த ஊடகம் தெரிவித்துள்ளது. (ந)





ஆழிதனில் அமர்ந்திருந்து எங்கள் குறைகளை நீக்கிடும் அம்மா!
உன் திருகுடமுழுக்கு காட்சி தன்னை
எமக்கு காட்டிடம்மா!

**உமா வண்ணச்சோலை**
30, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
(C-5707)


## கண்ணீர் அஞ்சலி

### திருமதி மகேஸ்வரி தேவசகாயம்



கொக்குவில் மத்திய சனசமூக நிலையத்தின் வளர்ச்சிக்குப் பங்காற்றிய

**திரு. தே. நடனகுமார்**
[அவுஸ்திரேலியா]

**திரு. தே. ஜெயகுமார்**
[ஆசிரியர்]

ஆகியோரின் அன்புத் தாயார்

**திருமதி மகேஸ்வரி தேவசகாயம்**

அவர்களின் மறைவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியை செலுத்தி அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கொக்குவில் ம.ச.ச. நிலையமும்
விளையாட்டுக் கழகமும்.

(C-5708)

## இதய அஞ்சலி

### திருமதி மகேஸ்வரி தேவசகாயம்



மணியர்பதியில் ஒரு மாணிக்கம்
நேற்றுவரை எங்களோடு
நிஜமாக இருந்த நினைவுகள்....
ஒரு பெரும் ஆளுமை விருட்சம்
உறவுகளை அணைக்கும் அன்புக்கரம்
எங்கே? எங்கள் மகேஸ்வரித்தாய்!
காலனைத் தூது அனுப்ப
அக்கினிக்கு என்ன அவசரம்!
வெந்தணலின் வெப்பத்தை
எங்கள் மடியினில் கொட்டவோ— இப்படி
தாயே! மறக்க முடியவில்லை
நின் அன்பை, அரவணைப்பை, பாசத்தை
விக்கித்து விடை தந்தோம்
நீங்கள் நித்தமும் நெஞ்சிருத்தும்
மணியர்பதியான் திருவடியில்
பேரின்ப பெருவாழ்வு பெற
கரம் குவித்தோம் — சாந்தி பெறுக



எமது நண்பன் தே. ஜெயகுமார் அவர்களின் அன்புத் தாயார் திருமதி மகேஸ்வரி தேவசகாயம் அவர்களுக்கு எமது இதய அஞ்சலியை செலுத்துகின்றோம்.

- நண்பர்கள்

(C-5709)


**விற்பனைக்கு**

**JVC Audio Set** உடன் விற்பனைக்குண்டு. FM, 2 Tape, 3 CD Play பண்ணலாம்.
**தொடர்பு: 0777291638**



Audio Stand இலவசமாக வழங்கப்படும்.
(C-5710)

**ஆங்கில வகுப்புகள்**

பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், தொழில் புரிபவர்கள் மற்றும் மொழியை கற்க ஆர்வமுள்ள அனைவருக்குமான புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன. இலகுவாக பேச, வாசிக்க வெளிநாட்டில் கற்பித்த அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களினால் கற்பித்துக் கொடுக்கப்படும்.
[தனிப்பட்ட அனுமதிகளும் வழங்கப்படும்]
NORTH LEAD
328 A, Stanly Road, Jaffna. (ஆரியகுளம் சந்திக்கு அருகில்)
Tel: 222 4459, 0772533390, Fax: 222 4460

**அவுஸ்திரேலியா குடும்ப விசா**

அவுஸ்திரேலியா குடும்பத்துடன் 5 வருட கால விசாவிற்கு இலவச சட்ட ஆலோசனை
**இறுதித் தினம் 07.02.2012**
**திசைகாட்டி பிறைவேற் லிமிடெட்**
37, சிவகுருநாதர் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 0212219016
(சி-5686)

**Van & 49cc Motor Bike for Rental**

Van hire service for Jaffna to Colombo (up & down) with the reasonable rates. You can book over the Phone. Please Contact 077 0575454.
Local Service charge Kilo meter wise.
(7395)

**வீடு, காணி விற்பனைக்கு**

பருத்தித்துறை நகரசபைப் பகுதியில் 3ம் குறுக்கு தெரு, கடற்கரை றோட்டில் 1 1/2 பரப்புக் காணியில் உள்ள வீட்டுடன் அத்திபாரம் இடப்பட்டுள்ள பகுதியும் விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு:-
**075 0466512**
(சி-5706)

**UK - IELTS / TOEFL / B1 / B2**
**New Zealand - IELTS / TOEFL**
**Spain - IELTS தேவையில்லை**

ஆகிய நாடுகளுக்கு, March, April க்கான மாணவ அனுமதிகள் இப்போது வழங்கப்படுகின்றன.
"நாட்டின் பெயரை மட்டும் சொல்லுங்கள் அரசாங்க சட்ட விதிகளிற்கு அமைவாக எவ்வாறு அந்நாட்டிற்கு செல்ல வேண்டும் என்பதை நாம் சொல்கிறோம்"
Student visa / Settlement or Family visa / Dependent visa / Visit visa / Tourist visa / Business visa
மற்றும்
Refused visas - சகலவிதமான மறுக்கப்பட்ட விசாக்களும் இயலுமானவரை செய்து தரப்படும்
அனுபவமுள்ள ஆலோசகர்கள் மற்றும் சட்டத்தரணிகளால் ஆலோசனைகளும் வழிகாட்டல்களும் வழங்கப்படும்
மாணவர்கள் இயலுமானவரை பெற்றோருடன் வாருங்கள்
IELTS / B1 / B2 (Student visa வில் செல்ல இருப்பவர்களுக்கு).
A1 (UK க்கு Family visa வில் செல்ல இருப்பவர்களுக்கு) மற்றும் ஏனைய ஆங்கில வகுப்புகள் பிரபல ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றன.
முந்திடும் சேவை நோக்கமே...!

**Worldwide**
Educational Consultants



Mob : 077 8526178, 077 104 2558
Tel : 011 2361591
Email : world.v.wide2011@gmail.com
Skype:world.wide2011
Web: www.wweduco.com
No. 527, Galle Road, Wellawatte, Colombo -06


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.01.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.